# தினபூமி

thinaboomi.com

பூமி: 32 சுற்று: 17 மார்கழி 28

RNI Regn. No.61494/94 MA / 36 / 2015-2017

மதுரை, திங்கள், ஜனவரி 12, 2026

சென்னை • மதுரை • திருச்சி • கோவை • நெல்லை • சேலம் • வேலூர் • புதுச்சேரி

பக்கம் 8 ₹ 3.00




**ஈரானில் போராட்டக்காரர்களுக்கு உதவ அமெரிக்கா தயாராக உள்ளது: அதிபர் ட்ரம்ப் அறிவிப்பால் பரபரப்பு**


....2-ம் பக்கம்

**இந்தியாவில் எப்போதும் ஒரு இந்துவே பிரதமராக இருப்பார்: அசாம் முதல்வர் ஹிமாந்தா பேச்சு**

...3-ம் பக்கம்

**நியூ சி.,க்கு எதிரான தொடர்: கீப்பர் ரிஷப் பந்த் நீக்கம்; துருவ் ஜூரெல் சேர்ப்பு**

....6-ம் பக்கம்





துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று, சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் - 2026 விழாவில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறையும் தமிழ் இணையக் கல்விக்கழகமும் இணைந்து வெளிநாடு மற்றும் வெளிமாநிலங்களைச் சேர்ந்த இளஞ்சிறார், சிறார், இளையோருக்கு இணையவழியில் நடத்திய பேச்சு, ஒப்புவித்தல், மாறுவேடம், கதை சொல்லுதல் ஆகியப் போட்டிகளில் வெற்றிபெற்ற 15 மாணவர்களுக்கு சான்றிதழ் மற்றும் பரிசுத் தொகை காசோலைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் துரைமுருகன், தா.மோ. அன்பரசன், சா.மு.நாசர், பாராளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, கவிஞர் சல்மா, தமிழ்நாடு அயலகத் தமிழர் நல வாரியத் தலைவர் உள்பட வெளிநாடு வாழ் தமிழர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

## ஆட்சி அதிகாரத்தில் பங்கு கேட்பது காங்., கட்சியினரின் உரிமை, ஆனால்

# தமிழகத்தில் கூட்டணி ஆட்சி எப்பொழுதுமே கிடையாது

### முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதியாக உள்ளதாக அமைச்சர் தகவல்

சென்னை, ஜன. 12-

**காங்கிரஸ் கட்சியினர் கூட்டணியில் பங்கு கேட்பது அவர்களது உரிமை என்று தெரிவித்துள்ள அமைச்சர் ஐ.பெரியசாமி, தமிழ்நாட்டில் ஆட்சி அதிகாரத்தில் பங்கு என்பது எப்பொழுதும் கிடையாது என்றும் கூட்டணி ஆட்சி இல்லை என்பதில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதியாக இருக்கிறார் என்றும் திண்டுக்கல்லில் நடந்த சமத்துவ பொங்கல் விழாவில் அவர் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.**



**முன்னோடி திட்டம்....**

தமிழ்நாடு அரசு பெண்களின் நலனுக்காக பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. அதில் முக்கியமானது மகளிர் உரிமை தொகை திட்டம். நாட்டிற்கே முன்னோடி திட்டமாக மகளிர் உரிமை தொகை திட்டம் இருக்கிறது. தமிழ்நாட்டை தொடர்ந்து பல மாநிலங்களிலும் இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இதற்கிடையே சட்டமன்ற தேர்தல் வர இருப்பதால் எப்போது வேண்டுமானாலும் அரசு மகளிர் உரிமை தொகையை உயர்த்தி வழங்கும் அறிவிப்பை வெளியிடலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

**சமத்துவ பொங்கல்...**

திண்டுக்கல் மாநகராட்சி 44-வது வார்டில் தி.மு.க சார்பில் சமத்துவ பொங்கல் விழா நடைபெற்றது. இதில் இந்து, முஸ்லிம், கிறிஸ்தவர்கள் என மும்மதத்தைச் சார்ந்த பெண்கள் உட்பட 50க்கும் மேற்பட்டோர் சமத்துவ பொங்கல் வைத்தனர் இந்நிகழ்ச்சியில் தமிழக ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி கலந்து கொண்டார். அதன்பின் செய்தியாளர்களிடம் பேசும் போது, பெண்களுக்கு இனிப்பான செய்தி வரும் என அமைச்சர் ஐ பெரியசாமி கூறியிருப்பது தற்போது தமிழ்நாடு முழுவதும் பேசு பொருளாக மாறி இருக்கிறது.

**உரிமைத்தொகை...**

அவர் தெரிவித்ததாவது., காங்கிரஸ் கட்சியினர் கூட்டணியில் பங்கு கேட்பது அவர்களது உரிமை, தி.மு.க.வை பொறுத்தவரை ஆட்சி அதிகாரத்தில் பங்கு கொடுப்பது என்பது எப்பொழுதும் கிடையாது, இதில் தமிழக முதல்வர் உறுதியாக உள்ளார். தமிழ்நாடு அரசு மகளிர் உரிமைத்தொகை திட்டத்தை கடந்த டிசம்பரில் தான் விரிவாக்கம் செய்தது. தற்போது

(கடைசி பக்கம் பார்க்க)

## புதிய சீர்திருத்தங்களால் பாதிப்பு: இலங்கையில் வாழ்ந்து வரும்

# தமிழர்களின் உரிமைகளை பாதுகாக்க உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்

### பிரதமர் மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்

சென்னை, ஜன. 12-

**இலங்கையில் தற்போது நடைபெற்றுவரும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களால் இலங்கைத் தமிழ்ச் சமூகத்திற்கு ஏற்படும் கடுமையான பாதிப்புகளை களைந்திட வேண்டுமென்றும், தமிழ் மக்களின் குறைகளை நிவர்த்தி செய்யும் வகையிலான ஒரு அரசியலமைப்புச் செயல்முறையினைக் கொண்டுவருவதற்கு, இந்திய அரசு இலங்கை அதிகாரிகளுடன் உயர் மட்ட அளவில் தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று கோரி, பிரதமர் நரேந்திர மோடிக்கு, தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.**

**தமிழ்நாடு முன்னணியில்...**



பிரதம் மோடிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் எழுதிய அக்கடிதத்தில், இலங்கையில் உள்ள தமிழ்ச் சமூகத்தின் நலன் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான ஆழ்ந்த கவலைக்குரிய ஒரு விஷயம் குறித்து இந்தியப் பிரதமர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவதாக அவர் தெரிவித்துள்ளார். ஆழமான வரலாற்று, கலாச்சார மற்றும் உணர்வுப் பூர்வமான பிணைப்புகளின் காரணமாக, இலங்கையில் உள்ள தமிழர்களின் உரிமைகளையும், எண்ணங்களையும் நிலைநிறுத்துவதில் தமிழ்நாடு முன்னணியில் இருந்து வருகிறது என்றும், தமிழ்நாட்டின் முதல்வர் என்ற முறையில், இந்தியா மற்றும் இலங்கையில் உள்ள மரியாதைக்குரிய தமிழ்த் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளின் அடிப்படையில், இலங்கையில் முன்மொழியப்பட்ட புதிய அரசியலமைப்பு தொடர்பான பிரச்சினை குறித்து இந்தியப் பிரதமர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுவருவது தனது கடமை என்றும் அவர் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

**கடுமையான பாதிப்புகள்...**

இலங்கையில் தற்போது நடைபெற்றுவரும் அரசியலமைப்புச் சீர்திருத்தங்களால் இலங்கைத் தமிழ்ச்சமூகத்திற்கு ஏற்படும் கடுமையான பாதிப்புகளை எடுத்துரைக்கும் விரிவான கோரிக்கைகளை தாம் பெற்றுள்ளதாக முதல்வர் தனது கடிதத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளார். இலங்கைத் தமிழர்கள் 77 ஆண்டுகளுக்கும் மேலாக, திட்டமிட்ட பாகுபாடு, வன்முறை மற்றும் அவர்களின் உண்மையான உரிமைகளைக் கட்டுப்படுத்தும் முயற்சிகளைச் சகித்து வந்துள்ளனர் என்றும், பலர், இதனைதங்கள் சமூகத்திற்கு எதிரான இனப்படுகொலை என்று விவரிக்கும் ஒரு நிலைக்கு வழிவகுத்துள்ளது என்றும் முதல்வர் வருத்தத்தோடு சுட்டிக்காட்டியுள்ளார்.

**வழிவகுத்து வருகிறது**

சுதந்திரத்திற்குப் பிந்தைய இலங்கையின் அரசியலமைப்புகள் (1947, 1972, மற்றும் 1978 ஆம் ஆண்டுகளின் அரசியலமைப்புகள்) அனைத்தும் ஒரு ஒற்றையாட்சி அரசுக் கட்டமைப்பில் வேரூன்றியிருந்தன என்றும், இது திட்டமிட்ட இன வன்முறை, கட்டமைப்பு ரீதியான

(கடைசி பக்கம் பார்க்க)

## 17 வணிக செயற்கைக்கோள்களுடன்

# பி.எஸ்.எல்.வி. சி-62 ராக்கெட் இன்று விண்ணில் பாய்கிறது

### 12 மணி நேர கவுண்ட்டவுன் தொடக்கம்

சென்னை, ஜன.1 2-

**மத்திய அரசின் பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு அமைப்பின் (டி.ஆர்.டி.ஓ.) சேவைக்காக இ.ஓ.எஸ். என்-1 என்ற செயற்கைக்கோள் வடிவமைக்கப்பட்டுள்ளது. முதன்மை செயற்கைக்கோளான இதனுடன் ஸ்பானிஷ் நிறுவனத்தால் உருவாக்கப்பட்ட 'கெஸ்ட்ரல் இனிஷியல் டெமான்ஸ்ட்ரேட்டர்' என்ற ஒரு சிறிய சோதனை கருவியும் பொருத்தப்பட்டுள்ளது.**

இதனுடன், இந்தியா, மொரீஷியஸ், லக்சம்பர்க், ஐக்கிய அரபு அமீரகம், சிங்கப்பூர், ஐரோப்பா மற்றும் அமெரிக்கா முழுவதும் உள்ள நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி நிறுவனங்களின் 17 வணிக செயற்கைக்கோள்களும் இதனுடன் விண்ணுக்கு ஏவப்படுகிறது.

இந்த செயற்கைக்கோள்கள் பி.எஸ்.எல்.வி. சி-62 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து இன்று (திங்கட்கிழமை) காலை 10.17 மணிக்கு விண்ணில் ஏவப்படுகிறது. புத்தாண்டில் இஸ்ரோ ஏவும் முதல் ராக்கெட்டாகும். இந்த பி.எஸ்.எல்.வி. சி-62 ராக்கெட்டுக்கான இறுதிக்கட்டப்பணியான கவுண்ட்டவுன் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.17 மணிக்கு தொடங்கியது. ராக்கெட் மற்றும் செயற்கைக்கோள்களின் ஒருங்கிணைப்புப் பணிகள் நிறைவடைந்து விட்டன. ஏவுதலுக்கு முந்தைய சோதனைகள் நடைபெற்று வருகின்றன. ராக்கெட் மற்றும் செயற்கைக்கோளின் செயல்பாடுகளை இஸ்ரோ விஞ்ஞானிகள் தீவிரமாக கண்காணித்து வருகின்றனர்.

இந்த ஆண்டில் முதல் முறையாக 12-ம் தேதி (இன்று) இஸ்ரோ ராக்கெட்டை விண்ணில் செலுத்த உள்ளோம். இதன் மூலம் இது வரை பல்வேறு வெளிநாடுகளின் 442 செயற்கைகோள்களை விண்ணில் செலுத்திய பெருமை இஸ்ரோவுக்கு கிடைத்துள்ளது என்று இஸ்ரோ தலைவர் நாராயணன் கூறி இருந்தது குறிப்பிடத்தக்கது.

# யாரையும் பிரித்து பார்க்காத ஒரே மொழி 'தமிழ்' மொழி

### துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பெருமிதம்

சென்னை, ஜன. 12-

**தமிழ்மொழி என்பது நம் அனைவரையும் இணைக்க கூடிய ஒரு மொழி. தமிழ் யாரையும் வேறுபடுத்தாது, பிரித்துப் பார்க்காது. யாருக்கும் எந்த பேதத்தையும் காட்டாத மொழிதான் நம் தாய்மொழி தமிழ்மொழி என்று சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் 'அயலக தமிழர் தினம்' கண்காட்சியை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பொதுமக்கள் பார்வைக்கு தொடங்கி வைத்து பேசினார்.**

சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் 'அயலக தமிழர் தினம்' கண்காட்சியை துவக்கி வைத்து துணை முதல்வர் உதயநிதி உதயநிதி ஸ்டாலின் பேசியதாவது:-

எப்போதுமே தூரம் அதிகமாகும்போது, உறவும் பாசமும் இன்னும் அதிக மாகும் என்று சொல்வார்கள். அந்த வகையில் இன்று உலகின் பல நாடுகளில் இருந்து வாழுகின்ற நீங்கள் தமிழ் உணர்வோடு தமிழ் பற்றோடு தமிழ்நாட்டின் மீது இருக்க கூடிய பாசத் தோடு இந்த நிகழ்ச்சியில் கலந்து கொள்ள நீங்கள் அத்தனை பேரும் வருகை தந்துள்ளீர்கள். வெளி நாடுகளில் நீங்கள் பல விதமான விழாக்களை பார்த்திருப்பீர்கள். கொண் டாடியிருப்பீர்கள். ஆனால் இது எதுவும் நம்முடைய தமிழர் திருநாள் பொங்கலுக்கு ஈடாகாது.

ஏனென்றால் பொங்கல் என்பது நம்முடைய தமிழ் பண்பாட்டோடு தமிழ் உணர்வோடு கொண்டாடப்படுகின்ற ஒரு விழா. அப்படிப்பட்ட பொங்கல் பண்டிகை நேரத்தில் அயலக தமிழக உறவுகள் உங்கள் அத்தனை பேரையும் சந்திப்பது என்னுடைய சொந்த சகோதரர்கள், சகோதரிகள் என் குடும்பத்தினரை சந்திக்கின்ற அந்த மகிழ்ச்சியை எனக்கு தருகின்றது.

அயலகத் தமிழர் தினத்தை நம் திராவிட மாடல் அரசு ஏற்பாட்டில் கடந்த 5 ஆண்டுகளாக சிறப்பாக கொண்டாடி வருகிறோம். இதில் நான் தவறாமல் கலந்து வருகிறேன். இந்த நிகழ்ச்சியின் இந்த ஆண்டுக்கான தலைப்பு 'தமிழால் இணைவோம்... தரணியில் உயர்வோம்...' என்ற மிகச் சிறப்பான தலைப்பு வைக்கப்பட்டதற்கு வாழ்த்துக்கள்.

தமிழ்மொழி என்பது நம் அனைவரையும் இணைக்க கூடிய ஒரு மொழி. தமிழ் யாரையும் வேறுபடுத்தாது, பிரித்துப்பார்க்காது. யாருக்கும் எந்த பேதத்தையும் காட்டாத மொழிதான் நம் தாய் மொழி தமிழ்மொழி. தமிழ் என்ற அடையாளத்துக்கு முன்னாடி வேறு எந்த அடையாளமும் போட்டி போட முடியாது. ஜாதி, மதம், பணக்காரன், ஏழை, முதலாளி, தொழிலாளி, ஆண், பெண் என்று எல்லா பேதங்களையும் தாண்டிதான் நம் அத்தனை பேரையும் இணைத்திருப்பது நம்முடைய தாய்மொழி, தமிழ்மொழி.

அப்படி நாம் அனைவரும் தமிழால் இணைந்தால் தான் இன்றைக்கு தரணியை வென்று கொண்டிருக்கிறோம். ஒன்றாக இணையாத எந்த இனமும், உலகில் உயர்ந்த வரலாறே கிடையாது. அந்த வகையில் உலகெங்கும் வாழக்கூடிய தமிழர்களை ஒருங்கிணைக்கக் கூடிய அந்த பணி என்பது மிக மிக முக்கியமானது. இந்த நேரத்தில் மிக அவசியமானது.

அதைவிட முக்கியம் அவர்களது நலன்களை பாதுகாக்கின்ற இந்த பணி என்பது மிக முக்கியம். இதற்கு முன்பு

(கடைசி பக்கம் பார்க்க)

## கடலூர், அரியலூர் உள்ளிட்ட

# 7 மாவட்டங்களில் இன்று கனமழை

சென்னை, ஜன. 12-

**தமிழகத்தில் கடலூர், அரியலூர் உள்ளிட்ட இன்று 7 மாவட்டங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.**

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில், நேற்று முன்தினம் (10-01-2026) வடகிழக்கு இலங்கை கடலோரப்பகுதிகளுக்கு அப்பால் உள்ள தென்மேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம், மேற்கு- வடமேற்கு திசையில் நகர்ந்து, வடகிழக்கு இலங்கை கடலோரப்பகுதிகளில் முல்லைத்தீவிற்கு (இலங்கை) அருகில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக கரையை கடந்தது.


இது மேலும், மேற்கு திசையில் நகர்ந்து வலுவிழந்து, வடக்கு இலங்கை மற்றும் அதனை ஒட்டிய மன்னார் வளைகுடா பகுதிகளில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக நிலவியது. இது நேற்று காலை (11-01-2026) 05. 30 மணி அளவில் மேலும், வலுவிழந்து தெற்கு கடலோர தமிழகம் மற்றும் அதனை ஒட்டிய மன்னார் வளைகுடா பகுதிகளில் காற்றழுத்த தாழ்வு பகுதியாக நிலவியது. இது 08. 30 மணி அளவில் மேலும், வலுவிழந்து தெற்கு கடலோர தமிழகம் மற்றும் அதனை ஒட்டிய மன்னார் வளைகுடா பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல கீழடுக்கு சுழற்சியாக நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை இன்று பெய்யக்கூடும். செங்கல்பட்டு, விழுப்புரம் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது. அதே சமயம் தமிழகத்தில் இன்று (திங்கள்கிழமை) ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். கடலூர், அரியலூர், மயிலாடுதுறை, தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம், புதுக்கோட்டை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் மற்றும் காரைக்கால் பகுதிகளில் கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் வானம் இன்று பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். அதிகபட்ச வெப்பநிலை 25 டிகிரி செல்சியசை ஒட்டியும், குறைந்தபட்ச வெப்பநிலை 22-23 டிகிரி செல்சியஸை ஒட்டியும் இருக்கக்கூடும். இன்று (திங்கள்கிழமை) வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில பகுதிகளில் லேசானது முதல் மிதமான செல்சியஸை ஒட்டியும், குறைந்தபட்ச இருக்கக்கூடும்.

இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| -604.72 | -193.55 |
| பாயிண்ட் 83,576.24 | பாயிண்ட் 25,683.30 |



**தங்கம்**
1 சவரன் ₹1,03,200
1 கிராம் ₹12,900



**வெள்ளி**
1 கிலோ ₹275,000
1 கிராம் ₹275.00

**டாலர்** ₹90.27

**பெட்ரோல்** ₹100.75
**டீசல்** ₹92.34



# ஈரானில் போராட்டக்காரர்களுக்கு உதவ அமெரிக்கா தயாராக உள்ளது

## அதிபர் ட்ரம்ப் அறிவிப்பால் பரபரப்பு

**தெக்ரான், ஜன. 12-**

ஈரானில் அரசுக்கு எதிராக போராட்டம் நடந்து வருகிறது. பொருளாதார நெருக்கடி மற்றும் விலைவாசி உயர்வு ஆகியவற்றால் மக்களின் போராட்டங்கள் 2-வது வாரத்தை எட்டி உள்ளது. ஈரான் முழுவதும் போராட்டம் பரவி தீவிரமடைந்துள்ளது. சாலைகளில் ஆயிரகணக்கானோர் திரண்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு அரசுக்கு எதிராக கோஷங்களை எழுப்புகிறார்கள்.

போராட்டத்தை ஒடுக்க பாதுகாப்பு படையினர் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். இதில் ஏற்பட்ட மோதல்களால் வன்முறை வெடித்தது. வாகனங்கள், அரசு கட்டிடங்களுக்கு தீ வைக்கப்பட்டது. இதனால் ஈரானில் செல்போன் மற்றும் இணைய சேவைகள் முடக்கப்பட்டுள்ளது. ஆனாலும் போராட்டம் கட்டுக்குள் வராமல் தீவிரமடைந்து உள்ளது.

இந்தநிலையில் ஈரானில் போராட்டம்-வன்முறையில் பலியானவர்கள் எண்ணிக்கை 116-ஆக உயர்ந்துள்ளது என்று தகவல் வெளியாகி உள்ளது. 2600-க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர். இதற்கிடையே தலைநகர் தெக்ரானில் போராட்டங்களில் காயம் அடைந்தவர்களால் மருத்துவமனைகள் நிரம்பி வழிகிறது. முதலுதவி செய்வதற்குக்கூட நேரம் இல்லை என்ற மருத்துவப் பணியாளர்கள் தெரிவித்தனர். ரஷ்டில் உள்ள பூர்சினா மருத்துவமனைக்கு ஒரே இரவில் 70 பேரின் உடல்கள் கொண்டு



வரப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே போராட்டக்காரர்களுக்கு ஈரான் அரசு எச்சரிக்கை விடுத்து உள்ளது. இதுதொடர்பாக ஈரானின் அட்டர்னி ஜெனரல் முகமது மொவஹேதி ஆசாத் கூறும்போது, போராட்டத்தில் பங்கேற்கும் எவரும் கடவுளின் எதிரி என்று கருதப்படுவார்கள். அது மரண தண்டனைக்குரிய குற்றம் என்று தெரிவித்து உள்ளார்.

மேலும் ஈரான் அரசு தொலைக்காட்சியில் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. அதில் கலவரக்காரர்களுக்கு உதவியவர்கள் கூட இந்த குற்றச்சாட்டை எதிர்கொள்ள நேரிடும்.

வக்கீல்கள் கவனமாகவும் தாமதமின்றியும் குற்றப்பத்திரிகைகளை தாக்கல் செய்து, தேசத் துரோகம் மற்றும் பாதுகாப்பின்மையை உருவாக்கி, நாட்டின் மீது வெளிநாட்டு ஆதிக்கத்தை நாடுபவர்களுக்கு எதிராக விசாரணையை தீவிரப்படுத்த வேண்டும்.

நடவடிக்கைகள் எந்த வித மென்மை, கருணை அல்லது சலுகையும் இன்றி மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டு உள்ளது. ஈரானில் போராட்டங்களை அமெரிக்கா தூண்டிவிடுவதாக ஈரான் உச்சதலைவர் அயதுல்லா அலி கமேனி குற்றம்சாட்டி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கி சூடு நடத்தினால் ஈரான் விவகாரத்தில் தலையிடுவோம் என்றும் ஈரான் மக்களுக்கு துணை நிற்போம் என்றும் அமெரிக்கா தெரிவித்து இருந்தது. இந்த நிலையில் ஈரானில் போராட்டக்காரர்களுக்கு உதவ தயார் என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் அறிவித்து உள்ளார்.

இதுதொடர்பாக அவர் தனது ட்ரூத் சமூக வலைதள பக்கத்தில் கூறியதாவது:- ஈரான் இதற்கு முன் எப்போதும் இல்லாத வகையில் சுதந்திரத்தை நோக்கியுள்ளது. அதற்கு அமெரிக்கா உதவத் தயாராக உள்ளது என்று தெரிவித்து உள்ளார். மேலும், ஈரானுக்கு அமெரிக்க வெளியுறவுத்துறை விடுத்த எச்சரிக்கையில், அதிபர் ட்ரம்ப்புடன் விளையாட வேண்டாம். அவர் ஒன்றைச் செய்வேன் என்று சொன்னால், அதை அவர் நிச்சயமாகச் செய்வார் என்று தெரிவித்து உள்ளது. இதற்கிடையே ஈரான் மீது தாக்குதல் நடத்துவதற்கான ராணுவத் திட்டங்கள் ட்ரம்ப்பிடம் வழங்கப்பட்டதாகவும், ஆனால் அவர் இன்னும் இறுதி முடிவு எடுக்கவில்லை என்றும் அமெரிக்க ஊடகங்கள் செய்தி வெளியிட்டு உள்ளன.

### இந்து விவசாயி சுட்டுக்கொலை:

# பாகிஸ்தானில் 2 பேர் கைது

**லாகூர், ஜன. 12-**

பாகிஸ்தானில் நில விவகாரத்தில் இந்து விவசாயி சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தில் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் உள்ள தல்ஹர் கிராமத்தில், நிஜாமானிக்கு சொந்தமான நிலத்தில் குடிசை அமைத்ததாகக் கூறி, கைலாஷ் கோஹ்லி(23) மீது கடந்த 4ஆம் தேதி துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. பின்னர் குற்றவாளி சம்பவ இடத்திலிருந்து தப்பியோடியதால் வழக்கில் சிறப்பு குழு அமைக்கப்பட்டது.

இந்த நிலையில் சனிக்கிழமை இரவு ஹைதராபாத்தின் ஃபூசௌக் பகுதியில் நில உரிமையாளர் சர்ஃப ராஸ் நிஸாமானி மற்றும் அவருக்கு உதவியாக இருந்த ஜஃபருல்லா கான் ஆகியோரை போலீஸார் கைது செய்தனர். தனது நிலத்தில் குடிசை அமைக்க கோஹ்லி முயன்றதை விரும்பாத நிஸாமனி அவரை சுட்டுக் கொன்றதாகக் கூறப்படுகிறது. குண்டு காயங்களால் கோஹ்லி மருத்துவமனையில் பலியானார்.

இந்த சம்பவம் தொடர்பாக கோஹ்லியின் சகோதரர் பூன் குமார் கோஹ்லி புகார் அளித்ததன் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்றவாளிகளை சிறப்பு குழு அமைத்து போலீஸார் தேடி வந்தனர். தற்போது இச்சம்பவம் தொடர்பாக 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். முன்னதாக பாகிஸ்தானில் இந்து விவசாயி சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவத்தில் நீதி கோரி மனித உரிமைக் குழுக்கள் போராட்டம் நடத்தி வந்தது குறிப்பிடத்தக்கது.

தினபூமியில்
விளம்பரம்
செய்து பயன்
பெறுங்கள்

### அரசுக்கு எதிராக வலுக்கும் போராட்டம்:

# ஈரானில் உயிரிழப்பு 116 ஆனது; இணைய சேவைகள் முடக்கம்

**தெஹ்ரான், ஜன. 12-**

ஈரான் நாட்டில் உச்சபட்ச தலைவராக அயோதுல்லா அலி காமேனி இருந்து வருகிறார். அந்நாட்டில் அரசுக்கு எதிரான மக்களின் போராட்டம் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 28-ந்தேதி தொடங்கியது. அதிகரித்து வரும் பணவீக்கம், அத்தியாவசிய பொருட்களின் விலைவாசி உயர்வு, பொருளாதார தேக்க நிலை ஆகியவற்றால் மக்களிடையே கொந்தளிப்பு ஏற்பட்டு உள்ளது.

இதனால், அரசுக்கு எதிரான மக்கள் போராட்டம் தீவிரமடைந்து உள்ளது. மாகாணங்கள், நகரங்கள் என பல்வேறு பகுதிகளிலும் மக்கள் தெருக்களில் இறங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். 2 வாரங்களாக நடந்து வரும் இந்த ஆர்ப்பாட்டம் நேற்றும் நீடிக்கிறது. அவர்களை ஒடுக்கவும், ஆர்ப்பாட்டக்காரர்களை அடக்கும் முயற்சியாகவும் பாதுகாப்பு படையினரை அரசு இறக்கி விட்டு உள்ளது. இதன்படி போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் கைது செய்யப்பட்டு வருகின்றனர். ஈரானின் 31 மாகாணங்களில் 100 நகரங்களில் போராட்டம் தீவிரமடைந்து உள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இணையதள சேவை முடக்கி வைக்கப்பட்டு உள்ளது. இதனால், ஈரானில் நடப்பது என்ன என்பது பற்றி வெளியுலகிற்கு சரிவர தெரியாத வகையில் செய்திகளும் முடங்கி உள்ளன.

இதனால், தங்களுடைய நண்பர்கள், உறவினர்களுடன் மக்கள் தொடர்பு கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது. சில அரசு ஊடங்கள் மட்டுமே செயல்பட அனுமதி அளிக்கப்பட்டு உள்ளது. எனினும், ஈரானில் அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் 116 பேர் பலியாகி இருக்க கூடும் என அமெரிக்காவை அடிப்படையாக கொண்ட மனித உரிமைகள் அமைப்பு ஒன்று தெரிவித்து உள்ளது.

# பஞ்சாப்: ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் பலி

**சண்டிகர், ஜன. 12-**

பஞ்சாபில் நிலக்கரி அடுப்பு புகையால் மூச்சுத்திணறல் ஏற்பட்டு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் பலியாகினர்.

பஞ்சாப் மாநிலத்தின் தர்ன் தரண் மாவட்டத்தைச் சேர்ந்த தம்பதி அர்ஷ்தீப் சிங் (21), அவரது மனைவி ஜஷந்தீப் கௌர் (20). இவர்களுக்கு ஒன்றரை மாதக் குழந்தையும் உள்ளது. சனிக்கிழமை இரவு குளிரைத் தவிர்க்க அறைக்குள் நிலக்கரி அடுப்பை எரியவிட்டு இத்தம்பதியினர் தூங்கச் சென்றுள்ளனர்.

இந்த நிலையில் நிலக்கரி புகை வெளியேறும் வழி இல்லாததால் அறையினுள் மூச்சுத்திணறல் ஏற்பட்டு ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 3 பேர் பலியானதாக போலீஸார் ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தனர். அதே அறையில் இருந்த 10 வயது குழந்தை ஆபத்தான நிலையில் மீட்கப்பட்டு, தற்போது மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருவதாகவும் அவர்கள் கூறினர்.

நிலக்கரி புகையை அதிக அளவில் சுவாசித்ததன் காரணமாக அவர்கள் மூச்சுத்திணறி பலியாகியிருக்கலாம் என போலீஸார் சந்தேகம் தெரிவித்தனர். எனினும், சம்பவம் குறித்து போலீஸார் விசாரிக்கின்றனர். இந்த சம்பவம் தர்ன் தரண் மாவட்டத்தில் ஹரிகே காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அலிபூர் கிராமத்தில் நடந்தது.

# கருக்கலைப்பு விவகாரம்: ஐகோர்ட் முக்கிய கருத்து

**டெல்லி, ஜன. 12-**

கர்ப்பத்தைத் தொடரக் கட்டாயப்படுத்துவது பெண்ணின் உரிமையைப் பறிக்கும் செயல் என டெல்லி உயர்நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

பிரிந்து வாழும் கணவர் ஒருவர், தனது மனைவி தனது அனுமதியின்றி 14 வாரக் கருவைக் கலைத்துவிட்டதாகக் கூறி நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். கருக்கலைப்பு சட்டத்தின் பிரிவு 312-ன் கீழ் அந்தப் பெண் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்கக் கோரினார். இது தொடர்பாக அந்தப் பெண்ணிற்கு நீதிமன்றம் சம்மன் அனுப்பியது. இந்தச் சம்மனை எதிர்த்து அந்தப் பெண் உயர்நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்தார்.

இதை விசாரித்த நீதிபதி நீனா பன்சால் கிருஷ்ணா, ஒரு பெண் தனது கர்ப்பத்தைத் தொடர விரும்பாதபோது, அவரை அதற்காகக் கட்டாயப்படுத்துவது அவரது உடல் மீதான உரிமையை பறிப்பதாகும். இது பெண்ணை மன ரீதியான பாதிக்கும். மற்றவர்களின் உதவியின்றி குழந்தையைத் தனியாக வளர்க்கும் பொறுப்பு பெண்ணின் மீதே விழுகிறது. சட்டபூர்வமாக செய்யும் கருக்கலைப்பு குற்றமாகாது. எனவே, கருக்கலைப்பு குறித்து முடிவெடுக்கும் முழு உரிமை அந்தப் பெண்ணிற்கே உண்டு” என தெரிவித்து அவர் மீதான குற்றவியல் நடவடிக்கைகளை ரத்து செய்து உத்தரவிட்டார்.

# கிராம உதவியாளர்களுக்கான காலமுறை ஊதியம் விவகாரம்

## அரசுக்கு ஓ.பன்னீர்செல்வம் கோரிக்கை

**சென்னை, ஜன. 12-**

கிராம உதவியாளர்களுக்கான காலமுறை ஊதியம் விவகாரம் தொடர்பாக அரசுக்கு ஓ.பன்னீர்செல்வம் கோரிக்கை விடுத்துள்ளார்.

தமிழ்நாடு முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:-

அரசின் நலத் திட்டங்களை மக்களிடையே எடுத்துச் செல்வது; பேரிடர் காலப் பணிகளை அர்ப்பணிப்பு உணர்வுடன் மேற்கொள்வது; நிலங்களின் வகைகள், விளையும் பயிர்களின் விவரம், நிலவரி விவரம், பிறப்பு இறப்பு விவரம், முதியோர் ஒய்வூதியம் பெறுவோர் விவரம் உள்ளிட்ட பல்வேறு விவரங்களை சேகரித்து உயர் அதிகாரிகளுக்கு அனுப்புவது; தேர்தல் பணிகளை மேற்கொள்வது என பல்வேறு இன்றியமையாப் பணிகளை செம்மையாக செய்து வருபவர்கள் கிராம உதவியாளர்கள். இப்படிப்பட்ட கிராம உதவியாளர்கள் வாழ்வாதாரம் மேம்பட்டு இருக்கிறதா என்றால் நிச்சயம் இல்லை. காலமுறை ஊதியத்திற்காக காலம் காலமாக போராடிக் கொண்டிருக்கும் அவல நிலைக்குதான் கிராம உதவியாளர்கள் தள்ளப்பட்டு இருக்கிறார்கள்.

தமிழ்நாடு முழுவதும் பதினைந்தாயிரத்திற்கும் மேற்பட்ட கிராம உதவியாளர்கள் பணிபுரிவதாகவும்; அலுவலகப் பணி, களப் பணி, தேர்தல் பணி என அனைத்துப் பணிகளையும் இரவு பகல் பாராமல் மேற்கொண்டு வருவதாகவும்; வருவாய்த் துறையில் பணிபுரியும் இரவுக் காவலர்கள், அலுவலக உதவியாளர்கள், சமையலர்கள் உள்ளிட்ட அனைவரும் காலமுறை ஊதியம் பெற்று வருவதாகவும்; கிராம உதவியாளர்கள் மட்டும் சிறப்பு காலமுறை ஒய்வூதியத்தில் பணியாற்றி வருவதாகவும்; இதன் காரணமாக அரசு ஊழியர்களுக்கு அளிக்கப்படும் பல்வேறு சலுகைகள் தங்களுக்கு கிடைப்பதில்லை என்றும்; அரசுத் துறையில் ஒரு பிரிவினருக்கு மட்டும் சிறப்பு காலமுறை ஊதியம் நிர்ணயிப்பது ஒருதலைபட்சமானது என்றும் தமிழ்நாடு வருவாய் கிராம ஊழியர் சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

கிராமங்களின் ஆணிவேராக திகழும் கிராம உதவியாளர்களுக்கு காலமுறை ஊதியம் நிர்ணயிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை கடந்த முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக தமிழ்நாடு வருவாய் கிராம ஊழியர் சங்கத்தின் சார்பில் வைக்கப்பட்டு வருகிறது. கிராம உதவியாளர்களாக பணிபுரிபவர்கள் அனைவரும் தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவுகளைச் சேர்ந்த ஏழையெளிய மக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. அதிக வேலைப்பளு, குறைந்த ஊதியம் என்ற ரீதியில் அவர்களது பணி இருந்து வருவது மிகுந்த வேதனை அளிக்கும் செயல் ஆகும்.

கிராம உதவியாளர்களின் பணி நிலைமையையும், அவர்களது கோரிக்கையில் உள்ள நியாயத்தினையும் கருத்தில் கொண்டு, கிராம உதவியாளர்களுக்கு காலமுறை ஊதியம் நிர்ணயம் செய்ய உடனடி நடவடிக்கை எடுக்குமாறு முதல்-அமைச்சரை அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற தொண்டர்கள் உரிமை மீட்புக் கழகத்தின் சார்பில் வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# லல்லு பிரசாத்துக்கு பாரத ரத்னா விருது கொடுக்க வேண்டும்

## மகன் தேஜ் பிரதாப் கோரிக்கை

**பாட்னா, ஜன. 12-**

பீகாரில் முதல்வர் நிதிஷ் குமார் தலைமையில் ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் ஆட்சி நடந்து வருகிறது. பா.ஜ.க.வுடன் கூட்டணி அமைத்து சமீபத்தில் நடந்த சட்டசபை தேர்தலில் வெற்றி பெற்று, ஐக்கிய ஜனதா தளம் மீண்டும் ஆட்சியை தக்க வைத்து கொண்டது. நிதிஷ் குமார் 10-வது முறையாக முதல்வர் யாகி உள்ளார்.

இந்நிலையில், அவருக்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும் என கோரி, அக்கட்சியின் மூத்த தலைவர் மற்றும் முன்னாள் ராஜ்ய சபை உறுப்பினரான கே.சி. தியாகி, பிரதமர் மோடியை வலியுறுத்தி உள்ளார்.

நீண்டகாலம் முதல்வராக சேவையாற்றி வரும் அவர், பீகார் அரசியல் மட்டுமின்றி தேசிய அளவிலும், புதிய வழிகாட்டலை ஏற்படுத்தி தந்து உள்ளார். சமூகத்தில் சமத்துவம் ஏற்படுத்தியவர். சமூக நீதி, நல்ல நிர்வாகம் மற்றும் பெண்களுக்கு அதிகாரமளித்தல் என தொடர்ச்சியாக உள்ளார்ந்த ஈடுபாட்டுடன் செயல்பட்ட அவர் தேசிய அங்கீகாரம் பெற தகுதி படைத்தவர் என புகழ்ந்து கூறியுள்ளார்.

அதனால், நிதிஷ் குமாருக்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும். பலர் தங்களுடைய வாழ்நாளிலேயே இந்த கவுரவம் பெற்றுள்ளனர். லட்சக்கணக்கான மக்கள் சார்பாக, நிதிஷ் குமாருக்கு இந்த கவுரவம் கிடைக்கும் என நாங்கள் நம்புகிறோம். அதனால், பிரதமர் மோடியை வரலாறு பாராட்டும் என்றும் கூறினார்.

இந்நிலையில், பீகாரின் முன்னாள் முதல்வர் லல்லு பிரசாத் யாதவின் மகன் தேஜ் பிரதாப் யாதவ் பாட்னா நகரில் செய்தியாளர்களிடம் பேசினார். ஜனசக்தி ஜனதா தளம் என தனியாக கட்சி நடத்தி வரும் அவர் கூறும்போது, நிதிஷ் குமாருக்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும் என சிலர் கூறுகின்றனர்.

அப்படி நிதிஷ் குமாருக்கு கொடுக்க வேண்டும் என்றால், அதனை லல்லு பிரசாத்துக்கும் கொடுக்க வேண்டும். ஏனெனில், என்னுடைய தந்தையும், நிதிஷ் குமாரும் சகோதரர்கள் போன்றவர்கள் என கூறப்படுவதுண்டு. இது ஜனசக்தி ஜனதா தள கட்சியின் கோரிக்கை என கூறினார்.

எனினும், நிதிஷ் குமாருக்கு பாரத ரத்னா விருது வழங்க வேண்டும் என தியாகி வலியுறுத்தியது பற்றி ஐக்கிய ஜனதா தளம் கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான ராஜீவ் ரஞ்சன் பிரசாத் கூறும்போது, நிதிஷ் குமார் ஆரோக்கியத்துடன் உள்ளார். அவர் பீகார் மக்களுக்கு தொடர்ந்து சேவையாற்றி வருகிறார். ஆனால், தியாகியின் பேச்சுக்கும் கட்சிக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. அது அவருடைய தனிப்பட்ட பேச்சு என கூறினார்.

### வெனிசுலாவில் இருந்து வெளியேறுங்கள்:

# அமெரிக்க குடிமக்களுக்கு எச்சரிக்கை

**காரகாஸ், ஜன. 12-**

வெனிசுலாவில் சர்வதேச விமான சேவை மீண்டும் தொடங்கப்பட்டு உள்ளது. அதனால் இதனை பயன்படுத்தி, வெனிசுலாவில் உள்ள அமெரிக்க குடிமக்கள் உடனடியாக நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

வெனிசுலா அதிபர் நிக்கோலஸ் மதுரோ ஒரு போதை பொருள் பயங்கரவாதி என்றும் அந்நாட்டில் இருந்து அமெரிக்காவுக்குள் அபாயகர போதை பொருட்கள் கடத்தப்படுகின்றன என்றும் டிரம்ப் கடுமையான குற்றச்சாட்டுகளை கூறி வந்த நிலையில், நிக்கோலஸ் மதுரோவும், அவருடைய மனைவி சிலியா புளோரசும் அமெரிக்க ராணுவ வீரர்களால் இந்த மாத தொடக்கத்தில், கைது செய்யப்பட்டு வெனிசுலாவில் இருந்து நாடு கடத்தப்பட்டனர்.


இது உலக நாடுகளால் பரபரப்பாக பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் வெனிசுலாவில் உள்ள அமெரிக்க தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில், வெனிசுலாவில் பாதுகாப்பு நிலைமை தொடர்ந்து சீரற்று உள்ளது. வெனிசுலாவில் ஆயுதமேந்திய கிளர்ச்சி குழுவினர் சாலைகளில் சுற்றி திரிகின்றனர். அவர்கள் தடுப்புகளை ஏற்படுத்தி அமெரிக்க குடிமக்கள் யாரேனும் உள்ளனரா? என தேடி வருகின்றனர். அவர்களிடம் இருந்து பாதுகாப்பாக விலகி இருக்கவும்.

வெனிசுலாவில் சர்வதேச விமான சேவை மீண்டும் தொடங்கப்பட்டு உள்ளது. அதனால் இதனை பயன்படுத்தி, வெனிசுலாவில் உள்ள அமெரிக்க குடிமக்கள் உடனடியாக நாட்டை விட்டு வெளியேற வேண்டும் என்று கேட்டு கொண்டுள்ளது. வெனிசுலாவில் உள்ள அமெரிக்கர்கள் பயணிக்கும்போது கவனத்துடனும், எச்சரிக்கையாகவும் இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தி உள்ளது.

தொடர்ந்து அந்த செய்தியில், வெனிசுலாவில் அமெரிக்கர்களை சிறை பிடித்தல், சிறை பிடித்து வைத்து சித்திரவதை செய்தல், பயங்கரவாதம், கடத்தல், உள்ளூர் சட்டங்களை தன்னிச்சையாக அமல்படுத்துதல், உள்நாட்டு அமைதியின்மை மற்றும் மோசமான சுகாதார உள்கட்டமைப்பு உள்பட அமெரிக்கர்களுக்கு கடுமையான ஆபத்துகள் உள்ளன. அதனால், வெனிசுலாவுக்கு பயணிக்க வேண்டாம் என்று உச்சபட்ச அளவிலான எச்சரிக்கை அறிவிப்பையும் வெளியிட்டு உள்ளது. எனினும், வெனிசுலா வெளியுறவு அமைச்சர் யுவான் கில், வெனிசுலா முழு அளவில் அமைதியாகவும் மற்றும் ஸ்திரத்தன்மையுடனும் உள்ளது.

**12-01-2026**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** பெற்றோர்களால் நன்மை பல பெறுவீர்கள். மணவாழ்க்கை மகிழ்ச்சிகரமானதாக அமையும். விவசாயம் மூலமான லாபங்கள் அதிகரிக்கும். வாகன யோகம் உண்டு.

**ரிஷபம்:-** சுகமும், பாக்கியமும் விருத்தியாகும். மனதில் உறுதியும், புதிய உற்சாகமும் உண்டாகும். பகைவர்கள் விலகி ஓடுவர். மனைவியின் முழு ஒத்துழைப்புக் கிடைக்கும்.

**மிதுனம்:-** கடினமாக உழைத்தாலும் மேலதிகாரிகள் திருப்தி அடையமாட்டார்கள். ஏதாவது ஒரு சிந்தனையில் மனம் உழன்று கொண்டிருக்கும். சூழ்நிலை மாற்றத்தையும் விரும்புவீர்கள்.

**கடகம்:-** புதிய ஒப்பந்தங்களில் கையெழுத்து இடும் முன் ஒருமுறைக்கு இருமுறை யோசித்து செய்வது நல்லது. வாகன சுகம் குறையும். எதிர்பார்த்த தனவரவு இன்றி கடன் வாங்க நேரும்.

**சிம்மம்:-** வியாபாரிகளுக்கு வருமானம் அதிகரிக்கும். மனத்தெம்பும், மனமகிழ்ச்சியும் அதிகரிக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கை புதிய உற்சாகம் தரும். தொழில் விரிவாக்கத்துக்கு வங்கி கடன்கள் கிடைக்கும்.

**கன்னி:-** வரவுக்கு மிஞ்சிய சமாளிக்க முடியாத செலவுகள் ஏற்படும். குடும்பத்தாரிடம் சுமுகமாக இருந்தால் கருத்து வேறுபாடுகளைத் தவிர்க்கலாம். தொழிலில் புதிய முதலீடுகளை தவிர்க்கவும்.

**துலாம்:-** தனவரவு அதிகரிக்கும். மாணவர்கள் ஆராய்ச்சி மனப்பான்மையோடு செயல்படுவீர்கள். நல்லோரின் தொடர்பு நலத்தையும் மகிழ்ச்சியையும் அளிக்கும். கடல் கடந்த வணிகங்கள் இலாபம் அளிக்கும்.

**விருச்சிகம்:-** வீண் செலவுகள் அதிகரிப்பதால் கடன் வாங்கிக் கஷ்டப்பட நேரும். வீண் வம்புகள் விலைக்கு வாங்காதிருப்பது நல்லது. குடும்பத்தினரிடையே ஒற்றுமை குறையும்.

**தனுசு:-** வீடு, மனை வாங்கும் எண்ணங்கள் மனதில் எழும் கூட்டாளிகளால் இலாபம் ஏற்படும். பெரிய கதாநாயகனாக எண்ணிக் கொள்வதையும், தியாக மனப்பான்மையும் விடுவது நல்லது.

**மகரம்:-** வெற்றி மேல் வெற்றி வரும் நாள். அரசு அதிகாரிகள் மூலம் எதிர்பார்த்த அனைத்து வேலைகளும் அனுகூலமான திசைகளிலும் நகரும். மாணவர்கள் கல்வியில் சிறந்து நல்ல தேர்ச்சி அடைவர்.

**கும்பம்:-** நிதி நிலைமையில் நல்ல ஏற்றம் தெரியும். தங்கள் மனையாள் இனிய மாற்றங்களையும், இன்பப் பயணங்களையும் விரும்புவார். மாணவர்கள் கல்வியில் நல்ல தேர்ச்சி பெறுவர்.

**மீனம்:-** வாழ்க்கையில் எதிர்பார்த்த மாற்றங்கள் ஏற்படும். குடும்ப உறவுகளிடையே மனைவியால் மனக்கசப்பு உருவாகலாம். வாடிக்கையாளர்களின் மனம் அறிந்து நடந்தால் இலாபம் அதிகரிக்கும்.

### டெல்லியில் நடந்த பயங்கரம்:

# கொலை வழக்கில் சாட்சியாக இருந்தவர் சுட்டுக்கொலை..!

**டெல்லி, ஜன. 12-**

கணவன் கொலை வழக்கில் சாட்சியாக இருந்த மனைவி சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் டெல்லியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

டெல்லியின் ஷாலிமார் பாக் பகுதியை சேர்ந்தவர் 44 வயதான ரச்சனா யாதவ். இவர் ஷாலிமார் பாக் நலச் சங்கத்தின் தலைவராகப் பணியாற்றி வந்தார். கடந்த 2023-ம் ஆண்டு, ரச்சனாவின் கணவர் விஜயேந்திர யாதவ், ரச்சனா கண் முன்னாலேயே மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார். அந்த வழக்கில் ரச்சனா தான் முக்கிய சாட்சி ஆவார். இந்த வழக்கில் 5 பேர் மீது குற்றவாளிகளாக கண்டறியப்பட்டனர்.

இந்நிலையில் ஷாலிமார் பாக் பகுதியில், ரச்சனா யாதவ் தனது வீட்டிற்கு அருகில் உள்ள கடைக்குச் சென்றபோது, பைக்கில் வந்த இருவர் ரச்சனாவை நோக்கி துப்பாக்கியால் சுட்டுவிட்டுத் தப்பியோடினர். ரச்சனா மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியிலேயே உயிரிழந்தார்.

கணவர் கொலை வழக்கில் ரச்சனா சாட்சி சொல்வதைத் தடுப்பதற்காகவே, அந்த வழக்கில் தொடர்புடைய குற்றவாளிகளே இவரையும் கொலை செய்திருக்கலாம் என்று போலீசார் சந்தேகிக்கின்றனர். கொலை நடந்த இடத்தில் இருந்த சிசிடிவி காட்சிகளைப் போலீசார் கைப்பற்றியுள்ளனர். அதில் பைக்கில் வந்த இருவர் சுட்டுவிட்டுத் தப்புவது பதிவாகியுள்ளது. இந்தச் சம்பவம் தொடர்பாக வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்து வருகிறது.

### அமெரிக்காவில் துப்பாக்கி சூடு: 6 பேர் உயிரிழப்பு

**நியூயார்க், ஜன. 12-**

அமெரிக்காவின் மிசிசிப்பி மாகாணம் செடார்ப்ளப் என்ற இடத்தில் வாலிபர் ஒருவர் துப்பாக்கி சூடு நடத்தினார். இதில் 7 வயது சிறுமி உள்பட 6 பேரை சுட்டுக் கொன்றார்.

முதலில் தந்தை உள்பட 3 பேரை கொன்ற அவர் அங்கிருந்து தப்பி சென்றார். பின்னர் வேறு ஒரு இடத்தில் சிறுமி மற்றும் தனது 2 சகோதரர்களை சுட்டுக் கொன்றார். தகவல் அறிந்ததும் போலீசார் தப்பி ஓடிய வாலிபரை தேடி கைது செய்தனர். விசாரணையில் அவர் 24 வயதான டாரிக்கா எம் மூர் என்பது தெரியவந்தது. அவர் தனது குடும்பத்தினருடன் ஏற்பட்ட தகராறில் அவர்கள் மீது துப்பாக்கியால் சுட்டுள்ளார். டாரிக்கா எம் மூர் எதற்காக துப்பாக்கி சூடு நடத்தினார் என்பது குறித்து விசாரணை நடந்து வருகிறது. அவர் மீது முதல் நிலை கொலைக் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் இதற்கு முன்பு அவர் மீது எந்த குற்ற வழக்குகளும் இல்லை என்றும் போலீசார் தெரிவித்தனர்.

# இந்தியாவில் எப்போதும் ஒரு இந்துவே பிரதமராக இருப்பார்

## அசாம் முதல்வர் பேச்சால் பரபரப்பு

**திஸ்பூர், ஜன. 12-**



இந்தியா ஒரு இந்து தேசம், இந்து நாகரிகம் கொண்டது. இந்தியாவின் பிரதமர் எப்போதும் ஒரு இந்துவாகவே இருப்பார் என்பதில் நாங்கள் மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கிறோம் என்று அசாம் முதல்வர் ஹிமாந்தா தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் ஒரு நாள் ஹிஜாப் அணிந்த பெண் பிரதமராக வருவார் என்ற ஏஐஎம்ஐஎம் தலைவர் அசாதுதீன் ஓவைசி பேசியதற்கு பா.ஜ.க. தலைவர்கள் கடும் கண்டனம் தெரிவித்து வருகின்றனர். நிகழ்வொன்றில் பேசிய ஓவைசி, "பாகிஸ்தான் அரசியலமைப்பு முஸ்லிம் அல்லாதவர்கள் உயர்பதவிக்கு வருவதைத் தடுக்கிறது. ஆனால், இந்திய அரசியலமைப்பு யாருக்கும் தடை விதிக்கவில்லை. இந்தியாவில் ஒரு நாள் ஹிஜாப் அணிந்த ஒரு மகள் பிரதமராக வருவார் என்பது எனது கனவு" என்று கூறியிருந்தார்.

இந்நிலையில் பா.ஜ.க.வை சேர்ந்த அசாம் முதல்வர் ஹிமந்த பிஸ்வா சர்மா, "அரசியலமைப்பு ரீதியாக யாரும் பிரதமராகலாம், அதில் தடையில்லை. ஆனால் இந்தியா ஒரு இந்து தேசம், இந்து நாகரிகம் கொண்டது. இந்தியாவின் பிரதமர் எப்போதும் ஒரு இந்துவாகவே இருப்பார் என்பதில் நாங்கள் மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கிறோம்" என்று கூறியுள்ளார்.

பா.ஜ.க. செய்தித் தொடர்பாளர் ஷெஷாத் பூனாவாலா இதுபற்றி பேசுகையில், "பிரதமர் பதவி பற்றிப் பேசுவதற்கு முன்பு, ஓவைசி தனது சொந்தக் கட்சியில் ஒரு ஹிஜாப் அணிந்த பெண்ணையோ அல்லது இஸ்லாமியர்களில் பஸ்மாந்தா சமூகத்தைச் சேர்ந்த ஒருவரையோ தலைவராக்கிக் காட்டட்டும்" என்று சவால் விடுத்தார்.

ஒருநாள் பயணமாக கேரளா சென்ற

# அமித்ஷா பத்மநாபசுவாமி கோவிலில் சாமி தரிசனம்



**திருவனந்தபுரம், ஜன. 12-**

மத்திய உள்துறை அமைச்சரும், பாஜக மூத்த தலைவருமான அமித்ஷா கேரளா சென்றுள்ளார். ஒருநாள் பயணமாக கேரளா சென்றுள்ள அமித்ஷா நேற்று திருவனந்தபுரத்தில் உள்ள உலகப்புகழ்பெற்ற பத்மநாபசுவாமி கோவிலுக்கு சென்று சாமி தரிசனம் செய்தார். அமித்ஷாவுக்கு பத்மநாபசுவாமி கோவில் நிர்வாகம் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. சாமி தரிசனத்திற்குப்பின் பேசிய அமித்ஷா, திருவனந்தபுரம் மேயர் தேர்தலில் வெற்றிபெற்ற பாஜக நிர்வாகிகளுக்கு நன்றி தெரிவிக்க வந்ததாக கூறினார். மேலும், பாஜக நிர்வாகிகள் மட்டத்திலான ஆலோசனை கூட்டத்திலும் அமித்ஷா பங்கேற்கிறார். பின்னர், பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கும் அமித்ஷா நேற்று இரவே டெல்லி புறப்பட்டு சென்றார்.



தமிழ்நாடு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று சென்னை எம்.ஜி.எம். பீச் ரெசார்ட்டில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடத்தப்படும் 5150 டிரையத்லான் சென்னை - 2026 போட்டியை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

'ஹெத்தை' அம்மன் திருவிழா:

# படுகர் மக்களுக்கு இ.பி.எஸ். வாழ்த்து

**சென்னை, ஜன. 12-**



நீலகிரி மாவட்டத்தில் வாழும் படுகர் சமுதாய மக்களின் பாரம்பரிய திருவிழாவான "ஹெத்தை" அம்மன் திருவிழா நேற்று கொண்டாடப்பட்டது. இந்த நிலையில் 'ஹெத்தை' அம்மன் திருவிழாவை முன்னிட்டு அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:- நீலகிரி மாவட்டத்தில் வாழும் படுகர் சமுதாய மக்கள் தங்களின் பாரம்பரிய திருவிழாவான "ஹெத்தை" அம்மன் திருவிழாவை வெகு விமர்சையாக கொண்டாடி வருகின்றனர். தங்கள் முன்னோர்களை நினைவுகூர்ந்து வழிபடும் இந்த திருவிழாவானது படுகர் இன மக்களின் கலாசாரத்தையும், பண்பாட்டையும், ஒற்றுமையையும் எடுத்துரைக்கிறது.

"ஹெத்தை" அம்மன் திருவிழாவிற்கு ஜெயலலிதா உள்ளூர் விடுமுறை அளித்திருந்தார். இந்த வேளையில் ஹெத்தை அம்மனின் பூரண அருளால் தீமை அழிந்து, நன்மை பிறந்து. வளம் செழித்து மக்கள் யாவரும் இன்புற்று வாழ வாழ்த்துகிறேன்... இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

கரூர் சம்பவம் தொடர்பாக

# டெல்லி சி.பி.ஐ. முன்பாக இன்று ஆஜராகிறார் விஜய்

**கரூர், ஜன. 12-**



கரூர் பெருந்துயரம் தொடர்பான சி.பி.ஐ. விசாரணைக்காக இன்று காலை 7 மணிக்கு த.வெ.க. தலைவர் விஜய் டெல்லி செல்கிறார்.

கடந்த செப். 27-ஆம் தேதி கரூரில் த.வெ.க. தலைவர் விஜய் பங்கேற்ற கூட்டத்தில் ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். இதுதொடர்பாக விசாரிக்க சி.பி.ஐ.க்கு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டது. இதைத் தொடர்ந்து, கரூரில் த.வெ.க. நிர்வாகிகள், தமிழக அரசு அதிகாரிகள், காவல் துறை அதிகாரிகள், நெரிசலில் உயிரிழந்தோரின் குடும்பத்தினர், காயமடைந்தவர்கள் எனப் பல்வேறு தரப்பினரிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டனர்.

இதனிடையே, டெல்லியில் உள்ள சி.பி.ஐ. தலைமை அலுவலகத்தில் த.வெ.க. பொதுச் செயலர் ஆனந்த், தேர்தல் தலைமை பொதுச் செயலர் ஆதவ் அர்ஜுனா, இணைப் பொதுச் செயலர் நிர்மல்குமார், கரூர் மாவட்டச் செயலர் மதியழகன் ஆகியோர் நேரில் ஆஜராக உத்தரவிடப்பட்டது.

அதன்பேரில், கடந்த டிசம்பர் இறுதியில் நேரில் ஆஜரான த.வெ.க. நிர்வாகிகளிடம் சி.பி.ஐ. அதிகாரிகள் மூன்று நாள்கள் விசாரணை நடத்தினர். அதேபோல், கரூர் மாவட்ட ஆட்சியர் எம்.தங்கவேல், கரூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜோஷ் தங்கய்யா, ஏடிஎஸ்பி பிரேம் ஆனந்தன், டிஎஸ்பி வி.செல்வராஜ், கரூர் நகர காவல் ஆய்வாளர் ஜி. மணிவண்ணன் உள்ளிட்டோரிடம் டெல்லி சி.பி.ஐ. அலுவலகத்தில் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

விசாரணையின்போது, பரப்புரை கூட்டத்துக்கு விஜய் தாமதமாக வந்தது ஏன், அவர் வருவதில் தாமதம் இருந்தால் அதற்கான காரணம் என்ன, பாதுகாப்பு ஏற்பாடுகள்? கூட்ட அனுமதி எப்படி பெறப்பட்டது, கூட்டத்துக்கு எத்தனை பேர் வருவார்கள் என்று எதிர்பார்க்கப்பட்டது போன்ற பல்வேறு கேள்விகள் கேட்கப்பட்டன. இந்நிலையில், வழக்கு விசாரணையின் இறுதிக்கட்டமாக டெல்லியில் உள்ள சி.பி.ஐ. அலுவலகத்தில் வரும் ஜன.12-ம் தேதி த.வெ.க. தலைவர் விஜய் நேரில் ஆஜராக அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

இந்நிலையில் சென்னை விமான நிலையத்தில் இருந்து இன்று காலை 7 மணிக்கு விமானம் மூலமாக விஜய் டெல்லி புறப்படுகிறார். கடந்த 6ம் தேதி சம்மன் அனுப்பிய நிலையில் டெல்லி சி.பி.ஐ. அலுவலகத்திற்கு இன்று காலை 11 மணிக்கு விஜய் ஆஜராகிறார். மேலும், கரூர் பெருந்துயரம் தொடர்பான விசாரணைக்காக டெல்லி செல்லும் விஜய்க்கு பாதுகாப்பு வழங்குமாறு டெல்லி காவல்துறைக்கு கடிதம் எழுதப்பட்டுள்ளது.

த.வெ.க. தலைவர் விஜய் இன்று டெல்லி செல்லும் நிலையில் டெல்லி காவல்துறைக்கு மின்னஞ்சல் மூலமாக த.வெ.க. கடிதம் எழுதியுள்ளது. த.வெ.க. தலைவர் விஜய்க்கு பாதுகாப்பு வழங்குமாறு டெல்லி காவல்துறைக்கு த.வெ.க. நிர்வாகி நிர்மல்குமார் மின்னஞ்சல் மூலமாக கடிதம் அனுப்பியுள்ளது.

இதற்கிடையே மத்திய ரிசர்வ் படை மற்றும் டெல்லி காவல் துறை அதிகாரிகள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுவர் என்றும் சி.பி.ஐ. அலுவலகம் செல்லும் வழி, தங்கும் ஹோட்டல் உள்ளிட்ட இடங்களில் உரிய பாதுகாப்பு அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சி.பி.ஐ. விசாரணக்காக இன்று காலை டெல்லி செல்லும் விஜய், நாளை மாலை சென்னை திரும்ப உள்ளார். இதற்காக தனி விமானத்தில் அவர் செல்கிறார். விஜய்யுடன் த.வெ.க. நிர்வாகிகள் புஸ்ஸி ஆனந்த், ஆதவ் அர்ஜுனா, நிர்மல் குமார் உள்ளிட்டோரும் டெல்லி செல்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

3-வது பாலியல் வன்கொடுமை வழக்கில்

# கேரள காங்கிரஸ் எம்.எல்.ஏ. கைது

**திருவனந்தபுரம், ஜன. 12-**



கேரளத்தில் மூன்றாவது முறையாக பாலியல் வன்கொடுமை வழக்கில் காங்கிரஸ் எம்.எல்.ஏ. ராகுல் மாம்கூட்டத்தில் கைது செய்யப்பட்டார்.

காங்கிரஸ் எம்.எல்.ஏ.-வான ராகுல் மாம்கூட்டத்தில் மீது பாலியல் வன்கொடுமை மற்றும் கருக்கலைப்பு என இரு வெவ்வேறு வழக்குகளில் கைது செய்யப்பட்டிருந்தார். இருப்பினும், முதல் வழக்கில் அவருக்கு கைது நடவடிக்கையிலிருந்து இடைக்காலத் தடை விதித்து கேரள உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. தொடர்ந்து, இரண்டாவது வழக்கிலும் ராகுலுக்கு முன்பிணை வழங்கி திருவனந்தபுரம் அமர்வு நீதிமன்றம் உத்தரவிட்டது. இதனிடையே, பாலியல் வழக்குகள் காரணமாக ராகுலை கட்சியிலிருந்து காங்கிரஸ் நீக்கி உத்தரவிட்டது.

இந்த நிலையில், ராகுல் மாம்கூட்டத்தில் மீது மூன்றாவது வழக்காக பத்தனம்திட்டாவை சேர்ந்த ஒருவர் பாலியல் புகார் அளித்தார். மூன்றாவது வழக்கில்தான், ஒரு விடுதியில் தங்கியிருந்த ராகுல் மாம்கூட்டத்திலை சனிக்கிழமை நள்ளிரவில் காவல்துறையினர் கைது செய்தனர். ஏற்கெனவே உள்ள இரு வழக்குகளை சிறப்புப் புலனாய்வுக் குழு விசாரித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

## ராகுல் நாளை கூடலூர் வருகை

**நீலகிரி, ஜன. 12-**

மக்களவை எதிர்க்கட்சித் தலைவரும், வயநாடு தொகுதி காங்கிரஸ் எம்.பி.யுமான ராகுல் காந்தி நீலகிரி மாவட்டம், கூடலூருக்கு நாளை வருகை தரவுள்ளார்.

நீலகிரி மாவட்டம், கூடலூரில் உள்ள புனித தாமஸ் மேல்நிலைப் பள்ளியின் பொன்விழாவில் கலந்து கொள்வதற்காக ராகுல் காந்தி கூடலூர் வருகிறார். பள்ளி மைதானத்தில் நடைபெறும் பொன்விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொண்ட பின்னர் அங்கிருந்து கேரள மாநிலம் செல்கிறார்.

கச்சத்தீவு திருவிழாவில் பங்கேற்க

# வருகிற 15-ம் தேதி முதல் விண்ணப்பம் விநியோகம்

**ராமேசுவரம், ஜன. 12-**

கச்சத்தீவு திருவிழாவில் இந்தியாவில் இருந்து கலந்து கொள்பவர்களுக்கு ஜன.15ம் தேதி முதல் 25ம் தேதி வரை விண்ணபப்பம் விநியோகம் செய்யப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடைப்பட்ட நடுக்கடல் பகுதியில் கச்சத்தீவு உள்ளது. ராமேசுவரம் பகுதியில் இருந்து 12 கடல் மைல் தொலைவிலும், இலங்கை நெடுந்தீவு பகுதியில் இருந்து 18 கடல் மைல் தொலைவிலும் அமைந்துள்ளது. இந்த கச்சத்தீவில் புனித அந்தோணியார் ஆலயம் உள்ளது. இதனிடையே இந்த ஆலய திருவிழா பிப்ரவரி 27, 28ம் தேதிகளில் நடைபெறுகிறது.

இந்நிலையில் கச்சத்தீவு திருவிழாவில் இந்தியாவில் இருந்து கலந்து கொள்பவர்களுக்கு ஜன.15ம் தேதி முதல் 25ம் தேதி வரை விண்ணப்பம் விநியோகம் செய்யப்பட உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. மேலும் 5 - 70 வயதுக்குள் இருப்பவர்கள் மட்டுமே திருவிழாவில் கலந்து கொள்ள முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. கச்சத்தீவு திருவிழாவில் இந்தியாவில் இருந்தும், இலங்கையிலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொள்ள உள்ளனர். அதற்கான ஏற்பாடுகளை இங்கை அரசு செய்து வருகிறது.

தி.மு.க.வா? த.வெ.க.வா?

# கூட்டணி முடிவை இன்று அறிவிக்கிறார் ராமதாஸ்..!

**சென்னை, ஜன. 12-**

இன்று காலை தைலாபுரத்தில் அல்லது சென்னையில் யாருடன் கூட்டணி என அறிவிப்பார் என்று பா.ம.க. வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்படுகிறது.

தமிழ்நாடு சட்டசபைக்கு விரைவில் தேர்தல் வர உள்ளது. இதனால் கூட்டணி அமைக்கும் முயற்சியில் பல்வேறு அரசியல் கட்சியினர் தீவிரம் காட்டி வருகின்றனர். ஏற்கனவே அ.தி.மு.க. கூட்டணியில் பா.ஜ.க. இடம் பெற்றுள்ளது. இந்த கூட்டணியில் தற்போது அன்புமணி தலைமையிலான பா.ம.க.வும் இணைந்துள்ளது.

ஆனால் ராமதாஸ், அந்த கூட்டணி செல்லாது. சட்டரீதியாகவும் இந்த கூட்டணி செல்லாது. என்னுடன் அமைக்கும் கூட்டணி தான் வெற்றி பெறும் என சமீபத்தில் நிரூபர்களிடம் கூறி இருந்தார். மேலும் பழம் நழுவி பாலில் விழுந்துவிட்டது. தைலாபுரத்திலிருந்து தைலமும் சென்றுவிட்டது என சூசகமாக தி.மு.க.வுக்கு ஆதரவு தெரிவித்தது போல் தெரிவித்திருந்தார். அதே போல தமிழக வெற்றிக் கழக முக்கிய நிர்வாகிகளும் ஜி.கே. மணியின் மகன் தமிழ் குமரன் மூலமாக பல்வேறு கட்ட பேச்சுவார்த்தை நடத்தியதாகவும் கூறப்படுகிறது.

இந்த பரபரப்பான நிலையில் பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் தைலாபுரத்தில் இருந்து நேற்று மாலை 4.30 மணி அளவில் சென்னை புறப்பட்டார். பல்வேறு கட்ட பேச்சுவார்த்தை முடித்த பிறகு இன்று காலை தைலாபுரத்தில் யாருடன் கூட்டணி என அறிவிப்பார் என்று பா.ம.க. வட்டாரத்தில் பரபரப்பாக பேசப்படுகிறது.

பிப்ரவரி 2-வது வாரத்தில்

# பூந்தமல்லி- வடபழனி மெட்ரோ ரயில் சேவை தொடங்க திட்டம்

## சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நிறைவு

**சென்னை, ஜன. 12-**

பூந்தமல்லி - வடபழனி இடையே பிப்ரவரி 2-வது வாரத்தில் மெட்ரோ ரயில் சேவையைத் தொடங்க திட்டமிட்டிருப்பதாக சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது. மேலும் இதுதொடர்பான சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நிறைவு பெற்றுள்ளது.

போரூர் முதல் வடபழனி வரையிலான மெட்ரோ ரயில் வழித்தடத்தில் நேற்று (ஜன.11) சோதனை ஓட்டம் வெற்றிகரமாக நிறைவுபெற்றது. இந்த வழித்தடத்தில் ஏற்கெனவே ரயில் என்ஜின் மூலம் சோதனை நடத்தப்பட்ட நிலையில், அதன் தொடர்ச்சியாக நேற்று முழு மெட்ரோ ரயிலையும் இயக்கி சோதனை மேற்கொள்ளப்பட்டது. மேலும், சோதனை ஓட்டம் உள்ளிட்ட தொழில்நுட்ப அம்சங்களை உறுதிப்படுத்தும் வகையில் நடைபெற்றது.

இதனையடுத்து, பூந்தமல்லி - வடபழனி இடையே பிப்ரவரி 2-வது வாரத்தில் மெட்ரோ ரயில் சேவையைத் தொடங்க திட்டமிட்டிருப்பதாக சென்னை மெட்ரோ ரயில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

மேலும், இந்த வழித்தடத்தில் போக்குவரத்து தொடங்கினால் 25 நிமிடங்களில் பூந்தமல்லி பைபாஸில் இருந்து வடபழனி சென்றடையலாம் என்றும், 7 நிமிடத்தில் ஒரு ரயில் என்ற வீதத்தில் சேவை இருக்கும் எனவும் கூறப்படுகிறது.

பின்னர், சென்னை மெட்ரோ ரயில் மேலாண் இயக்குநர் சித்திக் இது குறித்து அவர் செய்தியாளர்களிடம் பேசும்போது, "போரூர்- வடபழனி இடையே மெட்ரோ ரயில் சோதனை ஓட்டம் சிறப்பாக நடந்து முடிந்திருக்கிறது. பூந்தமல்லி - வடபழனி இடையே வரும் பிப்ரவரி இரண்டாம் வாரம் பயணிகள் ரயில் சேவையை தொடங்க திட்டமிட்டிருக்கிறோம்.

பின்னர் ஜூன் மாதத்தில் கோடம்பாக்கம் வரை நீட்டிக்கப்படும். முதற்கட்டமாக ஓட்டுநருடன் மெட்ரோ ரயில் சேவை தொடங்கப்படும். பின்னர் ஜூன் மாதத்துக்கு பிறகு ஓட்டுநர் இன்றி மெட்ரோ ரயில் சேவை இயக்க திட்டமிட்டிருக்கிறோம். பூந்தமல்லியில் இருந்து வடபழனிக்கு 25 நிமிடங்களில் செல்லலாம்" என்று அவர் கூறினார்.

16-வது நாளாக தொடர் போராட்டம்:

# இடைநிலை ஆசிரியர்கள் 1,500 பேர் திடீர் கைது

**சென்னை, ஜன. 12-**

சம வேலைக்கு சம ஊதியம் கோரி சென்னையில் தொடர்ந்து 16-வது நாளாக போராட்டத்தில் ஈடுபட்ட 1,500-க்கும் மேற்பட்ட இடைநிலை ஆசிரியர்களை போலீஸார் கைது செய்தனர்.

சம வேலைக்கு சம ஊதியம் கோரிக்கையை முன்வைத்து இடைநிலை பதிவு மூப்பு ஆசிரியர் இயக்கம் (எஸ்எஸ் டிஏ) சார்பில், கடந்த டிச.26-ம் தேதி முதல் தொடர் போராட் டங்கள் நடத்தப்பட்டு வருகின்றன. தொடர்ந்து 16-வது நாளாக சென்னை எழும்பூர் காந்தி இர்வின் பாலத்தில் போராட்டம் நடைபெறும் என்று அறிவித்தனர். அங்கு வருவதற்காக எழும்பூர், பூங்கா நகர், திருவல்லிக்கேணி, சிந்தாதிரிப்பேட்டை என பல்வேறு இடங்களில் ஆசிரியர்கள் திரண்டிருந்தனர்.

இதையடுத்து, ஒவ்வொரு பகுதிகளிலும் கூடியிருந்த ஆசிரியர்களை போலீஸார் தேடித்தேடிச் சென்று கைது செய்தனர். மேலும், போராட்ட இடத்துக்குப் புறப்பட தயாராக இருந்த எஸ்எஸ்டிஏ சங்க நிர்வாகிகளும் முன்கூட்டியே கைது செய்யப்பட்டனர். அதைத் தொடர்ந்து, அவர்களை விடுவிக்கக் கோரியும், போலீஸாரைக் கண்டித்தும் ஆசிரியர்கள் முழக்கமிட்டனர்.

இதேபோல், திமுக தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதியை நிறைவேற்றும் வகையில் தங்களை பணி நிரந்தரம் செய்ய வலியுறுத்தி பகுதி நேர ஆசிரியர்களும், தற்காலிக ஆசிரியர்களை பணியிலிருந்து வெளியேற்றி தங்களுக்கு அரசுப் பணி வழங்க வேண்டுமென டெட் தேர்வில் தேர்ச்சி பெற்ற பட்டதாரிகளும் எழிலகம், டி.பி.ஐ. வளாகம் உள்ளிட்ட இடங்களில் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

கேரளாவில் மத்திய அரசை கண்டித்து

# முதல்வர் பினராயி தலைமையில் எல்.டி.எப் இன்று போராட்டம்

**திருவனந்தபுரம்,ஜன. 12-**

மத்திய அரசின் "மக்கள் விரோத" கொள்கைகளுக்கு எதிராக முதல்வர் பினராயி விஜயன் தலைமையில் கேரள ஆளும் இடது ஜனநாயக முன்னணி சத்தியாகிரகப்' போராட்டத்தை இன்று முதல் (ஜன.12) நடத்தவுள்ளது.

இதுதொடர்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் கேரள மாநில செயலாளர் எம்.வி.கோவிந்தன் நிருபர்களிடம் கூறியதாவது:-

மத்திய அரசு பல்வேறு மக்கள் விரோத செயல்களில் ஈடுபட்டு வருகிறது. இதனை கண்டித்து மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு சார்பில் இன்று (12-ந் தேதி) திருவனந்தபுரத்தில் முதல்வர் பினராயி விஜயன் தலைமையில் சத்தியாகிரக போராட்டம் நடைபெற உள்ளது.

சமுதாயத்தில் வகுப்புவாத அடிப்படையில் பிரிவினையை ஏற்படுத்த காங்கிரஸ் தலைமையிலான எதிர்க்கட்சி கூட்டணி மற்றும் பா.ஜ.க. செய்யும் முயற்சிகளுக்கு எதிராக, மகாத்மா காந்தியின் நினைவு நாளான வருகிற 30-ந் தேதி அனைத்து மாவட்ட தலைமையகங்களில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாணவர்கள், இளைஞர் மற்றும் பெண்கள் அமைப்பு போராட்டங்களில் ஈடுபடும்.

மேலும், மாநில அரசு மேற்கொண்டு வரும் மக்கள் வளர்ச்சித் திட்டங்களை எடுத்துரைக்க பிப்ரவரி 1-ந் தேதி முதல் 3 மண்டல அளவிலான பேரணிகள் நடைபெற உள்ளன. வடக்கு மண்டல அணிவகுப்பு காசர்கோடு முதல் பாலக்காடு வரையிலும், மத்திய மண்டல அணிவகுப்பு பத்தனம்திட்டா முதல் எர்ணாகுளம் வரையிலும் நடைபெறும். தெற்கு மண்டல அணிவகுப்பு திருச்சூர் முதல் திருவனந்தபுரம் வரை நடைபெறும்." என்று அவர் கூறினார்.

மரம் மனிதனின் உரம்

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



தமிழ்நாடு முழுவதும் பணியாற்றும் கிராம ஊராட்சி செயலாளர்களை தமிழக அரசின் உறுதியளிக்கப்பட்ட புதிய ஓய்வூதியத் திட்டத்தில் உடனடியாக இணைக்க வேண்டும். மேலும் ஏற்கனவே ஓய்வுபெற்ற கிராம ஊராட்சி செயலாளர்களுக்கு குறைந்தபட்ச ஓய்வூதியமாக ரூ.15,000 அரசு வழங்க வேண்டும்.

**- ஜி.கே.வாசன்**



பா.ஜ.க. கட்சியின் ஆணி வேராக பூத் கமிட்டி உள்ளது. பா.ஜ.க. கூட்டணியில் தற்போது பா.ம.க. இணைந்துள்ளது. பொங்கல் முடிந்த பிறகு மேலும் சில கட்சிகள் கூட்டணிக்கு வர இருக்கிறது. தி.மு.க.வில் உள்ள கூட்டணிகள் வெளியேறும். வரும் தேர்தல் மிக முக்கியமான தேர்தல். கடந்த 2021 தேர்தலில் ஏற்பட்ட சரிவு வரும் தேர்தலில் ஏற்படாது.

**- நயினார்**



தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் கட்சி கூடுதல் தொகுதிகள் கேட்பதாக தகவல்கள் வருகிறது. போட்டியிடும் தொகுதிகளில் எல்லாம் ஜெயிப்போம் என்று அவர்களால் சொல்ல முடியுமா? ஆனால் இந்த முறை மக்கள் ஏமாறமாட்டார்கள். தேசிய ஜனநாயக கூட்டணி மிகப் பெரிய வெற்றி அடையும்.

**- நடிகை குஷ்பு**



மத்திய ஏகலைவா பள்ளிப் பணிகளுக்கான தேர்வுகளில் தமிழ் இணைக்கப்பட்டு, மீண்டும் தேர்வு நடத்தப்பட வேண்டும். தமிழ் புறக்கணிப்பை, ஹிந்தித் திணிப்பை எந்த நிலையிலும் தமிழ்நாடு பொறுத்துக் கொள்ளாது. நடைபெறவிருக்கும் சட்டப்பேரவைத் தேர்தல் களத்திலும் இப்பிரச்சினை நிச்சயம் எதிரொலிக்கும்.

**- கி.வீரமணி**

பல்கலைக்கழக அளவில் முதலிடம்:

# ரமணாஸ் கல்லூரி மாணவிகளுக்கு கவர்னர் பதக்கம் வழங்கினார்




**அருப்புக்கோட்டை,ஜன. 12-**

அருப்புக்கோட்டை ஸ்ரீ ரமணாஸ் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவிகள் மதுரை காமராஜர் பல்கலைக்கழக அளவில் நடைபெற்ற தேர்வுகளில் முதலிடங்களை பெற்று சாதனை படைத்துள்ளனர்.

மதுரை காமராஜர் பல்கலைக்கழக தேர்வுகளில் ஆங்கில பாடத்தில் தேர்வு எழுதிய ஆயிரக்கணக்கான மாணவ மாணவிகளில் அருப்புக்கோட்டை ரமணாஸ் மகளிர் கல்லூரி ஆங்கிலத்துறை மாணவி நக்சத் சுல்தானா முதல் ரேங்க் பெற்று தமிழக கவர்னர் ஆர்.என். ரவி அவர்களிடம் பதக்கம் மற்றும் சான்றிதழ் பெற்று சாதனை படைத்துள்ளார். அதேபோல் தாவரவியல் துறை மாணவி அபிநயா முதல் ரேங்க் பெற்று கவர்னர் ஆர்.என். ரவி அவர்களிடம் பட்டமும் பதக்கம் பெற்று சாதனை படைத்துள்ளார்.

மேலும் ரமணாஸ் கல்லூரி மாணவிகள் இரண்டாம் ரேங்க் மூன்றாம் ரேங்க் என ஏழுக்கு மேற்பட்ட ரேங்க் பெற்று சாதனை படைத்துள்ளனர். சாதனை படைத்து பதக்கங்கள் பெற்ற மாணவிகளை ரமணாஸ் கல்லூரி சேர்மன் ராமச்சந்திரன், கலைக் கல்லூரி செயலர் டாக்டர்.இளங்கோவன், பி.எட். கல்லூரி செயலர் சங்கரநாராயணன், கல்லூரி துணை முதல்வர் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டினர்.

ராஜபாளையம் ரயில் நிலையத்தில்

# ரூ.11.70 கோடி மதிப்பில் அம்ரித் பாரத் ஸ்டேஷன் திட்டப்பணிகள்

## துணை தலைமை பொறியாளர் நேரில் ஆய்வு




**ராஜபாளையம், ஜன. 11-**

ராஜபாளையம் ரயில் நிலையத்தில் அம்ரித் பாரத் ஸ்டேஷன் திட்டப்பணிகள் கட்டுமான பணிகள் நடைபெற்று வருகின்றது. இப்பணிகளை தென்னக ரயில்வே துணை தலைமை பொறியாளர் கார்த்திக் பொறியாளர் மற்றும் அதிகாரிகளுடன் பார்வையிட்டார்.

இந்தியாவில் உள்ள புராதான சிறப்புமிக்க மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த 1000 ரயில் நிலையங்களை மேம்படுத்தும் வகையில் மத்திய அரசு சார்பில் அம்ரித் பாரத் ஸ்டேஷன் திட்டம் கடந்த 2022 டிசம்பர் மாதம் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தில் மதுரை ரயில்வே கோட்டத்தில் விருதுநகர், ராஜபாளையம், ஸ்ரீவில்லிபுத்தூர் உட்பட 15 ரயில் நிலையங்கள் தேர்வு செய்யப்பட்டது.

இதில் ராஜபாளையம் ரயில் நிலையத்தில் இரண்டாவது நுழைவு பாதை, ஏற்கனவே உள்ள பாதையை விரிவுபடுத்துதல், முதல் வகுப்பு காத்திருப்பு வரை, கூடுதல் கட்டிடம், மாற்றுத்திறனாளிகளுக்கான சுகாதார வளாகம், கண்காணிப்பு கேமரா, வாகன காப்பகம், நடை மேம்பாலத்தில் லிப்ட் அமைத்தல், லிப்ட் வசதியுடன் கூடிய இரண்டாவது நடை மேம்பாலம், பயணிகள் உள்ளே வருவதற்கும் வெளியே செல்வதற்கும் தனித்தனி வசதி, நடை மேடை முழுவதும் எல்.இ.டி அறிவிப்பு பலகை உள்ளிட்ட நவீன வசதிகளுடன் ரயில் நிலையத்தை மேம்படுத்த ரூ.11.70 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

இதில் 2023 ஏப்ரல் மாதம் நிதி ஒதுக்கப்பட்டு பணிகள் தொடங்கியது. . வாகன நிறுத்துமிடம், மின் தூக்கி, நடைமேடையில் எல்.இ.டி அறிவிப்பு திரை, கண்காணிப்பு கேமரா, சுற்றுச் சுவர், கூடுதல் கட்டிடங்கள் அமைக்கும் பணிகளைப் பார்வையிட்டார். ராஜபாளையம் ரயில் நிலையம் வருவாய் அடிப்படையில் என்.எஸ்.ஜி- 5 என்ற தரவரிசையில் இருந்து என்.எஸ்.ஜி 4 என்ற தரவரிசைக்கு முன்னேறி உள்ளது. அனைத்து பணிகளையும் அதிகாரியுடன் ஆய்வு செய்து விரைந்து முடிக்க உத்தரவிட்டார்.

திருமங்கலம் உழவர் சந்தையில்

# மதநல்லிணக்க சமத்துவ பொங்கல் விழா



**திருமங்கலம், ஜன. 12-**

திருமங்கலம் உழவர் சந்தையில் மும்மதத்தினர் பங்கேற்புடன் நடைபெற்ற மத நல்லிணக்க சமத்துவ பொங்கல் விழாவில் கலந்து கொண்ட பொதுமக்களுக்கு இலவச கரும்புகளுடன் பொங்கல் வழங்கி கோலாகல கொண்டாட்டம் நடைபெற்றது.

மதுரை மாவட்டம் திருமங்கலம் நகர் உழவர் சந்தையில் ஆண்டு தோறும் சமத்துவ பொங்கல் விழா நடைபெறுவது வழக்கம். இதனிடையே இந்த ஆண்டு சமத்துவ பொங்கல் விழா மத நல்லிணக்க பொங்கல் விழாவாக நேற்று சிறப்புடன் கொண்டாடப் பட்டது.திருமங்கலம் 10வது வார்டு தி.மு.க நகர்மன்ற உறுப்பினர், மாவட்ட திட்டக்குழு உறுப்பினர் ரம்ஜான்பேகம் ஜாகிர் உசேன் ஏற்பாட்டின் பேரில் நடைபெற்ற இவ்விழாவில் உழவர் சந்தைக்கு வருகை தந்திடும் ஏராளமான பொது மக்கள் கலந்து கொண்டனர்.

இவ்விழாவில் பங்கேற்ற திருமங்கலம் மீனாட்சி அம்மன் திருக்கோவில் சிவாச்சாரியார், அமல அன்னை ஆலய தந்தை மற்றும் இஸ்லாமிய ஜமாத் பெரியவர்கள் முன்னிலையில் பெண்கள் குலவையிட மத நல்லிணக்க பொங்கல் வைக்கப்பட்டு அனைவருக்கும் வழங் கப் பட் டது.பின் னர் விழாவில் பங்கேற்ற பொது மக்களுக்கு பொங்கலுடன் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கரும்புகள் இலவசமாக வழங்கப்பட்டு பொங்கல் பண்டிகை கோலாகலமாக கொண்டாடப்பட்டது.

இந்நிகழ்வினில் திருமங்கலம் நகர் தி.மு.க செயலாளர் ஸ்ரீதர், தொகுதி பொறுப்பாளர் அலாவுதீன், திருமங்கலம் நகர் மன்ற தலைவர் மு.ரம்யா முத்துக்குமார், மெப்கோ தொழிற்சங்க தலைவர் இரா.முத்துக்குமார், நகர் தி.மு.க பொருளாளர் கவுன்சிலர் சின்னச்சாமி, துணை செயலாளர் செல்வம், முன்னாள் நகர்மன்ற தலைவர் நிரஞ்சன்,மேலத்தெரு ஜமாத் தலைவர் நாசர் முகைதீன், தமுமுக நகர செயலாளர் அஜ்மீர் அலி, ஜமாத்தே இஸ்லாமி இயக்க ஹக்கீம், அக்பர், திமுக வார்டு செயலாளர்கள் ரவி,வெள்ளை யத்தா,பிரதிநிதிகள் சோலை ரவி, குட்டி பாலு,பீர் முகமது மற்றும் நகர்மன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள், தி.மு.க நிர்வாகிகள், மும்மதங்களின் பெரியவர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.விழாவின் நிறைவில் தி.மு.க நிர்வாகியும்,சமூக ஆர்வலருமான ஜாகிர் உசேன் நன்றி கூறினார்.

ஒட்டன்சத்திரத்தில் பொங்கல் விழா:

# அமைச்சர் அர. சக்கரபாணி பங்கேற்பு



**ஒட்டன்சத்திரம், ஜன. 12-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட 10வது வார்டு கலைஞர் நூற்றாண்டு காய்கறி மார்க்கெட் பகுதியில் நடைபெற்ற சமத்துவ பொங்கல் விழா, கோலப் போட்டி விழாவில் கலந்துகொண்டு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி பேசினார்.

இந்நிகழ்வில் நகர செயலாளர் வெள்ளைச்சாமி, மாவட்ட அவைத் தலைவர்மோகன், நகர்மன்றத் தலைவர் திருமலைச்சாமி, செயற்குழு உறுப்பினர் கண்ணன், பொதுக்குழு உறுப்பினர் செல்வராஜ், மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் ஆறுமுகம், நகர்மன்ற உறுப்பினர் நிவேதா, உள்ளிட்ட நிர்வாகிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர். படம். திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட கலைஞர் நூற்றாண்டு காய்கறி மார்க்கெட் பகுதியில் சமத்துவ பொங்கல் விழாவில் அமைச்சர் அர.சக்கரபாணி கலந்து கொண்டார்

# நத்தம் அருகே சிவனடியார்கள் கூட்டமைப்பினர் ஆலோசனை



**நத்தம், ஜன. 12-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே குட்டூரில் உள்ள அண்ணாமலையார் கோவிலில் நத்தம் சிவனடியார்கள் கூட்டமைப்பு சார்பில் ஆலோசனை கூட்டம் நடந்தது. இதற்கு ஒன்றிய தலைவர் அன்பழகன் தலைமை தாங்கினார். ஒன்றிய செயலாளர் வடிவேல், அண்ணாமலையார் கோவில் நிறுவனர் மணிமாறன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இதில் வருகிற பிப்ரவரி மாதம் நடைபெற உள்ள மாரியம்மன் கோவில் திருவிழாவிற்கு முன்னதாக உழவார பணிகள் செய்வது, தென்னிந்திய திருக்கோவில் கூட்டமைப்புடன் சேர்ந்து உழவார பணிகள் நடத்துவது உள்ளிட்ட பல்வேறு கருத்துகள் சம்பந்தமாக ஆலோசனை மேற்கொள்ளபட்டது.

# வத்தலக்குண்டுவில் பழனி பாதயாத்திரை பக்தர்களுக்கு தண்ணீர் பாட்டில் வழங்கல்



**வத்தலகுண்டு, ஜன. 12-**

வத்தலகுண்டில். மாநில அம்மா பேரவை இணைச் செயலாளர் ஆர்.வி.என்.கண்ணன் பிறந்தநாளை முன்னிட்டு. ஐடி வின் மேற்கு ஒன்றிய செயலாளர் பி.மனோஜ் குமார், பழனி பாதயாத்திரை பக்தர்களுக்கு பிஸ்கட், தண்ணீர் பாட்டில் வழங்கினார்.

திண்டுக்கல் மாவட்டம், வத்தலகுண்டு, பழனி நெடுஞ்சாலை வழியாகபழனி பாதயாத்திரை செல்லும் பக்தர்களுக்கு, மாநில புரட்சி தலைவி அம்மா பேரவை இணை செயலாளர், நத்தம் ஒன்றிய குழு பெருந்தலைவர், ஆர் வி என்.கண்ணன் அவர்களின்பிறந்தநாளை முன்னிட்டு. வத்தலகுண்டு மேற்கு ஒன்றிய ஐடி விங் செயலாளர் பி.மனோஜ் குமார் தலைமையில் வத்தலக்குண்டு வழியாக செல்லும் பழனி பாதயாத்திரை பக்தர்களுக்கு பிஸ்கட் பாக்கெட்டுகள் தண்ணீர் பாட்டில்கள் வழங்கினார். பக்தர்கள் மகிழ்ச்சியுடன் வாங்கிச் சென்றார்கள்.

# மதுரை அனுஷத்தின் அனுக்கிரகம் சார்பில் திருமண ஹோமம், ஆண்டாள் திருக்கல்யாணம்



**மதுரை, ஜன 12-**

மதுரையில் திருமணத்தடை நீக்கும் சுயம்வர கலாபார்வதி மற்றும் கந்தர்வராஜர் யாகங்கள், ஆண்டாள் திருக்கல்யாணம் நடந்தது.

மதுரை அனுஷத்தின் அனுக்கிரகம் அமைப்பு ஏற்பாடு செய்திருந்த இந்த நிகழ்வு எஸ்.எஸ். காலனி, எஸ்.எம்.கே. திருமண மண்டபத்தில் நடந்தது. திருமணம் தள்ளிப் போவோருக்கு சீக்கிரமே நல்ல வரன் அமைய வேண்டி, விசேஷ யாகங்கள் நடத்தப்பட்டன. சந்தோஷ் சாஸ்திரிகள் தலைமையிலான வேத விற்பன்னர்கள் இந்த யாகங்களை நடத்தினர். விசேஷ ஹோமங்களோடு சங்கல்பங்கள் செய்யப்பட்டன.

மாலையில் நெல்லை வெங்கடேஸ்வர பாகவதர் குழுவினரின் ஆண்டாள் திருக்கல்யாண வைபவம் நாம சங்கீர்த்தனம் நடைபெற்றது. நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கு ஸ்ரீகாஞ்சி மகாபெரியவரின் பெரிய அளவிலான பிரேம் செய்யப்பட்ட புகைப்படம், பிரசாதம், அட்சதை வழங்கப்பட்டன. அனுஷத்தின் அனுக்கிரகம் நிறுவனர் நெல்லை பாலு ஏற்பாடுகளை செய்திருந்தார்.

மேலூரில் தி.மு.க. சார்பில் நடைபெற்ற

# ஆலோசனைக் கூட்டத்தில் அமைச்சர் மூர்த்தி பங்கேற்பு




**மேலூர், ஜன. 12-**

மதுரை வடக்கு மாவட்டம், மேலூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பில் பொது உறுப்பினர்கள்ஆலோசனை கூட்டம் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி தலைமையில் மேலூர் மூவேந்தர் பண்பாட்டு கழகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் அமைச்சர் மூர்த்தி பேசியதாவது: தைப் பொங்கல் திருநாளை முன்னிட்டு மதுரை மாவட்டம், அலங்காநல்லூர், பாலமேடு ஜல்லிக்கட்டுக்கு வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களையும், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களையும் மதுரை வடக்கு மாவட்டம் சார்பில் கட்சி நிர்வாகிகள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பான வரவேற்பு கொடுக்க அனைவரும் வருமாறு கூறினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட கழக பொருளாளர் சோமசுந்தரபாண்டியன், மேலூர் தொகுதி பொறுப்பாளர் வ.து.ந. ஆனந்த், தலைமை செயற்குழு உறுப்பினர் கரு. தியாகராஜன், கழக இலக்கிய அணி துணைச்செயலாளர் நேரு பாண்டியன், மேலூர் நகர் கழக செயலாளரும், நகர் மன்ற தலைவர் முகமது யாசின், மேலூர் ஒன்றிய செயலாளர்கள் வ.ரெகுபதி (மேற்கு) செல்வராஜ் (வடக்கு), ராஜேந்திர பிரபு (தெற்கு), இளங்கண்ணன் (கிழக்கு), கொட்டாம்பட்டி ஒன்றிய செயலாளர்கள் பழனி (வடக்கு), ராஜராஜன் (தெற்கு), பால சுப்பிரமணியன் (கிழக்கு), செ. ராஜா (மேற்கு), வல்லாளப்பட்டி பேரூர் கழகச் செயலாளர் குமரன், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் நாவினிப்பட்டி வேலாயுதம், மாவட்ட அமைப்புசாரா ஓட்டுனர் அணி துணை அமைப்பாளர் அட்டப்பட்டி குமார், நகர்மன்ற துணை தலைவர் இளஞ்செழியன் மற்றும் கலைவாணன், குமரேசன், கொன்னடியான், புகழேந்தி, கிருஷ்ணமூர்த்தி, பாலகிருஷ்ணன், கிளை செயலாளர்கள், வட்டகழக செயலாளர்கள், கட்சி தொண்டர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

மதுரையில் மோடி பங்கேற்கும் பொதுக்கூட்ட நிகழ்ச்சிக்கு

# மாநகர காவல் ஆணையரிடம் அனுமதி கடிதம் வழங்கிய தேசிய ஜனநாயக கட்சி கூட்டணி நிர்வாகிகள்

**மதுரை, ஜன 12-**

மதுரையில் வரும் 23-ம் தேதி தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி சார்பில் நடைபெறும் பொதுக்கூட்டம் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற உள்ளது. இந்த பொதுக் கூட்ட நிகழ்ச்சிக்கு அனுமதி கேட்டு மதுரை காவல் ஆணையாளர் அலுவலகத்தில் மனு அளிப்பதற்காக அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் செல்லூர் கே.ராஜூ,ஆர்.பி.உதயகுமார் , சட்டமன்ற உறுப்பினர் ராஜன் செல்லப்பா மற்றும் பா.ஜ.க. சார்பில் பேராசிரியர் ராம சீனிவாசன், மாநகர் மாவட்ட தலைவர் மாரிச்சக்கரவர்த்தி உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் என்.டி.ஏ.கூட்டணி நிர்வாகிகள் காவல் துறை அனுமதிக்கான கடிதத்தை மாநகர காவல் ஆணையர் லோகநாதன் இடம் வழங்கினர்.

பின்னர் பேராசிரியர் ராம சீனிவாசன் கூறியதாவது- ஜனவரி 23-ம் தேதி மதுரை அம்மா திடலில் நடைபெற இருக்கக்கூடிய தேசிய ஜனநாயக கட்சி முதல் பொதுக் கூட்டம் பாரதப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற உள்ளது. அந்தக் கூட்டத்தில் தேசிய ஜனநாயக கட்சியின் கூட்டணியில் அங்கம் வகிக்கக்கூடிய அனைத்து தலைவர்களும் ஒரே மேடையில் பங்கேற்க உள்ளனர். பாரத பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கும் நிகழ்ச்சிக்கான காவல்துறையின் அனுமதிக்கான கடிதத்தை மதுரை மாநகர காவல் ஆணையர் லோகநாதன் சந்தித்து வழங்கி உள்ளோம் என்றார்.

பின்னர் மதுரை மாநகர மாவட்ட அ.தி.மு.க.செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. நிருபர்களிடம் கூறியதாவது-

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமியின் ஆணைக்கிணங்க தேசிய ஜனநாயக கட்சி கூட்டணி தலைவர்கள் பங்கேற்கும் பொது கூட்டத்திற்கான ஏற்பாடு பணிகளை மேற்கொண்டு வருகின்றோம். முதல் பொதுக்கூட்டம் வருகின்ற 23-ம் தேதி மதுரை அம்மா திடலில் நடைபெற உள்ளது. அதில் பாரத பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று உரையாற்ற உள்ளார்.வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் ஆட்சி மாற்றம் உறுதி. பாரத பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்கும் பொதுக்கூட்ட நிகழ்ச்சிக்கு எங்களது கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி முன்னதாக வந்துவிடுவார்.

அவர்கொடுக்கும்ஆலோசனையின் அடிப்படையில் அதற்கான பணிகளை நாங்கள் மேற்கொள்ள உள்ளோம். தேசிய ஜனநாயக கட்சி கூட்டணியில் எந்தெந்த கட்சிகள் அங்கம் வகிக்க போகின்றது என்பது குறித்து இந்த இடத்தில் நாங்கள் கூற முடியாது. எங்கள் கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி தான் அது குறித்து முக்கிய அறிவிப்புகளை வெளியிடுவார். இவ்வாறு அவர் கூறினார்.

ராஜபாளையத்தில்

# காவல்துறையினருக்கு மருத்துவ முகாம்

**ராஜபாளையம், ஜன. 12-**

ராஜபாளையம் காவல்துறையினர் அவர்களின் குடும்பத்தினருக்கும் ரோட்டரி சங்கம் மற்றும் சக்தி மருத்துவமனை இணைந்து மருத்துவ முகாம் காவலர் குடியிருப்பில் நடைபெற்றது.

டிஎஸ்பி பசினா பீவி பரிசோதனை செய்து கொண்டு துவக்கி வைத்தார் முகாமில் பொது மருத்துவம் கண் பரிசோதனை பரிசோதனை செய்து சிகிச்சை செய்து மருந்துகள் வழங்கப்பட்டது சிறப்பு அழைப்பார்களாக டாக்டர்கள் ராஜேஷ் திருமதி ராதா மற்றும் சங்க நிர்வாகிகள் தலைவர் ராமச்சந்திர ராஜா, செயலாளர் கார்த்திகேயன், ஆனந்த் வெங்கட், கவிஞர் ஆனந்தி, பிரியா ஆனந்த் மற்றும் மருத்துவ பணியாளர்கள் உடனிருந்தனர் 200 க்கும் மேற்பட்ட காவல்துறையினர் அவர்களின் குடும்பத்துடன் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.






**இந்திய தேசிய பரிவர்த்தனை உறுப்பினர்கள் சங்கம் ஏற்பாடு செய்த 15வது சர்வதேச மூலதன சந்தை மாநாடு (ஐசிஎம்சி2026), கட்டுப்பாட்டாளர்கள், சந்தை உள்கட்டமைப்பு நிறுவனங்கள், இடைத்தரகர்கள் மற்றும் தொழில்துறை தலைவர்களின் பரந்த பங்கேற்பைக் கண்டது. தொடக்க அமர்வில் உரையாற்றிய இந்தியப் பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (செபி) தலைவர் துஹின் காந்தா பாண்டே, இந்தியாவின் மூலதனச் சந்தைகள் முன்னெப்போதும் இல்லாத அளவு மற்றும் பங்கேற்பைக் கண்டு வருகின்றன, இதனால் தொழில்நுட்பம் சார்ந்த ஒழுங்குமுறை, இணக்கத்தின் எளிமை மற்றும் முதலீட்டாளர் பாதுகாப்பில் அசைக்க முடியாத கவனம் தேவை என்று கூறினார்.**



திருப்பரங்குன்றத்தில் தீப ஏற்றுவதற்காக தன்னுயிர் நீத்தபூர்ணசந்திரன் இல்லத்தில் அவரது உருவபடத்திற்கு முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ எம்.எல்.ஏ. மாலை அணிவித்து மரியாதைசெலுத்திவிட்டு குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறினார். அருகில் எம்.எஸ்.பாண்டியன், ஆர்.அண்ணாத்துரை, பகுதி செயலாளர் வி.கணேசன் மற்றும் நீதிகாந்த், புதூர் சந்திரன், முருகன், முத்துகுமார், பாண்டிசெல்வம், தினேஷ்குமார், பகவதி, வக்கீல் முருகதாஸ், பால்பாண்டி, வேல்மணி, பீபீகுளம் மகேந்திரன், பாண்டித்துரை, சிவா, எம்.ஜி.ஆர்.ஹோட்டல் கண்ணன் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.




மத்திய பிரதேசத்தில் நடந்த தேசிய அளவிலான 69 (எஸ்ஜிஎப்ஐ) துப்பாக்கி சுடுதல் போட்டியில் தமிழ்நாடு சார்பாக (அன்டர் 14, ஓப்பன் சிட்) போட்டியில் கலந்து கொண்டு தனித்து 3-வது இடத்தை மதுரை ஓ.சி.பி.எம். பள்ளி மாணவி பெமு.ஜஹிதுவாரகா பிடித்துள்ளார். அவருக்கு அனைவரும் வாழத்து தெரிவித்து வருகின்றனர்.

# தேர்தல் வாக்குறுதிகளை தி.மு.க. முழுமையாக நிறைவேற்றவில்லை

## மாநில துணை செயலாளர் டாக்டர் விஜயபாண்டி பேட்டி

**மதுரை, ஜன.12-**

தேர்தல் வாக்குறுதிகளை முழுதும் நிறைவேற்றாத விளம்பர ஸ்டாலின் மாடல் அரசை தமிழக மக்கள் வீட்டுக்கு அனுப்புவது உறுதி என மதுரையில் அ.தி.மு.க. மருத்துவர் அணி மாநில துணை செயலாளர் டாக்டர் விஜயபாண்டியன் தெரிவித்தார்.

மதுரையில் அதிமுக மருத்துவர் அணி மாநில துணை செயலாளர் டாக்டர் விஜய பாண்டியன் நிருபர்களிடம் கூறியதாவது:

தமிழகத்தில் கடந்த நான்கரை ஆண்டுகளாக மக்கள் விரோத ஆட்சி நடத்தி வரும் முதல்வர் ஸ்டாலின் தங்கள் சொந்த கட்சி நிதியிலிருந்து



தமிழக மக்களுக்கு பொங்கல் பரிசு ரூ 3000 கொடுத்தது போல கூறி வருகின்றனர் கடை தேங்காயை எடுத்து வழி பிள்ளை யாருக்கு உடைத்தது போல தமிழக அரசு பொதுமக்களின் வரிப்பணம் மற்றும் அரசின் கஜானாவில் இருந்து இப்ப ரூ 35 வழங்குகிறது இது பொது மக்களுக்கும் தெரியும் கடந்த சட்டசபை தேர்தலின் போது பொய்யான வாக்குறுதிகளை அளித்து பொதுமக்களை ஏமாற்றி ஆட்சிக்கு வந்தது தி.மு.க. அரசு கடந்த நான்கரை ஆண்டுகளாக எந்த வாக்குகளையும் நிறைவேற்ற வில்லை ஒன்று இரண்டை தவிர.

பழைய ஓய்வூதிய திட்டத்தை கொண்டு வருவேன் என கூறிய முதல்வர் ஸ்டாலின் கொண்டு வரவில்லை ஆனால் உறுதிப்படுத்தப்பட்ட ஓய்வூதியம் என அரசு ஊழியர்களை ஏமாற்றியுள்ளார் இதை அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் புரிந்து கொண்டுள்ளனர்.

அனைத்து பெண்களுக்கும் ஒரு ஆயிரம் எனக் கூறி குறிப்பிட்ட சிலருக்கு மட்டும் அதுவும் அவர் கட்சி பெண்களுக்கு மட்டும் ரூ 1,000 வழங்குவதையும் பொதுமக்கள் புரிந்து கொண்டுள்ளனர் மறைந்த முதல்வர்கள் எம்ஜிஆர் ஜெயலலிதா வழியில் முன்னாள் முதல்வர் எடப்பாடி யார் நிறைவேற்றிய தாலிக்கு தங்கம் திருமண நிதி உதவி இலவச கல்வி உதாரணங்கள் என அதிமுக ஆட்சியில் கொண்டு வந்த திட்டங்கள் அனைத்தையும் திமுக அரசு இடத்தில் போட்டு விட்டது. இனியும் மக்கள் திமுக அரசு ஏமாற்ற முடியாது வரும் சட்டசபை தேர்தலில் விளம்பர ஸ்டாலின் அரசை தமிழக மக்கள் வீட்டுக்கு அனுப்புவது உறுதி எல்லா தரப்பு மக்களுக்கும் எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றிய அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி யாரை மீண்டும் முதல்வராக மக்கள் முடிவு செய்து விட்டனர். இதைத் தெரிந்து கொண்டு திமுக கூட்டணி கட்சிகள் திமுகவிற்கு நெருக்கடி கொடுத்து வருகின்றனர் இவ்வாறு அதிமுக மருத்துவர் அணி மாநில துணை செயலாளர் டாக்டர் விஜய பாண்டியன் கூறினார்

# கோவையில் நடைபெற்ற 63-வது தேசிய அடக்கவிலையியல் கணக்காளர்கள் மாநாடு

**கோவை, ஜன.12-**

இந்திய அரசின் பெருநிறுவன விவகாரங்கள் அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில், நாடாளுமன்றச் சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்ட சட்டபூர்வ அமைப்பான இந்திய அடக்கவிலையியல் கணக்காளர்கள் நிறுவனம், தனது 63வது தேசிய அடக்கவிலையியல் மற்றும் மேலாண்மைக் கணக்காளர்கள் மாநாடு (NCMAC 2026) ஆனது கோவையில் ஜனவரி 9 – 11 தேதிகளில் நடக்கிறது.

ஆண்டுதோறும் நிகழும் NCMAC, (ICMAI) மிக உயரிய மற்றும் பெருமைமிக்க நிகழ்வாகும். மாநாட்டில், கொள்கை நிர்ணயாளர்கள், அரசு அதிகாரிகள், தொழில்துறை தலைவர்கள், உலகளாவிய தொழில்முறை வல்லுநர்கள், கல்வியாளர்கள் மற்றும் மாணவர்களை ஒன்றிணைத்து, "விக்சித்பாரத் 2047" -என்ற இலக்கினை நோக்கி இந்தியாவின் பொருளாதார மற்றும் தொழில்துறை மாற்றத்தில் அடக்கவிலையியல் கணக்காளர்களின் (CMA) வகிக்கும் வளர்ந்து வரும் பங்கு குறித்து விவாதிக்கிறார்கள்.

NCMAC 2026, "RISE India – இந்தியாவையும் CMA உறுப்பினர்களையும் மறுநிலைப்படுத்தல், வளர்ச்சியை தீவிரப்படுத்தல், திறனை வலுப்படுத்தல் மற்றும் திறன்களை மேம்படுத்தல்" என்ற உட்கருத்தில் நடைபெறுகிறது. NCMAC 2026 மாநாட்டில், தொழில்முறை கட்டமைப்புகள், அரசு மற்றும் அரசு சாரா ஒழுங்குமுறை அமைப்புகள், நிதி நிறுவனங்கள், பிற தொழில்முறை அமைப்புகள் சேர்ந்த 1000 பிரதிநிதிகள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. மாநாட்டின் நிகழ்ச்சிகள் நேரலையாக வழங்கப்படுகிறது. தொழில்முனைவு மனப்பாங்கு, வலுவான தொழில்துறை அடித்தளம், புதுமை சார்ந்த சூழல் ஆகியவற்றில் புகழ்பெற்ற கோவையில், சிறப்பு மிகு இம் மாநாடு நடைபெறுவது பெருமை மிக்க தருணமாகும்" என்று CMA TCA ஸ்ரீனிவாச பிரசாத், தலைவர், ICMAI, முதன்மை புரவலர், 63வது NCMAC 2026 தெரிவித்தார்.

Printed Published and Owned
by S.Manimaran,
Printed at Manimaran
Printers at 9, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 /94

# 200 எம்பி லூமாகலர் போர்ட்ரெய்ட் கேமரா, பவர்ஃபுல் பெர்ஃபார்மென்ஸுடன் ரியல்மி 16 ப்ரோ சீரிஸ் அறிமுகம்

**திருச்சி, ஜன.12-**

மாஸ்டர் டிசைன், சக்திவாய்ந்த பெர்ஃபார்மென்ஸ் மற்றும் 200 எம்பி லூமாகலர் போர்ட்ரெய்ட் மாஸ்டர் கேமரா ஆகிய அம்சங்களுடன், இந்த சீரிஸ் பிரீமியம் மிட்-ரேஞ்ச் பிரிவில் புதிய தரத்தை நிறுவுகிறது. இதில் ரியல்மி 16 ப்ரோ+ மற்றும் ரியல்மி 16 ப்ரோ ஆகிய இரண்டு மாடல்கள் இடம்பெற்றுள்ளன.இந்த அறிமுகம் குறித்து ரியல்மி இந்தியா பேச்சாளர் கூறுகையில், ரியல்மி 16 ப்ரோ சீரிஸ் மூலம், ஃபிளாக்ஷிப் தரத்திலான கேமரா, பிரீமியம் டிசைன் மற்றும் ஹை-பெர்ஃபார்மென்ஸ் அதிகமான பயனர்களுக்கு எளிதாகக் கொண்டு சேர்ப்பதே எங்கள் நோக்கம் என்றார்.

குறிப்பாக 200 எம்பி கேமரா, ஏஐ அடிப்படையில் போட்டோகிராபி அம்சங்கள் மற்றும் ஐபி69 வாட்டர் ரெசிஸ்டன்ஸ் ஆகியவை பயனர்களுக்கு ஒரு புதிய அனுபவத்தை வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.விலை விவரங்கள்: ரியல்மி 16 ப்ரோ+ மாடல் ரூ.39,999 முதல் மற்றும் ரியல்மி 16 ப்ரோ மாடல் ரூ.31,999 முதல் விற்பனைக்கு கிடைக்கிறது. இந்த ஸ்மார்ட்போன்கள் ரியல்மி.காம், பிளிப்கார்ட் மற்றும் அருகிலுள்ள ரீடெயில் ஸ்டோர்களில் கிடைக்கும். கூடுதல் விவரங்களுக்கு: ரியல்மி இந்தியா- +91 80 0000 0000 என்ற எண்ணை அழைக்கவும்.

# கொடைரோடு அருகே தளி கிராமத்தில் பா.ஜ.க.-சார்பில் மோடி பொங்கல் விழா



**வத்தலகுண்டு,ஜன.12-**

திண்டுக்கல் மாவட்டம் கொடைரோடு அருகே உள்ள தளி கிராமத்தில்,பாரதிய ஜனதா கட்சியின் திண்டுக்கல் மாவட்ட பொருளாலர் கருப்புச்சாமி தலைமையில்,தமிழர் திருநாளாம் தைதிருநாளை முன்னிட்டு மோடி பொங்கல் விழா வெகுசிறப்பாக கொண்டாடப்பட்டது,

விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட பாஜக மாநில செயலாளர் கதலி நரசிங்கபெருமாள் 100-க்கும் மேற்பட்ட பெண்களுக்கு சேலை,வேஸ்ட்டி பொங்கள் தொகுப்பு வழங்கினார், இதில் நூற்றுக்கும் மேற்பட்ட பெண்கள் ஆர்வமுடன் கலந்துகொண்டு கரும்பு,மஞ்சளுடன் சக்கரை பொங்கள்வைத்துசூரியபகவானுக்கு படைத்து வழிபட்டனர்,

அதனைத் தொடர்ந்து குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை ஆடல்,பாடல்,திருக்குரல் ஒப்புவித்தல் மற்றும் மியூசிக்கல் சேர் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டு போட்டிகள் நடைபெற்றது,போட்டிகளில் வெற்றிபெற்ற அணைவரையும் பாராட்டி பரிசுகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் நிலக்கோட்டை வடக்கு ஒன்றிய செயலாளர் இராணிகருப்புச்சாமி,மாவட்ட இளைஞரணி தலைவர் சத்தியசீலன்,மத்தியரசு நலத்திட்ட பிரிவு மாவட்ட செயலாளர் வெங்கடேஷ் பிரபு,பாஜக மத்திய தொழில் பிரிவு செயலாளர் அருண்குமார்,ஒன்றிய இளைஞரணி துணைத்தலைவர் அழகுமுருகன், ஒன்றிய இளைஞரணி செயற்குழு உறுப்பினர் விஷ்னு,மாநில அரசு தொடர்புத்துறை செயலாளர் கோவிந்தராஜ்,முன்னால் மாநில செயற்குழுத் தலைவர் சீனிவாசன், கிளைத் தலைவர் வெள்ளைச்சாமி மற்றும் பாஜக நிர்வாகிகள் உட்பட ஏராளமான பொது மக்கள் கலந்துகொண்டனர்.

# மேலூர் அஸ்வினி வித்யாலயா பள்ளியில் மாவட்ட அளவிலான செஸ் போட்டி



**மேலூர், ஜன. 12-**

மதுரை மாவட்டம், மேலூர் சின்னசூரக்குண்டு நான்கு வழிச்சாலை அருகே உள்ள அஸ்வினி வித்யாலயா பள்ளியின் சார்பிலும், மதுரை சாணக்யா செஸ் அகடாமி வழிகாட்டுதலின்படி மாவட்ட அளவிலான முதலாம் ஆண்டு செஸ் போட்டி பள்ளி வளாகத்தில் நடைபெற்றது.

மேலூர் தி.மு.க. நகர்மன்ற உறுப்பினரும், வழக்கறிஞருமான மருதூர் த.அறிவழகன் வரவேற்புரை ஆற்றினார். பள்ளியின் தாளாளர்கள் பெ.தா. சுப்பையா, சு.சரஸ்வதி ஆகியோர் தலைமை தாங்கி தொடங்கி வைத்தனர். பள்ளியின் முதல்வர் சு.பிரபா, பள்ளியின் துணை முதல்வர் சு.சோபனா, உடற்கல்வி ஆசிரியர் செ.முனிச்சாமி, அஸ்வினி பள்ளியின் டிரஸ்டிகள் சு.பிரபாகரன், பி.கார்த்திகா, ராஜி அரசு ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

செஸ் போட்டியில் மதுரை மாவட்டத்திலிருந்து பல்வேறு பள்ளிகளில் இருந்து 200க்கும் மேற்பட்ட மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர். 7 வயது, 9 வயது, 12 வயது, 15 வயது வரை உள்ள ஆண்கள், பெண்கள் என நான்கு பிரிவுகளாக போட்டிகள் நடைபெற்றது. 6 சுற்றுகளாக நடைபெற்று போட்டியில் புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்ற மாணவ, மாணவிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டு சான்றிதழ் மற்றும் பரிசுக் கோப்பைகள் வழங்கப்பட்டது. சாணக்யா செஸ் அகடாமி செயலாளர் சுதாகரன், இணைச்செயலாளர் பிரகதீஷ் ஆகியோர் கலந்து கொண்டனர். செஸ் போட்டியினை மேலூர் அஸ்வினி வித்யாலயா பள்ளியினர் ஏற்பாடு செய்திருந்தனர்.

# ராமநாதபுரத்தில் காங்கிரஸ் கட்சியினர் உண்ணாவிரதம்



**ராமநாதபுரம்,ஜன.12-**

ராமநாதபுரத்தில் மத்திய அரசை கண்டித்து காங்கிரஸ் கட்சியின் சார்பில் உண்ணாவிரத போராட்டம் நடைபெற்றது,

மகாத்மா காந்தி தேசிய வேலை அளிப்பு திட்டத்தை அதே பெயரில் மீண்டும் செயல்படுத்தக் கோரியும், மகாத்மா காந்தி பெயரை நீர்த்து போகச் செய்யும் நோக்கில் செயல்படும் மத்திய பாஜக அரசின் விரோதப் போக்கை கண்டித்து ராமநாதபுரம் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் அரண்மனை பகுதியில் உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது. ராமநாதபுரம் மாவட்ட காங் கமிட்டி பொறுப்புக்குழு உறுப்பினர் ராஜா ராம் பாண்டியன் கோபால் தலைமை வகித்தார்.

மாவட்ட பொறுப்புக்குழு உறுப்பினர் ஜோதிபாலன், மகளிர் காங். தேசியக் குழு உறுப்பினர் ராமலட்சுமி, மாவட்ட துணைத் தலைவர்கள் காமராஜ், துல்கீப், நகர் தலைவர் கோபி, வட்டாரத் தலைவர்கள் காருகுடி சேகர், சேதுபாண்டியன், வழக்கறிஞர் கிருஷ்ண மூர்த்தி, முன்னாள் வட்டாரத் தலைவர் ரத்தினம் முன்னாள் ராணுவப்பிரிவு மாவட்ட தலைவர் கோபால், அபிராமம் பேரூர் தலைவர் ஹரி கிருஷ்ணன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

# நிப்பான் பெயிண்ட் வழங்கும் ஒரு வார கால தீவிர தொழில்நுட்ப பயிற்சி

**மதுரை, ஜன.12-**

நிப்பான் பெயிண்ட் இந்தியா நிறுவனமானது தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடன் இணைந்து, பெயிண்டிங் மற்றும் அலங்காரத் திறன் துறையில் இளம் திறமையாளர்களுக்குப் பயிற்சி அளித்து, அவர்களை வளர்த்தெடுக்கிறது. இது, தேசிய அளவிலான திறன் போட்டிகளுக்குப் போட்டியாளர்களைத் தயார்படுத்தும் மாநில அரசின் முன்முயற்சியின் ஒரு பகுதியாகும். இந்த கூட்டாண்மயானது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தால் 2026 ஆம் ஆண்டு ஜனவரி 7 ஆம் தேதி சென்னையில் உள்ள வள்ளுவர் கோட்டத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட 'TN Skills 2025' விழாவில் முறையாக அங்கீகரிக்கப்பட்டது. இந்த நிகழ்வில் மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாடு அரசின் உயர் அதிகாரிகள், தேசிய திறன் மேம்பாட்டுக் கழகத்தின் (NSDC) பிரதிநிதிகள், தொழில் துறை கூட்டாளிகள் மற்றும் கல்வி நிறுவனங்களின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

நிப்பான் பெயிண்ட் இந்தியாவின் திரு. மார்க் டைட்டஸ் இதுகுறித்துப் பேசுகையில், "நிப்பான் பெயிண்ட் இந்தியாவில், எதிர்காலத்திற்குத் தயாரான ஒரு பணியாளர் குழுவை உருவாக்குவதற்குத் திறன் மேம்பாடு அடிப்படையானது என்று நாங்கள் உறுதியாக நம்புகிறோம். TNSDC-யுடனான எங்கள் கூட்டாண்மை, இளம் திறமையாளர்களுக்குத் தொழில் துறைக்குத் தேவையான திறன்களை வழங்குவதிலும், பெயிண்டிங் மற்றும் அலங்காரத் துறையில் அர்த்தமுள்ள தொழில் வாய்ப்புகளை உருவாக்குவதிலும் உள்ள எங்கள் அர்ப்பணிப்பைப் பிரதிபலிக்கிறது." என்று கூறினார்.

# மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம்

## அமைச்சர் பி.மூர்த்தி - மாவட்ட செயலாளர் மு.மணிமாறன் பங்கேற்பு




**திருமங்கலம், ஜன.12-**

ஜல்லிக்கட்டு போட்டியினை துவக்கி வைத்திட மதுரைக்கு வருகை தரவுள்ள தமிழ்நாடு முதல்வரும் , கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின், தமிழ்நாடு துணை முதல்வரும், கழக இளைஞரணி செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் ஆகியோருக்கு எழுச்சிமிகு வரவேற்பு கொடுப்பது தொடர்பான மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் திருமங்கலம் அருகேயுள்ள மேலக் கோட்டை ஜி.கே.எம் பேலஸில் சிறப்பாக நடைபெற்றது. கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்ட இந்த ஆலோசனை கூட்டத்திற்கு மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் தலைமை வகித்து வரவேற்று பேசினார்.

அப்போது மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் பேசுகையில்: ஜல்லிக்கட்டு போட்டியினை துவக்கி வைத்திட மதுரைக்கு வருகை தந்திடும் தமிழக முதல்வர் மற்றும் துணை முதல்வருக்கு மதுரை தெற்கு மாவட்ட கழகம் சார்பில் சிறப்பான வரவேற்பு அளித்திட ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. தேர்தல் விரைவில் வரவுள்ள நிலையில் கழக வெற்றியை இலக்காக கொண்டு நாம் பணியாற்றிட வேண்டும்.கருத்துக் கணிப்புகள் கழகத்திற்கு சாதகமாக உள்ளது. எனினும் நாம் 2026 சட்டமன்ற தேர்தலில் கழகம் வெற்றி பெற்று 2வது முறை முதலமைச்சராக மு.க. ஸ்டாலின் மக்கள் பணியாற்றிட கடுமையாக களப்பணியாற்றிட வேண்டும் என்று பேசினார்.

இதனை தொடர்ந்து சிறப்பாளராக கலந்து கொண்ட அமைச்சர் பி. மூர்த்தி பேசுகையில்:தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாளை முன்னிட்டு 16-ம் தேதி பாலமேட்டில் நடைபெறும் ஜல்லிக்கட்டு போட்டியை துவக்கி வைக்க தமிழக துணை முதல்வர் உதய நிதி ஸ்டாலினும், 17-ம் தேதி அலங்காநல்லூரில் நடைபெறும் ஜல்லிக்கட்டு போட்டியை துவங்கி வைக்க தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினும் மதுரைக்கு வருகை தர உள்ளார்கள். அவர்களுக்கு நாம் உற்சாகமுடன் எழுச்சி மிகு வரவேற்பளிக்க வேண்டும்.

வரும் பிப்ரவரி மாதம் 21ம் தேதி மதுரை உத்தங்குடியில் தென் மாவட்ட பூத்க மிட்டி நிர்வாகிகள் ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் தமிழக முதல்வர் மு க ஸ்டாலின், துணை முதல்வர் உதய நிதி ஸ்டாலின், துணை பொதுச் செயலாளர் கனிமொழி மற்றும் அமைச்சர்கள் பங்கேற்க உள்ளார்கள். எனவே இத்தனை ஆண்டு காலம் உழைத்து விட்டு கடைசி நேரத்தில் சோர்ந்து விடாதீர்கள். வரக்கூடிய 90 நாட்கள் நமக்கு மிக சவாலான காலம்.ஓய்வின்றி உழைத்து மதுரை மாவட்டத்தில் உள்ள அனைத்து தொகுதிகளிலும் நாம் வெற்றி பெற்றிட வேண்டும் என பேசினார்.

இக்கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஏர்போர்ட் பாண்டியன், இளமகிழன், தொகுதி பொறுப்பாளர்கள் அலாவுதீன் வனராஜா, செல்லத்துரை, முன்னாள் எம்.எல்.ஏ, லதா அதியமான் ஒன்றிய செயலாளர்கள் மதன்குமார், தனபாண்டியன், தங்கப்பாண்டி, பாண்டியன், ஆலம்பட்டி சண்முகம், முத்துராமன், நாகராஜ், ராமமூர்த்தி, தனசேகரன், நகர் செயலாளர் ஸ்ரீதர், நகர் மன்ற தலைவர் ரம்யா முத்துக் குமார், நகர்மன்ற துணை தலைவர் ஆதவன் அதியமான், மாவட்ட அணி அமைப்பாளர்கள் விமல், ஆலங்குளம் செல்வம், கிருத்திகா தங்கப்பாண்டி, பிரமிளா, செல்வேந்திரன்,ஜெயச்சந்திரன், சிவனேசன்,பேரையூர் செயலாளர் வருசை முகமது, மெப்கோ தொழிற் சங்க தலைவர் முத்துக்குமார், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஜெயராஜ், துணை அணி அமைப்பாளர்கள் வக்கீல் கவிஸ்ரீ தினேஷ்,ஜெகதீஸ், சுரேஷ், காளிதாஸ்,தவமணி முருகன், நகரப் பொருளாளர் கவுன்சிலர் சின்னச்சாமி, முன்னாள் நகர்மன்ற தலைவர் நிரஞ்சன் மற்றும் தி.மு.க நிர்வாகிகள் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.கூட்டத்தின் நிறைவில் திருமங்கலம் கிழக்கு ஒன்றிய செயலாளர் தங்கப் பாண்டி நன்றி கூறினார்.

# ஜி.டி.என். கல்லூரியில் ஆசிரியர் மேம்பாட்டு பயிற்சி நிகழ்ச்சி




**திண்டுக்கல், ஜன. 12-**

திண்டுக்கல் ஜி.டி.என். கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சி கவுன்சில், தென் மண்டல மையம், ஹைதராபாத் ஆகியவற்றின் நிதி நல்கையுடன் "நவீன கற்பித்தல், ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க செயல்பாடுகள் – மற்றும் தேசிய தரவரிசை நோக்கில்" என்ற தலைப்பில் மூன்று நாள் ஆசிரியர் மேம்பாட்டு பயிற்சி நிகழ்ச்சி நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் டாக்டர் எஸ். சரவணன் தலைமை தாங்கினார். கல்லூரி செயலாளர் லயன் டாக்டர் கே. ரெத்தினம் நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார்.இயக்குநர் டாக்டர் துரைரெத்தினம், கல்வி இயக்குநர் டாக்டர் என். மார்க்கண்டேயன், துணை முதல்வர் டாக்டர் யு. நடராஜன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இந்திய சமூக அறிவியல் ஆராய்ச்சி கவுன்சில், தென் மண்டல மையமத்தின், இயக்குநர் பேராசிரியர் சுதாகர் ரெட்டி முக்கிய விருந்தினராக கலந்து கொண்டு நிறைவுரையாற்றினார். நிகழ்ச்சியின் தொடக்கத்தில் இயக்குநர் டாக்டர் எம். எம். முருகானந்தம் வரவேற்புரை வழங்கினார்.

மூன்று நாட்கள் நடைபெற்ற பயிற்சி நிகழ்ச்சியில் பேராசிரியர்கள் செந்தில்நாதன்,சன்முகவடிவு, முத்துப்பாண்டி, டாக்டர்.ராமசாமி ஆகியோர் வளமிகு உரைகளை வழங்கினர். தேசியதரக்கட்டுப்பாடு மற்றும் மதிப்பீடுகளுக்கான கல்வித் தரமேம்பாடு, ஆராய்ச்சி வெளியீடுகள், சமூக விரிவாக்கச் செயல்பாடுகள், நவீன கற்பித்தல் உத்திகள் குறித்து விரிவாக விளக்கப்பட்டது. பல்வேறு தென்இந்திய மாநிலங்களைச்சார்ந்தகல்லூரிகளை, பல்கலைக்கழக ஆசிரியர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்கள் பெருமளவில் பங்கேற்று பயனடைந்தனர். நிகழ்ச்சியின் முடிவில் டாக்டர் டி. ஸ்ரீவெணிதேவி நன்றியுரை வழங்கினார்.

# ராமநாதபுரம் நயினார் கோவில் வட்டாரத்தில் டிஜிட்டல் பயிர் கணக்கீடு பணிக்கு அழைப்பு

**பரமக்குடி, ஜன. 12-**

இராமநாதபுரம் மாவட்டம், நயினார் கோவில் வட்டாரத்தில் வேளாண்மை துறை மூலம் ராபி பருவத்திற்கான துல்லியமான பயிர் தரவுகளை சேகரிக்கும் டிஜிட்டல் பயிர் கணக்கீடு பணி தற்போது நடைபெறுகிறது.

இதன் மூலம் அரசு மானிய திட்டங்களுக்கு தேவையான நிதி ஒதுக்கீடு ,பேரிடர் நிவாரண நிதி, பயிர் காப்பீடு இழப்பீட்டு தொகை விரைவாக வழங்குதல் ,வங்கி கடன் பெறுவதை எளிமையாக்குதல் போன்ற நன்மைகளை விவசாயிகள் எளிதில் பெரும் நோக்கில் டிஜிட்டல் பயிர் கணக்கீடு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இக்கணக்கீடு ராபி, காரீப் , கோடை என மூன்று பருவங்களிலும் ஆண்டுதோறும் நடைபெறும்.

தற்போது ராபி பருவ கணக்ககீட்டுப் பணியில் நயினார் கோவில் வட்டாரம் பல்லாவலசை கிராமத்தைச் சேர்ந்த விவசாயி வீரசேகர் என்பவர் தனது விவசாயப் பணிகளை முடித்துவிட்டு தினந்தோறும் 100 முதல் 150 சர்வே உட்பிரிவுகளில் பயிர் தரவுகளை பதிவேற்றம் செய்கிறார். இதன் மூலம் அவருக்கு தினந்தோறும் 300 முதல் 500 வரையில் கிராமத்தில் இருந்தபடியே கூடுதலாக வருமானம் பெற்று வருகிறார். இதேபோன்று முன்னோடி விவசாயிகள், தன்னார்வலர்கள், வேலை தேடும் இளைஞர்கள் கல்லூரி மாணவர்கள் இப்பணியில் ஈடுபட்டு பயன்பெறலாம்.

இப்பணியில் ஈடுபட விருப்பமுள்ளவர்கள் வாட்ஸ்அப் வசதி செல்ஃபோன் வைத்திருக்க வேண்டும். .ஒவ்வொரு சர்வே உட்பிரிவாக வயலில் சென்று கணக்கீடு பணி செய்யலாம் .நாள் ஒன்றுக்கு 250 உட்பிரிவுகள் பதிவேற்றம் செய்தால் ரூபாய் 750 வருமானம் பெறலாம் .எனவே விருப்பமுள்ளவர்கள் தங்கள் பகுதி வேளாண் உதவி இயக்குனர் அலுவலகத்தை தொடர்பு கொள்வதுடன் நயினார் கோவில் வட்டார உதவி வேளாண்மை அலுவலர்கள் மகாலட்சுமி 9361284041,யாமினி 6374633028, பூபாலன் 9360657296,ஆறுமுகம் 9585343666 ஆகியோரை தொடர்பு கொண்டு பயனடையலாம்.

### நியூசி.க்கு எதிராக கோலி அபார பேட்டிங்:

# முதல் போட்டியில் இந்தியா வெற்றி

**மும்பை, ஜன. 12-**

நியூசிலாந்து அணிக்கு எதிராக கோலி அபார பேட்டிங்கால் முதல் போட்டியில் இந்திய அணி ஒருநாள் தொடரை வெற்றியுடன் தொடங்கியுள்ளது.

**3 போட்டிகள்...**

நியூசிலாந்து கிரிக்கெட் அணி 3 ஒருநாள் மற்றும் 5 இருபது ஓவர் போட்டியில் விளையாடுவதற்காக இந்தியா வந்துள்ளது. இதில் இந்தியா-நியூசிலாந்து அணிகள் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் முதலாவது ஒரு நாள் கிரிக்கெட் போட்டி குஜராத் மாநிலம் வதோதராவில் உள்ள கோடாம்பி ஸ்டேடியத்தில் நேற்று நடைபெற்றது .இதில், டாஸ் வென்ற இந்தியா பந்து வீச்சை தேர்வு செய்தது.

கான்வே அபாரம்...

அதன்படி நியூசிலாந்து அணியின் ஹென்ரி நிக்கோலஸ், டேவன் கான்வே ஆகியோர் தொடகக் வீரர்களாக களம் இறங்கினர். இருவரும் முதலில் நிதானமாக விளையாடினர். அதன்பின் அதிரடி ஆட்டத்தை வெளிப்படுத்தினர். இதனால் நியூசிலாந்து அணியின் ஸ்கேர் சீராக உயர்ந்தது.தொடக்க விக்கெட்டுக்கு 117 ரன்கள் சேர்த்த நிலையில் நிக்கோலஸ் 62 ரன்களுக்கு ஆட்டமிழந்தார். தொடர்ந்து கான்வே 56 ரன்களுக்கு ஆட்டமிழந்தார்.

**300 ரன்கள் குவிப்பு...**

பின்னர் வந்த வில் யங் 12 ரன்களில் வெளியேறினார். தொடர்ந்து டேரில் மிட்சேல் சிறப்பாக விளையாடி ரன்கள் குவித்தார். அவர் 84 ரன்களில் ஆட்டமிழந்தார்.இறுதியில் 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கெட் இழப்பிற்கு நியூசிலாந்து அணி 300 ரன்கள் எடுத்தது. இந்திய அணியில் ராணா, சிராஜ் ம, வாஷிங்க்டன் சுந்தர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகள் வீழ்த்தினர்.தொடர்ந்து 301 ரன்கள் இலக்குடன் இந்திய அணி விளையாடியது.

**49 ஓவர்கள்....**

தொடக்க வீரர் ரோகித் சர்மா 26 ரன்களில் அவுட் ஆன நிலையில் விராட் கோலி , கில் இருவரும் சிறப்பாக விளையாடி ரன்கள் குவித்தனர். விராட் கோலி பந்துகளை பவுண்டரி, சிக்சருக்கு பறக்க விட்டார். தொடர்ந்து அதிரடி காட்டிய விராட் கோலி சதமடித்து அசத்தினார். கில் அரைசதம் அடித்து 56 ரன்களில் வெளியேறினார். பொறுப்புடன் விளையாடிய விராட் கோலி சதம் அடிப்பார் என எதிர்பார்க்கப்பட்ட நிலையில் 93 ரன்களில் ஆட்டமிழந்தார். தொடர்ந்து ஷ்ரேயாஸ் அய்யர் 49 ரன்கள் எடுத்தார். இறுதியில் இந்திய அணி 49 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட் இழப்பிற்கு 306 ரன்கள் எடுத்தது.இதனால் 4 விக்கெட்டுகள் வித்தியாசத்தில் இந்திய அணி அபார வெற்றி பெற்றது.

### நியூசி.,க்கு எதிரான தொடர்:

# கீப்பர் ரிஷப் பந்த் நீக்கம்: துருவ் ஜூரெல் சேர்ப்பு

**வதோதரா, ஜன.12-**

நியூசிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடரிலிருந்து விக்கெட் கீப்பர் ரிஷப் பந்த் நீக்கப்பட்டுள்ளார். அவருக்குப் பதிலாக மற்றொரு விக்கெட் கீப்பர் துருவ் ஜூரெல் சேர்க்கப்பட்டுள்ளார்.

**தசைகளில் வலி...**

வதோராவில் விக்கெட் கீப்பர் பேட்டரான ரிஷப் பந்திற்கு வலைப் பயிற்சியில் பேடிங்கின்போது, வலது பக்கவாட்டு வயிற்றுத் தசைகளில் வலி ஏற்பட்டது. பின்னர், எம் ஆர்ஐ ஸ்கேன் எடுக்கப்பட்டது. பிசிசிஐ மருத்துவக் குழு அனைத்து சோதனைகளையும் சோதித்துப் பார்த்தது. பின்னர், ரிஷப் பந்திற்கு பக்கவாட்டு வயிற்றுத் தசைகளில் காயம் ஏற்பட்டுள்ளது கண்டறியப்பட்டது. அதனால், அவருக்குப் பதிலாக துருவ் ஜூரெல் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார்.

**இந்திய அணி:**

சுப்மன் கில், ரோஹித் சர்மா, விராட் கோலி, கே.எல். ராகுல், ஷ்ரேயாஸ் ஐயர், வாஷிங்டன் சுந்தர், ரவீந்திர ஜடேஜா, முகமது சிராஜ், ஹர்ஷித் ராணா, பிரசித் கிருஷ்ணா, குல்தீப் யாதவ், நிதிஷ் குமார் ரெட்டி, அர்ஷ்தீப் சிங், யஷஸ்வி ஜெய்ஸ்வால்.

### விஜய் ஹாசாரேவில் அதிவேக சதம்:

# இந்திய அணியில் ஹர்திக் தேர்வாகாததால் ஆச்சர்யம்

**மும்பை, ஜன. 12-**

இந்திய வீரர் ஹார்திக் பாண்டியா நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் தேர்வு செய்யாதது ரசிகர்களிடையே ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது. விஜய் ஹாசாரே கோப்பையில் அதிவேகமாக சதம் அடித்த அவருக்கு இந்திய ஒருநாள் அணியில் வாய்ப்பளிக்காதது கேள்விகளை எழுப்பியுள்ளது.

**94 போட்டிகளில்...**

ஆல்ரவுண்டரான ஹார்திக் பாண்டியா ஒருவேளை இந்தத் தொடரில் பங்கேற்று பேட்டிங்கில் 96 ரன்கள் பந்துவீச்சில் 9 விக்கெட்டுகள் எடுத்தால் தலைசிறந்த ஆலர்வுண்டர்கள் வரிசையில் அவரது பெயரும் இடம்பெற்றிருக்கும். இதுவரை ஹார்திக் பாண்டியா தனது 94 போட்டிகளில் 68 இன்னிங்ஸ்களில் பேட்டிங் செய்து 1,904 ரன்கள் எடுத்துள்ளார். பந்துவீச்சில் 91 விக்கெட்டுகளும் எடுத்துள்ளார்.

**பங்களிப்பு முக்கியம்...**

இதற்கு முன்பாக 2000 ரன்கள், 100 விக்கெட்டுகள் எடுத்தவர்கள் பட்டியலில் ஷேன் வாட்சன், ஜேக் காலிஸ், சச்சின் டெண்டுல்கர், யுவராஜ் சிங், கபில் தேவ், சனத் ஜெயசூர்யா, விப் ரிச்சர்ட்ஸ், போன்ற ஜாம்பவான்கள் இருந்துள்ளார்கள். நியூசிலாந்துக்கு எதிரான தொடரில் ஹார்திக் பாண்டியா விளையாடி இருந்தால் எளிமையாக இந்தப் பட்டியலில் இடம்பெற்றிருப்பார். ஒருநாள் உலகக் கோப்பை 2027 ஆம் ஆண்டு நடைபெற உள்ள நிலையில், ஹார்திக் பாண்டியாவின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகக் கருதப்படுகிறது.

### மகளிர் பிரீமியர் லீக் தொடர்:

# மும்பை அணி முதல் வெற்றி



**மும்பை, ஜன. 12-**

மகளிர் பிரீமியர் லீக் கிரிக்கெட் தொடரில் டெல்லி கேபிடல்ஸை வீழ்த்தி மும்பை இந்தியன்ஸ் அணி முதல் வெற்றியைப் பதிவு செய்தது.

**முதலில் பேட்டிங்....**

மகளிர் பிரீமியர் லீக் தொடரில் நவி மும்பையில் (ஜன.10) நடைபெற்ற இரண்டாவது போட்டியில் நடப்பு சாம்பியனான மும்பை இந்தியன்ஸ் - டெல்லி கேபிடல்ஸ் அணிகள் விளையாடின. இந்தப் போட்டியில் டாஸ் வென்ற டெல்லி கேபிடல்ஸ் அணியின் கேப்டன் ஜெமிமா ரோட்ரிக்ஸ், மும்பை அணியை முதலில் பேட்டிங் செய்ய அழைத்தார். அதன்படி, முதலில் விளையாடிய மும்பை இந்தியன்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் முடிவில் 4 விக்கெட்டுகளை இழந்து 195 ரன்கள் எடுத்தது.

**ஹர்மன்பிரீத்...**

அந்த அணியில் தொடக்க வீராங்கனைகளான அமெலியா கெர் 0 ரன்னிலும், கமலினி 16 ரன்களிலும் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். நாட் ஷிவர் பிரண்ட் 46 பந்துகளில் 70 ரன்கள் (13 பவுண்டரிகள்) எடுத்து ஆட்டமிழந்தார். கேப்டன் ஹர்மன்பிரீத் கௌர் 42 பந்துகளில் 74 ரன்கள் (8 பவுண்டரிகள் மற்றும் 3 சிக்ஸர்கள்) எடுத்து கடைசி வரை ஆட்டமிழக்கமால் களத்தில் இருந்தார். நிக்கோலா கேரி 12 பந்துகளில் 21 ரன்கள் எடுத்தார்.

**196 ரன்கள்...**

டெல்லி கேபிடல்ஸ் தரப்பில் நந்தனி சர்மா இரண்டு விக்கெட்டுகளைக் கைப்பற்றினார். சின்னலே ஹென்றி மற்றும் ஸ்ரீசரணி தலா ஒரு விக்கெட்டை கைப்பற்றினர். பின்னர், 196 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்கை நோக்கி டெல்லி கேபிடல்ஸ் அணி 19 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 145 ரன்கள் மட்டுமே எடுத்தது. இதன்மூலம், மும்பை அணி 50 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

**மும்பை அணிக்கு...**

அந்த அணியில் அதிகபட்சமாக சின்னெல்லே ஹென்றி 56 ரன்கள் (5 பவுண்டரிகள், 3 சிக்ஸர்கள்) எடுத்தார். மற்ற வீராங்கனைகள் சொற்ப ரன்னில் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர். மும்பை அணித் தரப்பில் அமெலீயா கெர், நிக்கோலா இருவரும் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர். இந்தத் தொடரில் இரண்டாவது போட்டியில் விளையாடிய மும்பை அணிக்கு முதல் வெற்றியாகும். முதல் போட்டியில் விளையாடிய டெல்லி அணி இந்தத் தொடரை தோல்வியுடன் தொடங்கியுள்ளது.

# குஜராத், சோம்நாத் கோவிலில் பிரதமர் மோடி சாமி தரிசனம்

### சவுரியா யாத்திரையிலும் பங்கேற்பு

**அகமதாபாத், ஜன. 12-**

சோம்நாத் கோவிலில் பிரதமர் மோடி, காலை 9.45 மணியளவில் பூஜைகள் செய்து, சாமி தரிசனம் மேற்கொண்டார். இதன்பின்னர் சோம்நாத் கோவிலில் இருந்து புறப்பட்ட சவுரியா யாத்திரையில் பிரதமர் மோடி பங்கேற்றார்.

குஜராத்தில் பிரதமர் மோடி 3 நாள் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ளார். இதற்காக சோம்நாத்துக்கு அவர் நேற்று முன்தினம் சென்றார். துடிப்பான குஜராத் மண்டல் மாநாடு உள்பட பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றார். சோம்நாத் கோவிலின் பெருமையை பிரதிபலிக்கும் வகையில் நடந்த வண்ணமய டிரோன் காட்சிகளையும் கண்டு களித்தார்.

இந்த சூழலில் கிர் சோம்நாத் மாவட்டத்தில் வெராவல் நகர் அருகே அமைந்த பிரபல சோம்நாத் மகாதேவ கோவிலுக்கு நேற்று காலை அவர் சென்றார். இதற்காக ஹெலிபேட்டில் வந்திறங்கிய பிரதமர் மோடியை குஜராத் முதல்வர் பூபேந்திர பட்டேல் நேரில் சென்று சிறப்பான முறையில் வரவேற்றார். சோம்நாத் கோவிலில் பிரதமர் மோடி, காலை 9.45 மணியளவில் பூஜைகள் செய்து, சாமி தரிசனம் மேற்கொண்டார். இதன்பின்னர் சோம்நாத் கோவிலில் இருந்து புறப்பட்ட சவுரியா யாத்திரையில் பிரதமர் மோடி பங்கேற்றார்.

1,000 ஆண்டுகளுக்கு முன் முதன்முறையாக சோம்நாத் கோவில் தாக்கப்பட்டபோது, எதிர்த்து போராடி உயிரிழந்த வீரர்களை நினைவுகூரும் வகையில் 108 குதிரைகள் முன்னே செல்ல இந்த யாத்திரை தொடங்கி நடந்து வருகிறது. 1,026-ம் ஆண்டு இந்த கோவில் மீது முதல் தாக்குதல் நடந்தது. இந்நிலையில், முதல் தாக்குதல் நடந்து 1,000 ஆண்டுகள் முடிந்த வரலாறை குறிக்கும் வகையில் நடந்து வரும் சவுரியா யாத்திரையில் திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

இதனைத்தொடர்ந்து சோமநாதர் சுயமரியாதை விழாவில் பிரதமர் மோடி பேசியதாவது:-

சோமநாதரின் வரலாறு என்பது அழிவு மற்றும் தோல்வியின் வரலாறு அல்ல, அது வெற்றி மற்றும் புத்துணர்ச்சியின் வரலாறு. இது காலத்தின் சுழற்சி. அடிப்படைவாத படையெடுப்பாளர்கள் இப்போது வரலாற்றின் பக்கங்களாக சுருக்கப்பட்டுவிட்டனர், ஆனால் சோமநாதர் கோவில் இன்றும் கம்பீரமாக நிற்கிறது.

பல நூற்றாண்டுகளாக பலமுறை அழிக்கப்பட்ட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், சோமநாதர் கோவில் இன்று மீள்தன்மை, நம்பிக்கை மற்றும் தேசியப் பெருமையின் சக்திவாய்ந்த சின்னமாக கம்பீரமாக நிற்கிறது. இது, கோவிலை அதன் பழங்காலப் பெருமைக்கு மீட்டெடுப்பதற்கான கூட்டுத் தீர்மானம் மற்றும் முயற்சிகளால் சாத்தியமானது.

வெறுப்பு, அட்டூழியம் மற்றும் பயங்கரவாதத்தின் உண்மையான வரலாறு நம்மிடமிருந்து மறைக்கப்பட்டது. அந்தத் தாக்குதல் கோவிலை கொள்ளையடிப்பதற்கான ஒரு முயற்சி என்று நமக்குக் கற்பிக்கப்பட்டது. சுதந்திரத்திற்குப் பிறகு, சர்தார் வல்லபாய் படேல் சோமநாதர் கோவிலை மீண்டும் கட்டும் சபதத்தை மேற்கொண்டபோது, அவரது பாதைக்கு தடைகள் ஏற்பட்டன.

சமாதானப்படுத்தும் அரசியலில் ஈடுபட்டவர்கள், தீவிரவாத மனப்பான்மை கொண்ட அத்தகைய நபர்களுக்கு முன்னால் மண்டியிட்டனர். சோமநாதர் கோவிலின் புனரமைப்புக்குத் தடை ஏற்படுத்த முயன்ற அந்தச் சக்திகள் இன்றும் நம்மிடையே இருக்கின்றன. அத்தகைய சக்திகளைத் தோற்கடிக்க நாம் விழிப்புடனும், ஒற்றுமையுடனும், வலிமையுடனும் இருக்க வேண்டும்.

சோமநாதரின் கதைதான் இந்தியாவின் கதை.. இந்த கோவிலைப் போலவே, அந்நியப் படையெடுப்பாளர்கள் இந்தியாவை பலமுறை அழிக்க முயன்றனர். கோவிலை அழித்ததன் மூலம் தாங்கள் வெற்றி பெற்றுவிட்டதாக அந்த படையெடுப்பாளர்கள் நினைத்தார்கள். ஆனால், 1,000 ஆண்டுகளுக்குப் பிறகும், சோமநாதரின் கொடி இன்றும் உயர்ந்து பறக்கிறது. 1,000 ஆண்டுகால இந்த போராட்டத்திற்கு உலக வரலாற்றில் இணையே இல்லை. இவ்வாறு அவர் கூறினார்.

### அ.தி.மு.க.-பா.ம.க. கூட்டணி:

# அன்புமணிக்கு எதிராக தேர்தல் ஆணையத்துக்கு ராமதாஸ் கடிதம்



**சென்னை, ஜன. 12-**

பா.ம.க. பெயரைப் பயன்படுத்தி அன்புமணி, அ.தி.மு.க.வுடன் கூட்டணிப் பேச்சுவார்த்தை நடத்தியது சட்டவிரோதம் என்றும், கூட்டணி குறித்து பேச தனக்கு மட்டுமே உரிமை உள்ளது என்றும் அன்புமணி மீது நடவடிக்கை எடுக்கக் கோரியும் தலைமை தேர்தல் ஆணையருக்கு பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் கடிதம் எழுதி உள்ளார்.

இதுதொடர்பாக அந்த கடிதத்தில் கூறியிருப்பதாவது:-

பா.ம.க. பெயரை சட்டவிரோதமாக பயன்படுத்தும் அன்புமணி மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும். பா.ம.க. தலைவர் என அன்புமணி உரிமை கோர முடியாது. தேர்தல் கூட்டணி தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்த அன்புமணிக்கு உரிமைக்கு இல்லை. எனக்கு மட்டுமே உரிமை உள்ளது.

அ.தி.மு.க.வுடன் கூட்டணி குறித்து அன்புமணி பேச்சுவார்த்தை நடத்தியது சட்டவிரோதமானது. அவரது செயல்பாடு பா.ம.க.வின் அமைப்பு சட்டத்தின்படி அங்கீகரிக்கப்படவில்லை. தேர்தல் ஆணையத்திற்கு எதிராக மோசடி செயல்களில் ஈடுபட்டு தலைவர் பதவி காலத்தை அன்புமணி நீட்டித்துக் கொண்டார்.

அன்புமணி கட்சித் தலைவராக இருந்த போது தேர்தலில் தோல்வி அடைந்ததால் பா.ம.க. அங்கீகாரத்தை இழந்தது. அன்புமணி தனது தலைவர் பதவியை நீட்டிக்க மோசடி செய்துள்ளார். அன்புமணியை பா.ம.க. தலைவராக நீட்டித்ததற்கு எதிரான வழக்கு டெல்லி ஐகோர்ட்டில் நிலுவையில் இருக்கிறது. கடந்த ஆண்டு டிசம்பர் 17ம் தேதி நான் பா.ம.க. தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டேன். அனுமதியின்றி பா.ம.க. பெயரை அன்புமணி பயன்படுத்துவது குறித்து தேர்தல் ஆணையம் விளம்பரம் செய்ய வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### திண்டுக்கல் அருகே பரபரப்பு:

# கொலை வழக்கில் ரவுடி சுட்டுப்பிடிப்பு



**திண்டுக்கல், ஜன. 12-**

திண்டுக்கல் சவேரியார்பாளையம் அருகே கொலை வழக்கில் தொடர்புடைய ரவுடி ஒருவர் போலீசாரால் சுட்டுபிடிக்கப்பட்டார்.

3 கொலைகள் உட்பட 15 வழக்குகளில் தொடர்புடைய விக்னேஸ்வரன் என்ற ரவுடியை பிடிக்க சென்றபோது, காவல் சார்பு ஆய்வாளரை அரிவாளால் தாக்கிவிட்டு தப்ப முயன்றவரை போலீசார் சுட்டுப்பிடித்தனர். போலீசார் சுட்டதில் வலது முட்டியில் காயமடைந்து விக்னேஸ்வரன் சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

### ஈரோட்டில் உள்ள சாலைக்கு

# ‘தியாகி குமரன் சாலை’ என பெயர் சூட்டினார் முதல்வர்



**சென்னை, ஜன. 12-**

ஈரோட்டில் உள்ள சாலைக்கு ‘தியாகி குமரன் சாலை’ என முதல்வர் மு.க.ஸ்டாலின் பெயர் சூட்டினார்.

தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:- காந்தியப் பாதையில் போராடி, அந்நிய ஆட்சியின் அடக்குமுறைகளை நெஞ்சுரத்தோடு எதிர்கொண்டு உயிர்துறந்த தியாகி திருப்பூர் குமரன் அவர்களின் நினைவுநாள். இந்திய விடுதலைப் போராட்டத்தில் பங்குபெற்ற தமிழர்களின் பெருமையைப் போற்றும் நாம், கொடி காத்த குமரன் அவர்களின் திருவுருவச்சிலையை ஈரோட்டில் நிறுவியதோடு, ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு எதிரில் உள்ள சாலைக்குத் ‘தியாகி குமரன் சாலை’ என்றும் பெயர் சூட்டியுள்ளோம். இன்னுயிரைவிடவும் தன்மானமும் தாய்நாட்டுப் பற்றும் பெரிதென வாழ்ந்த திருப்பூர்-குமரன் அவர்களின் புகழ் நாடெங்கும் பரவச் செய்வோம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.




**துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னை துறைமுகத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற இந்திய சர்வதேச இளையோர் பாய்மரப் படகு சாம்பியன்ஷிப் 2026 போட்டியில் வெற்றி பெற்ற வீரர், வீராங்கனைகளுக்கு பதக்கம் அணிவித்து பாராட்டு தெரிவித்தார்.**

### புதிய ஓய்வூதிய திட்டம்:

# தமிழ்நாடு அரசு ஊழியர்கள் உண்மையை ஒருநாள் நிச்சயம் உணர்வார்கள்: இ.பி.எஸ்.



**சென்னை, ஜன. 12-**

ஓய்வூதியத் திட்ட விவகாரத்தில் உண்மையை அரசு ஊழியர்கள் ஒருநாள் உணர்வார்கள் என்று அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில், பழைய ஓய்வூதியத் திட்டம், மீண்டும் கொண்டுவரப்படும் என 2021-ல் தேர்தல் வாக்குறுதியாக அளித்து ஆட்சிக்கு வந்த தி.மு.க. கடந்த நான்கரை ஆண்டுகாலமாக எதுவும் செய்யாமல், அரசு ஊழியர்களின் தொடர் போராட்டங்களை சமாளிப்பதற்கு, ஆட்சி முடியப்போகும் நேரத்தில் ‘உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம்’ என்ற ஒரு ஏமாற்று மாடல் திட்டத்தை அறிவித்து அரசு ஊழியர்களை ஏமாற்றியுள்ளது இந்த தி.மு.க. அரசு.

‘மத்திய அரசு, குன்றிய அரசு’ என்று எதற்கெடுத்தாலும் மத்திய அரசை குறைகூறும் தி.மு.க. அரசின் முதல்வர் ஸ்டாலின், மத்திய அரசால் கொண்டுவரப்பட்ட ‘ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தின்’ பெயரை மாற்றி விட்டு, தற்போது தமிழ் நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டம் என்று அறிவித்துள்ளது.

பழைய ஓய்வூதியத் திட்டம் கொண்டுவரப்படும் என்று வாக்குறுதி அளித்து விட்டு, ஆட்சிக்கு வந்தபின் அரசு ஊழியர்களை இது வரை ஏமாற்றி வந்த நிலையில், 2026 சட்டமன்றப் பொதுத் தேர்தலை எதிர்கொள்வதற்கும், அரசு ஊழியர்களின் போராட்டங்களை தற்காலிகமாக சமாளிப்பதற்கும், பங்களிப்புடன் கூடிய மத்திய அரசின் ஒருங்கிணைந்த ஓய்வூதியத் திட்டத்தை, தமிழ் நாடு உறுதியளிக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டமாக அறிவித்து மீண்டும் அரசு ஊழியர்களை ஏமாற்றியுள்ளார் தி.மு.க. அரசின் முதல்வர் ஸ்டாலின். இச்செயல் ‘புதிய மொந்தையில் பழைய கள்’ என்ற பழமொழியைத்தான் நினைவுபடுத்துகிறது.

எனவே, எதிர்பார்த்தபடி பெரிய மாற்றம் ஏதுமில்லை என்பதை பல அரசு ஊழியர்கள் உணர்ந்திருந்தாலும், இனிப்பு என்ற பெயரில் பொய்யை மூடி மறைத்த சங்க நிர்வாகிகள், புதிய திட்டத்தை ஏற்றுக்கொண்டு புன்னகைப்பது வேடிக்கையாக உள்ளது. உண்மையை அரசு ஊழியர்கள் ஒருநாள் உணர்வார்கள். தாங்கள் ஏமாற்றப்பட்டதையும், அதற்கு சங்க நிர்வாகிகள் துணை போயுள்ளனர் என்பதையும் புரிந்து கொள்வார்கள். அதற்கு வரும் தேர்தலில் தி.மு.க.-வை தோற்கடித்து தக்க பரிசைத் தருவார்கள். இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

### தமிழ்நாடு முழுவதும் இதுவரை

# 1.86 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் ரொக்கத் தொகை விநியோகம்

### அமைச்சர் பெரியகருப்பன் தகவல்

**சென்னை, ஜன. 12-**

தமிழ்நாடு முழுவதும் இதுவரை 1.39 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு வேட்டி, சேலைகள் வழங்கப்பட்டுள்ளது என்று அமைச்சர் பெரியகருப்பன் தெரிவித்துள்ளார்.

அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் முகாம்வாழ் இலங்கை தமிழர்கள் குடும்பங்களுக்கு இன்று வரை 24,924 ரேஷன் கடைகளில் உள்ள 1,86,23,426 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் ரொக்கத் தொகை ரூ.5,587.02 கோடி விநியோகம் செய்யப்பட்டுள்ளது எனவும், 1,39,06,292 வேட்டி, சேலைகளும் வழங்கப்பட்டுள்ளது என்றும் அமைச்சர் பெரியகருப்பன் தெரிவித்துள்ளார். இதுதொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழர் திருநாளாம் தைப் பொங்கல் 2026 திருநாளை மக்கள் அனைவரும் சிறப்பாகக் கொண்டாடும் வகையில், தமிழ்நாடு அரசு 2,22,91,710 எண்ணிக்கையிலான அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் பொங்கல் பரிசுத் தொகுப்பாக ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை மற்றும் ஒரு முழு நீளக்கரும்பு வழங்கப்படும் எனவும், பொங்கல் திருநாளை மேலும் சிறப்பாக கொண்டாட அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பங்களுக்கும் ரொக்கப் பரிசாக ரூ.3,000 வழங்கப்படும்” எனவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார்.

முதல்வர் மு.க. ஸ்டாலின் கடந்த 8-ந்தேதி சென்னை, பட்ரோடு ரேஷன் கடையில் அரிசி குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் பரிசுத் தொகுப்பினையும், வேட்டி, சேலைகளையும் வழங்கி, தொடங்கி வைத்தார். மேலும், துணை முதல்வர் சென்னை, சிந்தாதரிப்பேட்டை ரேஷன் கடையிலும், அந்தந்த மாவட்டங்களில் அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மூலமாக இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது.

தமிழ்நாடு முழுவதும் அனைத்து அரிசி குடும்ப அட்டைதாரர்கள் மற்றும் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் குடும்பத்தினர் ஆகியோர்களுக்கு 2026 பொங்கல் பரிசுத் தொகுப்பிற்கான டோக்கன்கள் குடும்ப அட்டைதாரர்களுக்கு 04.01.2026 முதல் 07.01.2026 வரை தொடர்புடைய ரேஷன் கடைப் பணியாளர்களால் வழங்கப்பட்டது.

இதில், முதல் நாள் 200 குடும்ப அட்டைத்தாரர்களும், இரண்டாம் நாள் 300 முதல் 400 வரையிலான குடும்ப அட்டைதாரர்கள் பொங்கல் பரிசுத் தொகுப்பு பெறுவதற்கு ஏதுவாக தொடர்புடைய ரேஷன் கடைப் பணியாளர்களால் டோக்கன்கள் விநியோகம் செய்யப்பட்டது. இதற்காக சுமார் 50,000 கூட்டுறவுத்துறை பணியாளர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக அனைத்து அரிசி பெறும் குடும்ப அட்டைதாரர்களுக்கும் பொங்கல் பரிசு வழங்கும் வகையில் பணிகள் நடைபெற்று வருகிறது.

இந்த டிஜிட்டல் மயமான காலகட்டத்தில் அனைவருக்கும் பொங்கல் பரிசு தொகை ரொக்கமாக வழங்கிட கூட்டுறவுத் துறையின் சிறப்பான திட்டமிடல் மற்றும் தொய்வில்லாமலும், விரைவாக குறைந்த காலத்தில் வழங்கப்பட்டுள்ளது. இந்த நடைமுறை பிற தேசிய வங்கிகள் செய்ய முடியாததை, கூட்டுறவு வங்கி திறம்பட செய்து சாதித்துள்ளது. 11.1.2026 இன்று வரை 24,924 ரேஷன் கடைகளில் உள்ள 1,86,23,426 குடும்ப அட்டைதாரர்களுக்கு பொங்கல் ரொக்கத் தொகை ரூ. 5587.02 கோடி விநியோகம் செய்யப்பட்டுள்ளது எனவும், 1,39,06,292 வேட்டி, சேலைகளும் வழங்கப்பட்டுள்ளது என கூட்டுறவுத் துறை அமைச்சர் பெரியகருப்பன் தெரிவித்துள்ளார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உங்கள் நட்சத்திர பலன்கள்

( 12.01.2026 முதல் 18.01.2026 வரை )

ஜோதிடர்
எஸ். விஜயநரசிம்மன், மதுரை.

## மேஷம்

(அஸ்வினி-1, 2, 3, 4 பாதங்கள்—பரணி-1, 2, 3, 4 பாதங்கள்—கார்த்திகை-1, பாதம்)

அஸ்வினி --

இந்த வாரம் எதிர்பாராத தன வரவு மூலம் ஏற்றம் காண்பீர்கள். அரசு வகையில் எதிர்பார்த்த ஆதாயம் மற்றும் உதவிகளால் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். உங்கள் திறமை மிக்க செயல்களால் வெற்றிகளும், பாராட்டுதல்களும் குவியும். தங்கள் வாழ்க்கையில் மனைவி மூலமாக முன்னேற்றத்துக்கான நல்ல ஆலோசனைகள் கிடைக்கும். வெளியூர்ப் பயணங்கள், வெற்றிகரமாகவும், லாபகரமாகவும் அமையும். இல்லத்தில் மகிழ்ச்சி பொங்க, மங்கல காரியங்கள் ஈடேறும். அரசுப் பணி புரிபவர்களுக்கு உயர் அதிகாரிகளின் ஆதரவு இருப்பதால், எதிரிகளின் கொட்டம் அடங்கும். அரசு பணிபுரியும் பெண்கள் தங்களுக்கு விருப்பமான இடத்திற்கு இடமாற்றம் பெற முயற்சிப்பர்.

பரணி --

இந்த வாரம் மனதிற்கினிய தகவல்கள் வந்து சேரும். தன வரவு அதிகரிக்கும். நண்பர்கள் மற்றும் உறவுகளின் வருகையால் உள்ளம் மகிழும். சினிமா, டிராமா, மால் எனப் பொழுது இனிமையாக கழியும். விற்பனைப் பிரதிநிதிகளின் வாக்கு வன்மையால் பொருட்களின் விற்பனை சூடுபிடிக்கும். தொழிலில் எதிர்பார்த்தபடி லாபங்கள் பெறுவதற்கான வழி முறைகளைக் கையாண்டு வெற்றி அடைவீர்கள். போட்டியாளர்களை காட்டிலும் அரிய சாதனைகள் புரிவார்கள். சிலரின் உடல் நலிவுறும். பெண்களுடன் விவாதம் செய்வதைத் தவிர்க்கவும். சிலருக்கு வீண் அலைச்சல்கள், வெட்டிச் செலவுகளும் தவிர்க்க முடியாத தாகும். பூஜா வழிபாடுகளால் எண்ணிய எண்ணங்கள் ஈடேறும்.

கார்த்திகை 1 ஆம் பாதம்.—

இந்த வாரம் பக்தியில் அதிக நாட்டம் ஏற்படும். குழந்தைகளின் முன்னேற்றம் மனதில் மகிழ்ச்சியை தோற்றுவிக்கும். உயர் ரக ஆடை ஆபரணங்கள் மற்றும் விரும்பிய பொருட்களெல்லாம் வீடு வந்து சேரும். திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். மக்கள் சேவையில் ஈடுபடுவது காரணமாக மக்களால் பாராட்டப்படுவீர்கள். வியாபாரிகள் புதிய வியாபார நுணுக்கங்களை புகுத்தி ஆதாயம் காண்பர். சிலருக்கு பணி நிமித்தமான வெளிநாட்டுப் பயணங்கள் ஏற்படும். இரவு பயணங்களின் போது எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. மதிப்பு மிக்க மனிதர்களின் நட்பால் அரசுப் பணியாளர்களின் ஆசைகள் நிறைவேறும். பெண்கள் தங்கள் செலவைக் குறைத்து சேமிப்பை உயர்த்த முற்பட வேண்டும்.

## ரிஷபம்

(கார்த்திகை – 2,3,4 பாதங்கள்-ரோகிணி-1,2,3,4-பாதங்கள்-மிருகசிரீடம்-1,2 பாதங்கள் )

கார்த்திகை 2,3,4 பாதங்கள் –

இந்த வாரம் எதிர்பார்த்த இனங்களில் இருந்து தன வருமானம் தாராளமாக இருக்கும். குடும்ப உறவுகளின் ஒத்துழைப்பால் வீட்டில் அமைதி நிலவும். பெற்றோரின் உடல் நிலையில் அக்கறை எடுத்தல் அவசியம். பிறமொழி பேசும் பெண்களின் நட்பினால் வாழ்க்கையில் முன்னேற்றம் ஏற்படும். கணவன், மனைவி இடையே அன்பும் பாசமும் பெருகும். அரசுப் பணியாளர்களுக்கு அவர்கள் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் தாமதப்படலாம். புத்தி சாதுர்யத்தால் வாழ்க்கையில் பொருளாதார நிலை சீராகும். குழந்தைகள் படிப்பு வகையில் செலவுகள் அதிகரிக்கும். எதிர்கால தொழில் முன்னேற்றத்தை கருத்தில் கொண்டு விரிவாக்கத் திட்டங்களில் முதலீடுகள் செய்வது முன்னேற்றத்தைத் தரும்.

ரோகிணி –

இந்த வாரம் தெய்வப் பிரார்த்தனையால், தாமதமான திருமணங்களும் தடையின்றி நடக்கும். உறவுகளுடன் சென்று மகான்கள் தரிசனம் செய்து மகிழ்வார்கள். அழகிய ஆடை ஆபரணங்கள் அணிவதால் மனமகிழ்ச்சி ஏற்படும். தாயின் அன்பும் அரவணைப்பும் மகிழ்ச்சி தரும். பிராயணங்கள் மூலம் புதிய முயற்சிகளில் இறங்கித் தொழில் முன்னேற்றம் காண முயல்வீர்கள். இடம் விட்டு இடம் மாறி வேறு இடத்தில் வாழ நேரும். இலாபம் அதிகம் பெற புதிய விற்பனை யுக்திகளை கையாளுவீர்கள். சிலரின் கற்பனை வளம் பெருகி, கதை, கவிதை எனத் திறம்பட எழுதி புகழ் பெறுவர். பொறாமை காரணமாக நண்பர்களே பகைவரா அவர். சுறுசுறுப்பற்ற நிலையில் காரியத் தடைகள் ஏற்படும்.

மிருகசிரீஷம் – 1 , 2 பாதங்கள் –

இந்த வாரம் மனதுக்குப் பிரியமான மங்கையுடன் ஏற்படும் இனிய பயணங்களால் இன்புறுவீர் கள். வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தாய் மாமனுக்கு நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும். ஆக்கபூர்வமான ஆலோசனை அளித்து அன்பு நண்பர்கள் தங்கள் முன்னேற்றத்திற்கு உதவுவர். இன்பச் சுற்றுலா போன்ற, இனிய பயணங்களால் இன்பத்தில் திளைப்பார்கள். குடும்பத்தில் இதுவரை இருந்து வந்த பிரச்சனைகள் நீங்கி ஒற்றுமையும், உயர்வும் ஏற்படும். அரசுவகையில் எதிர்பார்த்த உதவிகள் அனைத்தும் தாமதமின்றி கிடைக்கும்.

## மிதுனம்

(மிருகசிரீடம்- 3,4 பாதங்கள், திருவா திரை-1,2,3,4 பாதங்கள், புனர்பூசம் -1,2,3 பாதங்கள்)

மிருகசிரீஷம் – 3 , 4 பாதங்கள்.

இந்த வாரம் உங்கள் செயல்திறன் கூடும். பல வழிகளிலும் வெற்றி மேல் வெற்றி வரும். செல்வ நிலையும் உயரும். பணிபுரியும் பெண்களுக்கு திருமண காலம் கூடிவரும். அனைத்து வசதிகளுடன் கூடிய அழகிய தனி வீடு அமையும். வெளிநாடு செல்லும் வாய்ப்புகள் வரும். பிற்கால நலன்கருதி சேமிப்புக்கள், பங்குச் சந்தை ஆகியவற்றில் முதலீடு செய்வது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு உயர் அதிகாரிகள் ஆதரவால் பணியில் முன்னேற்றங்கள் ஏற்படும். சிலருக்குப் புது வாகன யோகம் ஏற்படும். கூட்டாளிகளின் நியாயமற்ற நடவடிக்கைகள் உங்கள் மனதில் குழப்பத்தை தரும். குழந்தைகளின் தேர்ச்சி மனதிற்கு மகிழ்ச்சியைத் தரும். விவசாயிகளுக்கு அரசின் உதவிகள் எதிர்பார்த்தபடி எளிதில் கிடைக்கும்.

திருவாதிரை –

இந்த வாரம் மனதுக்கு மிகவும் பிடித்தமான பழைய உறவுகளின் வரவு இதயக் கோட்டையில், தென்றல் என வீசும். மணமேடை ஏறும் மங்கல நாளும் வந்து, மனதில் மகிழ்ச்சி மலர்கள் பூக்கும். சிலர் வீட்டில் அள்ளி அணைத்திடவே பிள்ளைச் செல்வம், துள்ளி விளையாடும். வியாபாரத்தில் இருந்து வந்த மந்த நிலைகள் மாறி வேகம் பிறக்கும். அதன் காரணமாக லாபமும் அதிகரிக்கும். உயர் அதிகாரிகளால் பாராட்டப்பட்டு பதவி உயர்வின் மூலம் பணப் பலன்களை அடைவார்கள். வாகனங்களில் செல்லும் போது எச்சரிக்கையுடன் இருந்தால் விபத்தினைத் தவிர்க்கலாம். கவனம் தேவை. மாணவர்கள் காலத்தை வீணாக்காமல் கருத்துடன் படித்துப் பெற்றோர்களுக்குப் பெருமை சேர்க்க வேண்டும்.

புனர்பூசம் – 1, 2, 3 – பாதங்கள்.

இந்த வாரம் கையில் பணமும் மனதில் மகிழ்ச்சியும் பொங்கி வழியும். எதையும் சாதிக்கும் திறனும், நினைத்ததை நினைத்தபடியே முடிக்கும் முனைப்பும் உங்களுக்கு வாழ்க்கையில் நல்ல முன்னேற்றத்தைத் தரும். புத்திர பாக்கியம் ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் ஆகியவை கிடைக்கும். நல்ல நண்பர்கள் அமைவர். மதிப்பும் மரியாதையும் கூடும். பணியில் உள்ளவர்கள் மிகுந்த அக்கறையுடன் செயல்பட்டால், வாழ்க்கையில் முன்னேற்றங்களையும், சுகானுபவங்கள் மற்றும் கௌரவத்தையும் அடைவீர்கள். தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். கல்வியில் வெற்றி பெறக் கவனமாகப் படிக்க வேண்டும்.

## கடகம்

(புனர்பூசம்- 4 ஆம் பாதம், பூசம்-1,2,3,4 பாதங்கள், ஆயில்யம்-1,2,3,4 பாதங்கள்)

புனர்பூசம் – 4 ஆம் பாதம்.

இந்த வாரம் காரியங்கள் அனைத்தும் சிறப்புற, வெற்றிகரமாக நடக்கும். புதிய நண்பர்கள் சேர்க்கை, தொழிலில் இலாபம் ஆகியவை ஏற்படும். கற்பனை வளம் பெருகும். தாய் மூலம் நன்மைகள் ஏற்படும். நீங்கள் எப்போதும் பணம் விஷயம் பற்றிய சிந்தனையுடன் இருப்பார்கள். சினத்தை அடக்கி உடன் பிறப்புகளுடன் ஒத்துச் செல்வது நல்லது. இடைவிடாத வேலை காரணமாக நேரத்துக்கு உணவருந்த முடியாத நிலை ஏற்படும். விருந்து, மகிழ்ச்சி கொண்டாட்டம், ஆரவாரம், என வீட்டில் மகிழ்ச்சி பொங்கும். சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். இந்த நாட்களில் உங்கள் திறமை மிக்க செயல்பாடுகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். நீங்கள் எதிர்பார்த்த இடங்களில் இருந்து பணவரவு தாராளமாக இருக்கும்.

பூசம் –

இந்த வாரம் நல்ல குரு வாய்க்கப் பெற்று ஆன்மீக வழியில் அறிவுத் தெளிவு ஏற்படும் ஆடை, ஆபரணங்கள், நல்ல உணவு, எதிர்பாராத தனவரவு ஆகியவை ஏற்படும். கௌரவப் பட்டங்கள், பதவிகள் தேடிவரும். உங்களுக்குத் தெய்வ சிந்தனைகள் மனதில் அமைதி நிலவும். பயிர், மனை இவற்றால் இலாபம் ஏற்படும். வியாபார நிமித்தமாக தொலைதூரப் பயணங்களின் மூலம் நன்மை ஏற்படும். சிலருக்கு வெற்றிகரமான தொழில் முன்னேற்றங்கள் ஏற்படும். எதிர்பாராத தனவரவு உண்டு. சுற்றத்தார் மூலமாகவும் பணவுதவி கிடைக்கும். உயர் அதிகாரிகள் ஆதரவால் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். புதிய நண்பர்களால் நன்மையும் ஏற்படும்.

ஆயில்யம் –

இந்த வாரம் சிலருக்குத் திருமணப் பேச்சுக்கள் ஆரம்பமாகும். சந்ததி விருத்தி ஏற்படும். மனோதைரியம் அதிகரிப்பதன் காரணமாக எவரையும் எதிர்த்து வெற்றி பெறுவீர்கள். தொழிலில் எதிர்பார்த்த படி பல வழிகளிலும் தனவரவு அதிகரிக்கும். தந்தை வர்க்கத்தினரால் நன்மைகள் பல ஏற்படும் அரசுப் பணியாளர்களுக்கு புதிய பதவியும், பொறுப்பும் கிடைக்கும். வாகன வசதியும், நற்கல்வியும் கிடைக்கும். சிலருக்கு அரசாங்க விருதுகள் கிடைக்கும். வாக்கு வன்மை ஓங்கும். புதிய வியாபார யுக்திகள் அதிக இலாபம் அடைவீர்கள். சிலருக்கு வீடு, மனை ஆகியவை கிடைக்கும். பூரண சயன சுகம் ஏற்படும். பிறருக்கு உதவும் நல்ல எண்ணம் மேலோங்கும்.

## சிம்மம்

(மகம்-1,2,3,4 பாதங்கள்,பூரம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திரம்- 1 பாதம்)

மகம் –

இந்த வாரம் பதவி உயர்வுகள் தேடி வரும். குடும்பத்தில் உள்ளவர்களின் அனுசரணையால், குழப்பங்கள் நீங்கி குதூகலம் உருவாகும். குழந்தைகளின் ஆரோக்கியத்தில் மிகுந்த கவனம் தேவை. பெண்களின் அறிவுத்திறன் கூடும். பண விஷயங்களில் மிகவும் எச்சரிக்கையுடன் இருப்பது நல்லது. நல்லவர்களுடன் ஏற்படும் பழக்கத்தால் நல்ல முன்னேற்றம் ஏற்படும். செல்வாக்கு மிக்க நபர்களின் உதவிகள் மூலம் பொருளாதார நிலைகள் உயர்ந்து வலுப்பெறும். சிறு தொழில் புரிபவர்களுக்கு வங்கிக் கடன் உதவிகள் கிடைக்கும் தொழில் சிறக்கும். வாழ்க்கையில் எல்லாவித முன்னேற்றங்கள் ஏற்படும். உங்கள் தொழில் விஷயமாக தீட்டிய முக்கியத் திட்டங்கள் நிறைவேற எடுத்த புதிய நடவடிக்கைகள் வெற்றி பெறும்.

பூரம் –

இந்த வாரம் சிலருக்கு இடமாற்றங்கள், பயணத்தில் துன்பம், கடன் கொடுத்தவர்களின் கெடுபிடி, சகோதரர் விரோதம், அரசு வகைத் தொல்லை, ஆகியவை ஏற்படும். எனவே துன்பம் வரும் போது துவளாமல், தைரியத்துடன் வாழ்க்கையில் முன்னேற முயலுங்கள். அரசாங்கத்திடம் இருந்து அனுகூலமான செய்திகள் மற்றும் தகவல்கள் வந்து சேரும். தொழிலில் விஸ்தரிப்பு நடவடிக்கைகள் மூலம் வருமான வாய்ப்புகள் பெருகும். கோபத்தைக் குறைத்தால் குடும்பத்தில் குழப்பங்கள் குறையும். தந்தைவழி உறவுகளால் தேவையற்ற தொல்லைகள் ஏற்படலாம். தீயவர்கள் தொடர்பால் சஞ்சலம் ஏற்பட வாய்ப்புண்டு. வியாபாரத்தில் புதிய யுக்திகளை புகுத்தி, இலாபம் எனும் வெற்றிக் கனியைப் பறிப்பார்கள்.

உத்திரம்- 1 பாதம் –

இந்த வாரம் தந்தை வழி உறவுகள் உதவி செய்வார்கள். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். இளைஞர்களுக்குப் புதிய வேலைவாய்ப்புக்கள் ஏற்படும். விருந்தினர் வருகையால் மனம் மகிழ்ச்சி ஏற்படும். அவர்களுடன் சினிமா போன்ற கேளிக்கை ஈடுபாட்டால் செலவுகள் அதிகரிக்கும். சிலருக்குக் காரியத்தடைகள், கால தாமதங்கள் ஏற்படும். மற்றவர்கள் உயர்வைக் கண்டு பொறாமை கொள்ளாதிருப்பது நல்லது. வியாபாரத்தில் விரிவாக்கத் திட்டங்கள் வாடிக்கையாளர்களை கவர்ந்து இலாபத்தைப் பெருக்கிக் கொள்வீர்கள். எதிர்பார்த்தபடி தனவரவுகள் கைக்கு வந்து சேரும். வந்த பணத்தை தர்ம காரியங்களுக்கு தாராளமாகச் செலவு செய்து மகிழ்வார்கள்.

## கன்னி

( உத்திரம் – 2, 3, 4-பாதங்கள், ஹஸ்தம்-1, 2, 3, 4 பாதங்கள், சித்திரை – 1,2 பாதங்கள்)

உத்திரம் – 2, 3, 4 – பாதங்கள்.

இந்த வாரம் நல்ல பல கருத்துக்களை கேட்பதின் மூலம் உங்களுக்கு ஞான தன்மை அதிகரிக்கும். பக்தி மார்க்கத்தில் செல்ல மனைவியின் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும். புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமான வருவாய் பெருக்கம் ஏற்படும். தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த நல்ல செய்திகள் வரும். சுபகாரிய செலவுகள் ஏற்படும். புதிய முயற்சிகள் மூலம் பண வருமானம் அதிகரிக்கும். வாடிக்கையாளரிடம் நட்புப் பாராட்டும் வியாபாரிகளுக்கு அதிக இலாபம் கிடைக்கும். அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும்.

அஸ்தம் –

இந்த வாரம் சுபகாரியங்களுக்கான ஏற்பாடுகள் நடக்கும். வீடே விழாக்கோலம் காணும். திடீரென ஏற்படும். பயணங்களால் ஆதாயமும், மகிழ்ச்சியும் ஏற்படும். அரசுப் பணியாளர்களுக்கு எதிர்பார்த்தபடி தலைமைப் பதவிகள் தேடி வரும். வீரம் பொங்கும். தங்கள் சேவைகள் அனைவராலும் அங்கீகரிக்கப்படும். இசை ஆர்வத்தால் சங்கீத சபாக்களுக்கு சென்று இசை கேட்டு மகிழ்வார்கள். நீங்கள் எதிர்பாராத விதத்தில் இடமாற்றங்கள் ஏற்படலாம். மகான்களின் தரிசனத்தால் மனம் மகிழ்வதோடு, மனதில் அமைதியும் நிலவும். வியாபாரிகளுக்கு முதலீடுகள் அதிகரித்து இலாபமும் அதிகரிக்கும். உத்தியோகம் மற்றும் தொழிலில் அபிவிருத்தி ஏற்படும். புத்திர பாக்கியம் ஏற்படும். தொழில் வாய்ப்புகள் பிரகாசமாய் இருக்கும்.

சித்திரை – 1,2 பாதங்கள் –

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். மனைவி மூலம் மட்டற்ற மகிழ்ச்சி நிலவும். வாக்கால் வருமானம் பெருகும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். அரசாங்கத்தால் அனுகூலம் உண்டு. விரும்பிய பொருட்களை எல்லாம் வாங்கிக் குவிப்பீர்கள். சுகமும் ஆடை ஆபரண சேர்க்கை, புத்திர பாக்கியம் மற்றும் எதிர்பாராத பண வரவுகள் ஆகியவை ஏற்படும். புதிய தொழில் முயற்சிகள் அரசு உதவியுடன் வெற்றி பெரும். கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தரும சிந்தனையும் ஏற்படும். சிலருக்கு உயர்ரக வாகனங்கள் கிடைக்கும். பிரபலமானவர்களின் ஆறுதலும், அன்பும் கிடைக்கும். புத்தக வெளியீடு போன்ற தொழில்களில் முன்னேற்றம் ஏற்பட்டு, ஆதாயம் அதிகரிக்கும்.

## துலாம்

( சித்திரை-3,4 பாதங்கள், சுவாதி – 1,2,3,4 பாதங்கள் மற்றும்விசாகம்-1,2,3 பாதங்கள்)

சித்திரை-3,4 பாதங்கள் –

இந்த வாரம் திருமணம் ஆகாதவர்களுக்கு திருமணம் நடக்கும். உயர்ரக வாகனங்கள் வாங்கும் யோகம் அமையும். பணம் சம்பாதிப்பதில் ஆக்கமும், ஊக்கமும் ஏற்படும். பல புண்ணியத் தலங்களுக்கு பயணம் செய்யும் வாய்ப்பு கிட்டும். சிலர் பிறரால் குற்றம் சாற்றப்பட்டு அவதிப்பட நேரும். பணிபுரியும் பெண்கள் பதவி உயர்வுகளை எதிர்பார்க்கலாம். சிலருக்கு ஓரளவு பணவரவு இருக்கும். உடன் பிறந்தவர்களுடன் அனுசரித்துச் செல்வது நல்லது. கல்வியில் தேர்ச்சி, தெய்வ சிந்தனை மற்றும் தர்ம சிந்தனையும் ஏற்படும். வீண் மனஸ்தாபங்கள் தவிர்த்தால் வீட்டில் அமைதி நிலவும். புது புது முயற்சியில் ஈடுபட்டு நல்ல வேலையில் சேரும் யோகம் ஏற்படும்.

சுவாதி –

இந்த வாரம் ஆரவாரம் மிக்க வாரம். விருந்துகளில் கலந்துகொண்டு நண்பர்களுடன் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் பொழுதைக் கழிப்பீர்கள். சிறப்பான பலன்களைத் எதிர்பார்க்கலாம் அரசியல்வாதிகளிடமும் மற்றும் அரசாங்கத்திடமும் எதிர்பார்த்த அனுகூலங்கள் அனைத்தும் தாமதமின்றிக் கிடைக்கும். தொழில் சம்பந்தமான முயற்சிகள் வெற்றித் திக்கை நோக்கிச் செல்லும். கவர்ச்சிகரமான பொருட்களைப் பரிசாக அறிவித்து வியாபாரிகள் தங்கள் வாடிக்கையாளர்களைக் கவர்ந்து இலாபத்தை அதிகரித்துக் கொள்வர். நண்பர்கள் விரும்பி வந்து உதவி செய்வார்கள். பக்திச் சொற்பொழிவுகளைக் கேட்பதில் ஆர்வமும், மகிழ்ச்சியும் ஏற்படும்.

விசாகம்- 1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் புத்திர பாக்கியம், சுபகாரிய நிகழ்ச்சிகள் ஆகியவற்றால் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும். மகான்களின் ஆசியும், புதிய தொடர்புகள் நன்மைகளும் ஏற்படும். விரிவாக்கங்கள் செய்வதால் தொழிலில் நல்ல வளர்ச்சி ஏற்படும். திடீர்ப் பயணங்கள் மூலம் ஆதாயங்கள் ஏற்படும். புதிய கடன்கள் வாங்கிப் பழைய கடன்களை அடைத்து விடுவார்கள். புதிய தொழில் தொடங்க எடுக்கப்படும் முயற்சிகள் வெற்றி பெறும் காலம் கனிந்து வரும். அரசு பணியில் உள்ளவர்களுக்கு அதிகாரிகளின் அன்பு மற்றும் ஆதரவால் பணி உயர்வு நினைத்தபடி கிடைக்கும். போட்டி, பந்தயங்களில் வெற்றி கிடைக்கும். கல்வியில் தேர்ச்சி ஏற்பட கடின உழைப்பு தேவை.

## விருச்சிகம்

(விசாகம்- 4, அனுஷம்-1,2,3,4 பாதங்கள் மற்றும் கேட்டை -1,2,3,4 பாதங்கள் )

விசாகம்- 4 ஆம் பாதம் –

இந்த வாரம் சுபச் செய்திகள் எதிர்பார்க்கலாம். உங்களுக்கு மிக்க அனுகூலமான வாரம். பல வழிகளிலும் தனவரவு ஏற்படும். எந்தக் காரியத்தையும் திறம்படச் செய்யும் உங்கள் செயல்திறன் கூடும். அதன் காரணமாக உங்கள் பணி இலக்கை அடைவீர்கள். சிலருக்கு மற்றவர்களுக்கு ஆணையிடும் உயர் பதவி கிடைக்கும். புதிதாக வேலை தேடுபவர்களுக்கு நல்ல காலம் பிறக்கும். மாணவர்கள் தங்கள் கிரகிப்புத் தன்மையால் தங்கள் கல்வியின் தரத்தை உயர்த்திக் கொள்வர். பொருளாதார நிலைகள் திருப்திகரமாக இருக்கும். பழைய கடன்கள் விரைவில் வசூலாகும். எதிர்பாராத இடத்தில் இருந்து வந்த பணவரவால் மனம் மகிழும். தங்கள் சகோதரனின் நடவடிக்கைகள் உங்களுக்கு எரிச்சலூட்டும்.

அனுஷம் –

இந்த வாரம் அழகிய ஆடை ஆபரணங்கள் வாங்குவீர்கள். உறவு மற்றும் நண்பர்கள் பூரண ஒத்துழைப்பு கிடைக்கும் தூர தேசங்களில் இருந்து எதிர்பார்த்த சுபகாரிய செய்திகள் வருவது உறுதி. செலவுகளும் அதிகரிக்கும். மேடைப் பேச்சாளர்கள் புகழ் பெறுவர். வாக்குவாதத்தால் குடும்பத்தில் பிரச்சனைகள் எழலாம். அனாவசிய செலவுகளை குறைப்பது நல்லது. அதிகாரிகள் நட்பால் ஆதாயம் பெறுவீர்கள். நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி பெறும் புதிய கொள்முதல் மூலம் தொழிலில் அதிகமான ஆதாயம் ஏற்படும். வியாபாரப் பயணங்கள் மூலம் வரவேண்டிய பாக்கிகள் அனைத்தும் வசூல் செய்து விடுவார்கள். ஏமாற்றத்தை தவிர்க்க கூட்டாளிகளிடம் எச்சரிக்கையாக இருப்பது நல்லது.

கேட்டை –

இந்த வாரம் உடன்பிறப்புகளிடம் இருந்து நீங்கள் எதிர்பார்க்கும் பணவுதவி கள் கிடைக்கும். புதிய வீடு, பூமி வாங்கக் கூடிய சந்தர்ப்பங்கள் உருவாகலாம். வாகனங்களில் செல்லும் போது கவனமாக செல்லவும். எல்லா வசதிகளும் இன்பமும் ஏற்படும் என எதிர்பார்க்க முடியாது. ஏதாவது மனக்குறை இருந்து கொண்டே இருக்கும். தலைவலி போன்ற சிறு சிறு உபாதைகள் ஏற்படலாம். நல்ல உயர்ந்த மனிதர்களின், பண்பு மிக்கவர்களின் நட்பு ஏற்படும். சிலருக்குப் பயணங்களிலும், அரசு வகையில் தொல்லைகள் ஏற்படலாம். தொழிலில் பணியாளர்கள் ஒத்துழைப்புக் குறைவால், உற்பத்தி திறனை குறையும் வாய்ப்பு ஏற்படலாம். சிறப்பான உடை அணிந்து மிடுக்காக உலா வருவீர்கள்.

## தனுசு

( மூலம்-1,2,3,4 பாதங்கள், பூராடம்- 1,2,3,4 பாதங்கள் மற்றும் உத்திராடம் –1 பாதம்)

மூலம் –

இந்த வாரம் தனவரவு அதிகரிப்பால் குடும்பத்தில் மகிழ்ச்சியும் அதிகரிக்கும். நவநாகரீக ஆடைகள் வாங்கி உடுத்தி மகிழ்வதோடு, உறவுகள் வருகையால் உள்ளம் மகிழும். உறவுகளுடன் உயர்தர உணவகங்களில் உணவருந்தும் மகிழ்வீர்கள். சிலருக்கு வீண் பேச்சு, வீண் அலைச்சல் மற்றும் வீண் செலவுகள் ஏற்படும். மிகப் பெரிய சாகசங்களைப் புரிவீர்கள். அதிகாரிகளுடன் வீண் சச்சரவுகளை விலக்கினால் பணியில் எதிர்பார்த்த உயர்வுகள் இருக்கும். சம்பாதிக்கும் திறன் மேம்படும். மிகக் கடினமான வேலைகளையும் தன்னம்பிக்கை காரணமாக சிறப்பாக செய்து முடிப்பீர்கள். அரசு வேலைக்கு மனு செய்தவர்கள் அனுகூலமான பதில் பெறுவர். வியாபாரிகளுக்கு வியாபாரம் ஏற்ற இறக்கமின்றி ஒரே சீராக இருக்கும்.

பூராடம் –

இந்த வாரம் குடும்ப சந்தோஷம் குறைவில்லாது நிறைந்திருக்கும். தம்பதிகளிடையே அன்யோன்யம் அதிகரிக்கும். வீட்டில் திருமண வைபவங்களை எதிர்பார்க்கலாம். பெரியவர்கள் ஆசியால் நீங்கள் எடுக்கும் அனைத்து முயற்சிகளும் வெற்றி அடையும். அண்டை வீட்டார், நண்பர்கள் மற்றும் சகோதரரால் உங்கள் பிரச்சனைகளுக்கு ஒரு முடிவு வரும். பிள்ளைப்பேறு, புதிய தொழில் வாய்ப்புகள், லாட்டரி யோகங்கள், புண்ணிய ஸ்தல தரிசனங்கள் ஆகியவை ஏற்படும். பண விஷயத்தைப் பொறுத்தவரை திருப்திகரமான வாரமாக இருக்கும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி உண்டாகும். அரசுப் பதவியில் உள்ளவர்கள் தயவால் அனுகூலமான பலன்களை அடைவர். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும்.

உத்திராடம் –1 ஆம் பாதம் –

இந்த வாரம் புதிய பெண்கள் தொடர்பு ஏற்படும். புதுத்தெம்பு, உற்சாகமும் கூடும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூரண சுகம் கிடைக்கும். நண்பர்கள் பகைவர்களாக மாறும் காலமாதலால் நண்பர்களிடம் தடித்த வார்த்தைகளை பயன்படுத்தாமல் இருப்பது நல்லது. எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடைய அதிக உழைப்பு உழைத்தால்தான் அதற்கேற்ற இலாபமோ, பலனோ கிடைக்கும். சிலருக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம். புத்தி தெளிவு ஏற்படும், அதன் காரணமாக செயல்திறன் அதிகரிக்கும். வாகன வசதிகள் மேம்படும். அந்தஸ்து உயரும். தொலை தூரத்திலிருந்து நற்செய்திகள் வந்து மகிழ்ச்சி அளிக்கும்.

## மகரம்

( உத்திராடம்- 2,3,4-பாதங்கள், திருவோ ணம்-1,2,3,4 மற்றும் அவிட்டம் 1,2 பாதங்கள் )

உத்திராடம்- 2,3,4- பாதங்கள் ---

இந்த வாரம் உறவுகளை அனுசரித்து சென்றால் அவர்களின் உதவிகள் கேட்காமலே கிடைக்கும். ஆடம்பரச் செலவுகளை குறைத்து பொருளாதாரச் சிக்கல்களில் இருந்து மீளலாம். மாணவர்கள் தங்கள் கல்வியில் முழு கவனம் செலுத்தினால் மட்டுமே அதிக மதிப்பெண்கள் பெற இயலும். வேலையில் சிரத்தையும், கடின உழைப்பு ஆகியவை தொழிலில் நல்ல முன்னேற்றங்களைத் தரும். அப்போதுதான் உங்கள் கஜானாவும் பணத்தால் நிரம்பும். தட்டிக் கொடுத்து வேலை வாங்கினால் உங்களுக்கு கீழ் பணிபுரிபவர்கள் வேலையில் கை கொடுப்பர். அதன் காரணமாக உற்பத்தி பெருகி, இலாபமும் அதிகரிக்கும். மற்றவர்களிடம் பேசும் போது எச்சரிக்கையுடன் பேசவும்.

திருவோணம் -

இந்த வாரம் அன்னையின் அன்பும் அரவணைப்பு மற்றும் உதவிகளும் ஆதரவாய் இருக்கும். திருமணமாகாத பெண்களுக்கு திருமணத்துக்கு உரிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும். அவசியமற்ற, அலைச்சல் தரும் பயணங்கள் மேற்கொள்ள நேரும். அரசு ஊழியர்களுக்குக் கட்டளைகளை இடும் அதிகாரம் மிக்க உயர் பதவிகள் கிடைக்கும். பிள்ளைகளிடம் நல்ல உயர்வான முன்னேற்றங்களை எதிர்பார்க்கலாம். சுகமான சுற்றுலாப் பயணங்களின் மூலம் மனதில் மகிழ்ச்சி பொங்கும். வாகனங்களில் செல்கையில் எச்சரிக்கை தேவை. உதவிகரமான புதிய நண்பர்கள் கிடைப்பர். எழுத்துத் தொழிலில் முன்னேற்றம் ஏற்படும். தாய் மாமனுக்கும் நன்மை ஏற்படும். சிலருக்குக் கௌரவப் பட்டங்கள் கிடைக்கும்.

அவிட்டம் 1,2 பாதங்கள் –

இந்த வாரம் சுக சௌகரியங்கள் அதிகரிக்கும்.. சுபசெய்திகளால் மனம் மகிழும். வெளிநாட்டுப் பயணம் மற்றும் வாணிபத்தால் தன லாபம் அதிகரிக்கும். வீட்டில் அமைதியும், நிம்மதியும் நிலவும். மனைவியின் பேச்சைக் கேட்டு நடக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படும். வீண் செலவுகளை குறைத்து சேமித்து வைப்பது நல்லது. வியாபாரத்தில் போட்டிகளைச் சமாளிக்க கடினமாக உழைத்தால் மட்டுமே ஆதாயம் கிடைக்கும். விவசாயிகளுக்கு அதிக மகசூல் ஏற்பட்டு, இலாபத்தால் வசதிகள் பெருகும். பணிபுரியும் பெண்கள் தங்கள் உயர் அதிகாரிகள் ஆதரவால் முன்னேற்றம் காண்பர். பக்தி மார்க்கத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். சுபகாரிய நிகழ்ச்சிகள் மூலம் இல்லத்தில் மகிழ்ச்சி பொங்கும்

## கும்பம்

(அவிட்டம் – 3,4 பாதங்கள்– சதயம்-1,2,3,4 பாதங்கள்-பூரட்டாதி-1,2,3 பாதங்கள்)

அவிட்டம் – 3,4 பாதங்கள்—

இந்த வாரம் பல வழிகளிலும் இருந்தும் பணம் கூடுதலாக வரும். மனைவியுடன் கருத்து வேறுபாடு ஏற்படாது இருக்க அனுசரித்துச் செல்வது நல்லது. எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தொழிலில் புதிய திட்டங்களைத் தீட்டி முன்னேற முயல்வீர்கள். உறவுகள் வருகையால் சந்தோஷம் பெருகுவது போல், செலவுகளும் அதிகரிக்கும். சிறப்பான பொதுசனத் தொடர்பு காரணமாக உபரி வருமானம் கிடைக்கும். நண்பர்கள் மற்றும் உறவினர்களுடன் வீண் வாக்குவாதம் செய்யாதிருப்பது நல்லது. பூமி அல்லது வாகனம் வாங்கும் யோகம் ஏற்படும். அதுபோல் உங்கள் எதிரிகளிடம் இருந்து விலகி இருப்பது நல்லது. உங்கள் நற்குணங்கள் அனைவரின் பாராட்டையும் பெறும்.

சதயம்-

இந்த வாரம் உங்களுக்கு இனிய வாரம். புண்ணியத் திருத்தலம் யாத்திரைகள் செல்வதால் மகிழ்ச்சியும் மன அமைதியும் ஏற்படும். சீரான பொருளாதார உயர்வினால் எப்போதும் மனதில் மகிழ்ச்சி பொங்கும். பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். குடும்பத்தாருக்கும் அவர்கள் ஆசைகள் நிறைவேறுவதால் குதுகலமாய் இருப்பர். அனுபவ பூர்வமான அறிவுத்திறன் கூடும், பூமி, வீடு மூலம் இலாபம் ஏற்படும். சிலருக்கு வீண் விரயங்கள் ஏற்படலாம். மனைவியின் பணிவிடை மகிழ்ச்சி தரும். மதிப்பு, கௌரவம் உயரும். சோம்பேறித்தனம் அதிகரிக்கும். பெண்களுக்கு ஆன்மீகத்தில் ஈடுபாடு, அதன் காரணமாக குடும்ப முன்னேற்றம் ஏற்படும்.

பூரட்டாதி-1,2,3 பாதங்கள் –

இந்த வாரம் பொன் பொருள் ஆபரணங்கள் ஆகியவை விதவிதமாகக் கிடைக்கும். நல்ல பண்பாளர்களின் நட்பும், அன்பும் கிடைக்கும். மனதில் தெய்வ பக்தி மேலிடும். மனதில் நினைத்ததை நினைத்தபடியே சாதிக்கும் திறன் அதிகரிக்கும். நல் ஆரோக்கியம் ஏற்படும். அழகான, எழில் நிறைந்த வீடு கிடைக்கும். சிலருக்கு குடும்ப வாழ்க்கையில் குழப்பம் வரலாம். கடன் கொடுத்தவர்கள் கண்டிப்புடன் நடந்து கொள்வர். தொழிலில் ஏற்படும் இலாபம் மூலம் பண வருவாய் அதிகரிக்கும். வியாபாரிகள் எதிர்பார்த்தபடி வங்கிக் கடன்கள் சிரமமின்றிக் கிடைக்கும். உறவுகள், நண்பர்கள் மற்றும் குடும்பத்தினர் ஆகியோரின் ஒத்துழைப்பால் அகம் மகிழும். எடுத்த முயற்சிகள் யாவும் வெற்றி அடைய அதிக உழைப்பு தேவைப்படும்.

## மீனம்

( பூரட்டாதி – 4 ஆம் பாதம், உத்திரட்டாதி-1,2.3.4 பாதங்கள் , ரேவதி- 1,2,3,4 பாதங்கள்)

பூரட்டாதி – 4 ஆம் பாதம் –

இந்த வாரம் மிகுந்த உற்சாகத்துடன் பக்தி மார்க்கத்தில் ஈடுபடுவீர்கள். கடின உழைப்பால் நீங்கள் பெறும் வெற்றிகளால் அனைவரின் பாராட்டையும் பெறுவீர்கள். மங்கையரால் மன மகிழ்ச்சியும், அரசாங்கத்தால் இலாபமும் ஏற்படும். சம்பாதித்த பணத்தை புதிய முதலீட்டுத் திட்டங்கள் மூலம் சேமிக்க முற்படுவீர்கள். நீண்ட நாட்களுக்குப் பின்னர் வந்த பழைய உறவுகளின் வரவு மகிழ்வைத் தரும். பணிபுரியும் பெண்களுக்கு தற்போது இருக்கும் வேலையை காட்டிலும் நல்ல வேலைக்குப் போகும் வாய்ப்புகள் அமையும். பல வகையான உயர்ந்த வாகன வசதி அமையும். சிலருக்குப் பெரிய இடத்துப் பெண் மனைவியாக அமைவாள். மனைவி மூலம் பூர்ண சுகம் கிடைக்கும்.

உத்திரட்டாதி-

இந்த வாரம் வீட்டில் சுபமங்கள காரியங்கள் காரணமாக தாராளமான பணச் செலவுகள் ஏற்படும் இனிய தகவல்கள் இல்லம் தேடி வரும். சுற்றமும், நட்பும் சூழ சுபகாரியப் பேச்சுக்கள் நடைபெறும். எச்சரிக்கையுடன் செயல்பட்டு எதிரிகளின் திட்டங்களை முறியடிப்பீர்கள். அரசு பதவியில் உள்ளவர்கள் உயர் அதிகாரிகளின் தயவால் பயன் பெறுவர். நல்ல புத்திர பாக்கியம் ஏற்படும். நெருங்கிய நண்பர்களின் உதவியால் கூட்டாளிகளிடையே ஏற்பட இருந்த குழப்பங்கள் சரியாகும். வீட்டு வாடகை வசூல் திருப்திகரமாக இருக்கும். வீட்டுக்குத் தேவையான நவீன உபகரணங்களை வாங்கி மகிழ்வீர்கள். வியாபார சம்பந்தமான வெளிநாட்டுப் பயணங்கள் இலாபம் தரும்.

ரேவதி-

இந்த வாரம் பயணங்களால் அலைச்சல்கள் அதிகரிக்கும். மேலதிகாரிகளை அனுசரித்துச் செல்வது, பணி உயர்வு மற்றும் முன்னேற்றத்திற்கு நல்லது. உடல் உபாதைகள் காரணமாகத் தொழிலில் உற்பத்தி பாதிப்புகள் ஏற்படலாம். ஆயினும், எதிர்பார்த்த இனங்களில் இருந்து தனவரவு ஏற்படும். குடும்ப உறவுகளின் ஒத்துழைப்பால் குடும்ப முன்னேற்றம் சாத்தியப்படும். நவீன காலத்துக்கு ஏற்றபடி புதுப்புது சாமான்களை அறிமுகப்படுத்தி வியாபாரத்தில் ஏற்றம் காண்பீர்கள். அரசுப் பணியாளர்கள் அக்கறையுடன் பணிபுரிந்து, அதிகாரிகள் பாராட்டுதல்களை பெறுவீர்கள். தீய குணம் உள்ள நபர்களிடம் இருந்து விலகி இருப்பதே நல்லது. புதிய முதலீடுகளால் தொழிலில் ஏற்றம் காணலாம்.



சென்னை நந்தம்பாக்கம் வர்த்தக மையத்தில் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறையின் சார்பில் 'தமிழால் இணைவோம், தரணியில் உயர்வோம்' என்ற தலைப்பில் நடைபெற்ற அயலகத் தமிழர் தினம் - 2026 விழாவினையொட்டி அமைக்கப்பட்ட கண்காட்சி அரங்கத்தினை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் தா.மோ. அன்பரசன், சா.மு.நாசர், பாராளுமன்ற உறுப்பினர்கள் கலாநிதி வீராசாமி, கவிஞர் சல்மா, தமிழ்நாடு அயலகத் தமிழர் நல வாரியத் தலைவர் கார்த்திகேய சிவசேனாபதி உள்பட வெளிநாடு வாழ் தமிழர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, கன்னிமாரா நூலகத்தை பார்வையிட்டு அதில் பணிபுரியும் ஊழியர்களிடம் சராசரியாக ஒரு நாளைக்கு எத்தனை வாசகர்கள் நூலகத்திற்கு வருகிறார்கள், விடுமுறை நாட்களில் எவ்வளவு வாசகர்கள் வருகிறார்கள் என்னும் விவரங்களை கேட்டறிந்தார். இந்நிகழ்வின்போது துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




புதுடெல்லியில் மத்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தலைமையில் மாநில நிதி அமைச்சர்களுடனான மத்திய அரசின் நிதிநிலை அறிக்கைக்கான முன்னோடி ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தமிழ்நாடு அரசின் நிதி, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத் துறை அமைச்சர் தங்கம் தென்னரசு, நிதித் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் உதயச்சந்திரன், இணைச் செயலாளர் (பட்ஜெட்) பிரத்திக் தாயள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# தமிழகத்தில் கூட்டணி ஆட்சி... (1-ம் பக்க தொடர்ச்சி)

தமிழ்நாட்டில் 1.30 கோடிக்கும் அதிகமான பெண்கள் மாதம்தோறும் ஆயிரம் ரூபாய் மகளிர் உரிமைத் தொகை பெற்று வருகின்றனர். பெண்களுக்கு விரைவில் இனிப்பான செய்தி வரும் என்றார்.

### ஒரு நற்செய்தி...

அரசு மகளிர் உரிமைத் தொகையை எப்போதிலிருந்து உயர்த்தி வழங்கப் போகிறது எவ்வளவு உயர்த்தி வழங்கப் போகிறது என்று எதிர்பார்ப்பு எகிறியுள்ளது. இந்த நிலையில் அமைச்சர் ஐ.பெரியசாமி பொங்கல் பண்டிகை முடிவதற்குள் பெண்களுக்கு ஒரு நற்செய்தி வரும் எனக் கூறியிருப்பது மகளிர் உரிமை தொகையை உயர்த்தி வழங்கும் அறிவிப்பாக இருக்குமோ என்ற எதிர்பார்ப்பினை அதிகரிக்க செய்திருக்கிறது.

### நேரடியாக வரவு...

2021-ம் ஆண்டு தேர்தலில் தி.மு.க.வுக்கு மகளிர் வாக்குகள் கிடைக்க முக்கிய காரணமாக இருந்தது மகளிர் உரிமை தொகை திட்டம். 2023-ம் ஆண்டு முதல் இந்த திட்டம் செயல்படுத்தப்படுகிறது. குடும்ப வருமானத்தின் அடிப்படையில் பெண்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்களுக்கு மாதம் 1000 ரூபாய் வங்கி கணக்கிலேயே நேரடியாக வரவு வைக்கப்பட்டுவிடுகிறது.

### மிகவும் உதவியாக...

இந்த திட்டத்தில் தங்களுக்கு கிடைக்கக்கூடிய பணம் குழந்தைகளின் கல்வி, மருத்துவ செலவு , சிறு சேமிப்பு என பல்வேறு விஷயங்களுக்கு மிகவும் உதவியாக இருக்கிறது என ஏராளமான பெண்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர். கூடிய விரைவில் தமிழ்நாட்டில் சட்டமன்ற தேர்தல் நடைபெற இருப்பதால் மகளிர் உரிமை தொகையை உயர்த்தி வழங்குவதற்கான அறிவிப்பை முதல்வர் மு.க.ஸ்டாலின் வெளியிடலாம் என பேச்சுகள் எழுந்துள்ளன.



வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வத்தை அனைத்து மாவட்ட விவசாய சங்க பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் சந்தித்து, தமிழ்நாடு முதல்வருக்கும், தமிழ்நாடு அரசிற்கும் பொங்கல் நல்வாழ்த்துகளையும், நன்றியினையும் தெரிவித்தனர்.



அ.தி.மு.க. பொதுசெயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித்தலைவருமான, எடப்பாடி கே. பழனிச்சாமியை அ.தி.மு.க. மாநில தகவல் தொழில்நுட்ப பிரிவு துணைத்தலைவர் கௌரிசங்கர் நேரில் சந்தித்து வாழ்த்து கூறி வாழ்த்து பெற்றார்.

# தமிழர்களின் உரிமைகளை... (1-ம் பக்க தொடர்ச்சி)

மக்களின் அடிப்படை உரிமைகளை மறுப்பதற்கு வழிவகுத்தது என்றும் தெரிவித்துள்ள அவர், உள்நாட்டுப் போர் முடிவடைந்த கடந்த 16 ஆண்டுகளாக, இந்த ஒற்றையாட்சிக் கட்டமைப்பு, பாரம்பரியமாக தமிழர்கள் வாழ்ந்து வந்த பகுதிகளில் மக்கள் தொகை மாற்றங்கள், நில அபகரிப்புகள் மற்றும் தமிழ் அடையாளத்தின் சிதைவு ஆகியவற்றிற்கு தொடர்ந்து வழிவகுத்து வருவதாக வருத்தத்துடன் குறிப்பிட்டுள்ளார்.

### புதிய அரசியலமைப்பு...

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான, பாராளுமன்றத்தில் முழுப் பெரும்பான்மையைக் கொண்ட தற்போதைய இலங்கை அரசாங்கம், இனப் பிரச்சினைகளைத் தீர்க்கும் போர்வையில் ஒரு புதிய அரசியலமைப்பை அறிமுகப்படுத்தும் முயற்சிகளைத் துரிதப்படுத்தி வருகிறது என்று தெரிவித்துள்ள தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், இந்த முன்மொழியப்பட்ட கட்டமைப்பு மீண்டும் ஒரு ஒற்றையாட்சி "எக்கியராஜ்ய" (ஒற்றையாட்சி அரசு) மாதிரியை வலுப்படுத்துவதாகத் தெரிகிறது என்றும், இது அரசியல் சுயாட்சிக்கான தமிழர்களின் நியாயமான எண்ணங்களைப் புறக்கணித்து, அதன் மூலம் அவர்களை மேலும் ஓரங்கட்டி, அச்சுறுத்தும் வகையில் அமைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

### திம்பு கோட்பாடுகள்...

இந்தச் சூழலில், இந்திய அரசால் பூட்டானில் ஏற்பாடு செய்யப்பட்ட 1985 அமைதிப் பேச்சுவார்த்தைகளின் போது, தமிழ் பிரதிநிதிகளால் முன் வைக்கப்பட்ட திம்பு கோட்பாடுகளில் குறிப்பிடப்பட்ட கோட்பாடுகளையே, தற்போது பெறப்பட்டுள்ள கோரிக்கைகளில் வலியுறுத்தப்பட்டுள்ளதாகவும், அந்த வகையில், இலங்கைத் தமிழர்களுக்கான ஒரு தனித்துவமான தேசத்தை அங்கீகரித்தல் (தமிழர் தேசியம்); வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைத் தமிழ் மக்களின் பாரம்பரிய தாயகமாக ஏற்றுக் கொள்வது(தமிழர் தாயகம்); தமிழ் தேசத்திற்கான தன்னாட்சி உரிமையை உறுதிப்படுத்துதல் (தமிழர் தன்னாட்சி உரிமை); மற்றும் மலையகத் தமிழர்களுக்கான முழு குடியுரிமை உரிமைகள் உட்பட, அனைத்து குடிமக்களுக்கும் சமத்துவத்தையும், பாகுபாடின்மையையும் உறுதிசெய்யும் ஒரு கூட்டாட்சி ஆட்சி முறையை நிறுவுதல் போன்றவற்றையே இந்தக் கோட்பாடுகள் வலியுறுத்துகின்றன என்றும் தமிழ்நாடு முதல்வர் தனது கடிதத்தில் கோடிட்டுக் காட்டியுள்ளார்.

### மீண்டும் மோதல்களுக்கு....

இந்தக் கூறுகளை உள்ளடக்காமல் கொண்டுவரப்படும்எந்தவொரு புதிய அரசியலமைப்பும், அநீதி மற்றும் நிலையற்ற தன்மை தொடர வழிவகுக்கும் என்றும், இது மீண்டும் மோதல்களுக்கும், மனிதாபிமான நெருக்கடிகளுக்கும் வழிவகுக்கும் அபாயத்தை ஏற்படுத்தும் என்று சுட்டிக்காட்டியுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், 1987-ம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தம் உட்பட, வரலாற்று ரீதியாக இலங்கையுடன் கொண்டுள்ள நட்புறவின் காரணமாக இலங்கையில் அமைதி மற்றும் நீதிக்காக நீண்டகாலமாக அர்ப்பணிப்புடன் செயல்படவேண்டிய தார்மீகக் கடமையை இந்தியா கொண்டுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

### ஆழமான தாக்கத்தை...

இலங்கைத் தமிழர்களின் அவல நிலை, தமிழ்நாட்டில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது என்றும், இலட்சக்கணக்கான மக்கள், அங்குள்ளவர்களைத் தங்கள் உறவினர்களாகக் கருதுகின்றனர் என்றும் தெரிவித்துள்ள முதல்வர் , இலங்கையில் வாழும் தமிழர்களின் நிலைமையில் ஏற்படும் எந்தவொரு சரிவும் இருதரப்பு உறவுகளுக்கும், இரு நாடுகளுக்கிடையேயான உறுதிப்பாட்டிற்கும் பெரிய அளவில் தாக்கங்களை ஏற்படுத்தும் என்றும் கவலையோடு குறிப்பிட்டுள்ளார்.

### அதிகாரப் பரவலாக்கம்

இந்தச் சூழ்நிலையில், தமிழ் மக்களின் குறைகளை உண்மையாக நிவர்த்தி செய்யும் ஒரு அரசியலமைப்புச் செயல்முறையினைக் கொண்டுவருவதற்கு, இந்திய அரசாங்கம் இலங்கை அதிகாரிகளுடன் உயர்மட்ட அளவில் தூதரக நடவடிக்கைகள மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், குறிப்பாக, மாகாணங்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் செய்யும்; இனச் சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்கும்; மற்றும் பன்முகத்தன்மை, சமத்துவக் கோட்பாடுகளை நிலைநிறுத்தும் கூட்டாட்சி முறையை உருவாக்குவதற்கு இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டும் என்றும் தனது கடிதத்தில் வலியுறுத்தியுள்ளார்.

### உரிமைகளைப் பாதுகாக்க...

இத்தகைய அணுகுமுறை, பிராந்திய அமைதிக்கு உத்தரவாதம் அளிக்கும் இந்தியாவின் பங்கை மதிப்பது மட்டுமல்லாமல், கூட்டாட்சி மற்றும் மொழி மற்றும் இனச் சிறுபான்மையினரைப் பாதுகாப்பது குறித்த நமது அரசியலமைப்பு விழுமியங்களுடனும் ஒத்துப்போகும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். அந்த வகையில், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தலைமையின் கீழ், இலங்கைத் தமிழர்களின் உரிமைகளைப் பாதுகாக்க இந்தியா முனைப்பான நடவடிக்கைகளை எடுக்கும் என்றும், ஒரு நியாயமான மற்றும் நீடித்த தீர்வுக்கு அது பங்களிக்கும் என உறுதியாக தான் நம்புவதாகவும், தமிழ்நாடு முதல்வர் தான் எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

# யாரையும் பிரித்து பார்க்காத... (1-ம் பக்க தொடர்ச்சி)

தமிழ்நாட்டில் இருந்து சின்ன சின்ன வேலைகளை செய்ய நிறைய பேர் வெளிநாடு போவார்கள். அங்கு செட்டில் ஆவார்கள். ஆனால் இன்றைக்கு தமிழ்நாட்டில் இருந்து என்ஜினீயர்கள், டாக்டர்கள், ஆராய்ச்சியாளர்கள் பலர் வெளிநாடுகளுக்கு சென்று செட்டில் ஆகியிருக்கிறீர்கள்.

தொழிலாளியாக சென்ற காலத்தில் குடும்பத்தை இங்குவிட்டு விட்டு தனியாக அங்கு சென்றிருப்பீர்கள். இப்போது குடும்பத்தையும் அழைத்துச் சென்று அங்கேயே தங்குகிற அளவுக்கு பெரிய வேலைகளில் இருக்கிறீர்கள்.

இந்த வளர்ச்சி என்பது தானாக நடந்த வளர்ச்சி அல்ல. இந்த முன்னேற்றத்துக்கு பெயர்தான் திராவிட மாடல் இப்படி குடும்பத்தோடு வெளிநாட்டில் வசிக்கும் போதுதான் தமிழ்நாட்டில் இருந்து இன்னும் அதிகமான எதிர்பார்ப்புகள் நமக்குள் உருவாகும். அதை உணர்ந்துதான் நமது முதல்வர் அயலக தமிழர் நல வாரியத்தை முதன் முதலில் தொடங்கி வைத்தார். இதில் இன்று 32 ஆயிரம் பேர் உறுப்பினர்களாக இருக்கிறீர்கள்

இதன் மூலம் அயலக தமிழர்களுக்கு பல்வேறு முன்னெடுப்புகளை முதல்மைச்சர் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார். உக்ரைன், ஈரான், இஸ்ரேல் போன்ற நாடுகளில் போர் நடந்தபோது அங்கிருந்த தமிழர்களை பாதுகாப்பாக நம்முடைய துறைதான் மீட்டு வந்தது. வெளிநாடுகளில் வேலை செய்யும் தமிழர்களுக்கு ஏதாவது சிக்கல் என்றால் அதற்கு தீர்வுகாண இந்த துறை எல்லா உதவிகளையும் செய்து கொடுத்துள்ளது. தொழில் முதலீடுகளை ஈர்க்க முதல்வர் வெளிநாடுகளுக்கு போகும்போது அங்குள்ள தமிழர்களை தொடர்ந்து சந்தித்து வருகிறார். இங்கு தொழில் முதலீடு செய்ய வேண்டுகோள் வைக்கிறார்.

அதன் தொடர்ச்சியாக உங்களது முயற்சியின் காரணமாக இன்றைக்கு நம்பர்-1 பொருளாதார வளர்ச்சி அடைந்த மாநிலமாக தமிழ்நாடு உயர்ந்துள்ளது. அந்த சாதனையில் உங்களது பங்கு மிகப்பெரியது. நம் அரசின் சார்பில் 'உங்க கனவ சொல்லுங்க' என்ற புதிய திட்டத்தை முதல்வர் அறிவித்துள்ளார். மக்களின் கனவுகளை கேட்டு அறியும் இந்த நிகழ்ச்சி போல், அயலக தமிழர்களும் உங்க கனவுகளை இந்த வாரியத்தின் பொறுப்பாளர்களிடம், அமைச்சர் நாசரிடம் தெரியப்படுத்துங்கள். உங்களது தேவைகளுக்கும் கோரிக்கைகளுக்கும் ஏற்ற திட்டங்களை நமது முதல்வர் நிச்சயம் தீட்டி கொடுப்பார்கள்.

இவ்வாறு அவர் பேசினார்.



மதுரையில் வரும் 23-ம் தேதி தேசிய ஜனநாயக கூட்டணி கட்சி சார்பில் நடைபெறும் பொதுக்கூட்டம் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற உள்ளது. இந்த பொதுக் கூட்ட நிகழ்ச்சிக்கு அனுமதி கேட்டு மதுரை காவல் ஆணையாளர் அலுவலகத்தில் மனு அளிப்பதற்காக அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள் செல்லூர் கே.ராஜூ, ஆர்.பி.உதயகுமார் , வி.வி.ராஜன் செல்லப்பா எம்.எல்.ஏ. மற்றும் பா.ஜ.க. சார்பில் பேராசிரியர் ராம சீனிவாசன், மாநகர் மாவட்ட தலைவர் மாரிச்சக்கரவர்த்தி உள்ளிட்ட அ.தி.மு.க. நிர்வாகிகள் தே.ஜ.க. கூட்டணி நிர்வாகிகள் காவல்துறை அனுமதி வழங்கக்கோரி கடிதத்தை மாநகர காவல் ஆணையர் லோகநாதன் இடம் வழங்கினர்.